# ஆசிரமங்களும்,
# தற்கால வாழ்க்கையும்.


ஆக்கியோன்

டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் F. R. C. S.,

கிறிஸ்துகுல ஆசிரமம்

திருப்பத்தூர்—வட ஆற்காடு.




திருப்பத்தூர் விக்டோரியா அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1933.

விலை அணா 10.



கிறிஸ்துகுல ஆசிரம வைத்தியசாலை — பாட்டையோரத்திலுள்ள முன்சுவரோடு எடுத்தபடம்.

# ஆசிரமங்களும், தற்கால வாழ்க்கையும்.

## முகவுரை.

இந்த கிறிஸ்துகுல ஆசிரமத்தைப் பார்க்க வரும் பல நண்பர்கள் ஆசிரமங்களைக் குறித்து சில விஷயங்களை அறிய விரும்பி என்னிடத்தில் கேட்டுவருவதுண்டு. ஆசிரமம் என்றாலென்ன? இந்தியாவில் ஆசிரமங்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளுகிற பலநிலயங்கள் இருக்கின்றனவே, இவைகள் எந்தெந்த விஷயங்களில் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன? இந்திய ஆசிரமங்கள் அநுசரித்துவரும் ஏதாகிலும் ஜீவிய முறைமைகள், கிரமங்கள், உன்னத நோக்கங்கள் முதலியனவற்றில் அவையெல்லாவற்றிற்கும் பொதுவானவையுண்டா? பண்டைய ஆசிரமக்கொள்கைகளை தற்கால வாழ்க்கையோடு இணைத்துக் கையாடமுயல்வது சரியா? இவ்வாறு சிலர் ஆசிரம அபிமானத்துடனும் ஏனையோர் ஆசிரமங்களைக்குறித்து சந்தேகத்துடனும் பல கேள்விகள் கேட்கிறார்கள். இந்த ஆசிரமத்திற்கு வந்து போன ஒருவர் ஆசிரமங்களின் காலம் கடந்து போய்விட்டதென்றும், இந்த இருபதாம் நூற்றாண்டில் ஆசிரமங்களை நிறுவுவது வீணென்பது போலவும் எழுதியிருக்கிறார்!

இக்கேள்விகளுக்கெல்லாம் தகுந்த விடையளிக்கவாவது, கேட்பவர்களுடைய மனதிற்கு திருப்தியுண்டாகத் தக்கபடி சகலத்தையும் விவரித்துத் தெளிவாய் எடுத்துரைக்கவாவது என்னைத்தகுதியுள்ளவனாக நான் எண்ணிக் கொள்ளவில்லை. இதற்குப் போதுமான ஆராய்ச்சியறிவும் எனக்கு மிகக்குறைவேயென்பதை உணருகிறேன். பாத்திர அபாத்திரங்களை மிதமிஞ்சி சிந்தையில்கொண்டு, கடவுளுடைய உன்னத அழைப்பையும், எண்ணிறந்த கிருபைகளையும் விவரிக்கப் பதுங்கி ஒளித்துக்கொள்வது, மெய்த்தாழ்மையாயிராது. இதினால் ஆசிரமங்களைக் குறித்து நான் வாசித்துக்கற்றவைகளையும், பிரயாணஞ்செய்து மற்ற ஆசிரமங்களிற்குப்போய்த் தங்கி பார்த்தவைகளையும், இந்த ஆசிரமத்திலே அநுபவத்தினாலறிந்தவைகளையும், என் அற்ப புத்திக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டியபடி இந்த நூலில் எழுதத் துணிந்தேன். அறிவிலும் அநுபவத்திலும் முதிர்ந்த பெரியோர் இதில் கண்ட குற்றம் குறைகளை மன்னித்து எனக்கு எடுத்துக்காட்டினால் நன்றியுள்ளவனாயிருப்பேன்.

பண்டைய ஆசிரமவாசிகள் கையாடினவைகளை உள்ளபடியே ஆரம்பக் குறிப்புகளாக முதலில் விவரித்திருக்கிறேன். அவற்றோடேதானே தொடர்ச்சியாக இந்தப்பூர்வீக அநுசரிப்புகளை எவ்வாறு தற்கால வாழ்க்கையிலும் கலந்து கையாடி, சமுதாய நன்மைக்கும் தற்கால வாழ்க்கைக்கும் ஏற்க சரிப்படுத்திப் பயன்படச்செய்யலாமென்றும் காட்ட முயன்றிருக்கிறேன். பூர்வீக ஆசிரமங்கள் "ஆத்மீக"

விஷயங்களை "லௌஹீக" விஷயங்களை விட்டு ஒருவாறு பிரித்து, இவ்விரண்டிற்கும் சம்பந்தமொன்றுமில்லாதது போல் பாவித்து வாழ்ந்தன. ஆனால் தற்கால ஆசிரமங்களோ பூர்வீக ஆசிமங்களின் உன்னத கொள்கைகள் தற்கால வாழ்க்கைக்கு மிகுந்த அநுகூலமானவைகளேயென்று செயற்கையில் தெளிவாக்குகின்றன. ஓர் பக்தன் வாழ்க்கையில், "ஆத்மீகம்" "லௌஹீகம்" என்று ஒன்றோடொன்று கலவாமல் இருபாகங்களிருக்க முடியாது. இப்பூலோகத்திலிருக்கும்போதே, அரசியல் முதலிய சமுதாயத்தொண்டிலும், நமது அயலகத்தாருக்கும் நமக்கும் ஏற்படும் அநுதின சாதாரண சம்பந்தங்களிலும், புசிப்பது குடிப்பது உழைப்பது முதலிய நமது இயற்கை ஜீவியத்திலுங்கூட, ஆசிரமங்களின் உன்னத போதகங்களை கையாட வேண்டும் என்று தற்கால ஆசிரமங்கள் வெகுதெளிவாய்க் காட்டி வருகின்றன. இப்படி கடவுளுடைய ராஜ்யத்தை இப்பூலோக வாழ்க்கையிலேயே நிலை நிறுத்துவதே தற்கால ஆசிரமங்களின் பெரும் வாஞ்சை.

நான் தமிழில் வித்வானல்ல. என் கலாசாலைக் கல்வி ஆங்கிலபாஷைக்கல்வியே. மேலும் என் சாதாரணத் தொழில் வைத்தியவேலை. கிராம முன்னேற்ற வேலையிலும் சற்று ஈடுபட்டு வருகிறேன். இப்படி பலவேலைகள் மத்தியில் புத்தகமெழுதுவது எளிதான காரியமல்ல எனினும் கிராம ஜனங்களுக்குள் கடந்த 12 வருஷங்களாய் வேலை பார்த்ததின் பயனாய், பொதுஜன அறிவு பரவத் தாய்

பாஷையில் எழுதப்பட்ட நூற்கள் மிக அவசியமென்பதை உணருகிறேன். நமக்குள் ஆங்கில உயர்கல்வி கற்றவர்கள் தாய்பாஷையில் எழுதப்பட்டவைகளை வாசிக்கவும் பிரியங் கொள்கிறதில்லை. தாங்களறிந்தவைகளைத் தாய் பாஷையில் எழுதி பாமர மக்கள் அறிவில் விர்த்தியடையச் செய்ய முயற்சிசெய்கிறவர்களும் வெகு சொற்பம். ஆங்கிலத்தில் எழுதத்தான் இவர்களுக்கு பேர் அவா! அப்போதுதான் புத்தகங்களும் விலையாகும். தங்கள் பெயர்களும் எங்குந் துலங்கிவிளங்கும்! பணம் சம்பாதிப்பதையும் சுயமேன் மையையும் நாடாமல், பொதுஜனங்களின் நன்மையையே கருதி, நூற்களை தாய்பாஷையில் எழுதுபவர்களே தற் சமயத்தில் மெய்யான தேச பக்தர் என்பது என் துணிபு. இவர்களே தலைமுறை தலைமுறையாக இந்திய மக்களின் அன்பிற்கும் வாழ்த்துதலுக்கும் உரியவராவார்.

இப்புத்தகம் எழுதும்போதும் அச்சிடும்போதும் எனக்கு உதவியாயிருந்த இந்த ஆசிரம உடன்தொண்டருக்கும், விசேஷமாக ஞானனந்தர் சகோதரருக்கும், நான் நன்றி பாராட்டுகிறேன். இந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களுக்கு நானே தனியே பொறுப்பாளி.

கிறிஸ்துகுல ஆசிரமம்,
திருப்பத்தூர், வட ஆற்காடு.
பெரிய வெள்ளிக்கிழமை
சித்திரைமீ உ௨
14—4—1933.

சவரிராயன் ஏசுதாசன்.

# ஆசிரமங்களும், தற்கால வாழ்க்கையும்.

## பொருளடக்கம்.

### முதல் பாகம்.

| | | பக்கம். |
|---|---|---|
| | ஆசிரமம். | 1 |
| 1. | இருஷி அல்லது ஜீவன் முக்தன் | 3 |
| 2. | பிரமசரியம் | 11 |
| 3. | குருக்குலம் | 26 |
| 4. | துறவறம் | 33 |
| 5. | பக்தி | 43 |
| 6. | அஹிம்சை | 76 |

### இரண்டாம் பாகம்.

இந்தியாவில் தற்காலத்திலுள்ள சில ஆசிரமங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சாந்திநிகேதனம் ஆசிரமம் | 87 |
| 2. | சத்தியாகிரக ஆசிரமம் | 93 |
| 3. | கிறிஸ்து சேவசங்க ஆசிரமம் | 124 |
| 4. | கிறிஸ்துகுல ஆசிரமம் | 128 |

# ஆசிரமம்.

ஆசிரமம் என்னும் பெயர் எவரும் விரும்பத்தக்க ஒன்ருயிருப்பதால் தற்காலத்தில் நிறுவப்படும் பலவித நிலையங்களுக்குப் பெரும்பான்மையோர் அதனதன் பெயர் கட்கிறுதியில் ஆசிரமமென்னும் இப்பதத்தை யிணைத்துப் புனிதப்படுத்த முயல்கின்றனர். இப்படி ஆழ்ந்த யோசனை யின்றிச் செய்வதில் பெரும்பான்மையும் தீமை விளையுமென்று அஞ்சுகிறேன். பண்டைப் பெரியார்கள் இப்பதத்தை எவ்வளவு உயர்ந்த நோக்கத்தில் உபயோகித்தனரென்பதை அறியாமல் நாம் உபயோகிப்பதால் நாமே நம்மை வஞ்சித்துக் கொள்வதுமன்றி பண்டைப் பெரியாரின் அடிப்படையான நோக்கத்தை விட்டு நாம் விலகிப் போகவும் கூடும். நமது அறியாமையினுலோ அல்லது ஆராய்ச்சியின்மையினுலோ எப்படிச் செய்தாலும் தீமை தீமைதான். எனவே இக் காரியத்தில் ஒரு கிறிஸ்தவன் மிகுந்த எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். நாம் ஒன்றைத் தெளிவாயறிந்துகொள் ளாமல் தப்பான முறையிற் கையாளும்போது முதலாவதாக இல்லாத ஒன்றை இருப்பதுபோலக் காட்டப் பார்ப்பதால் நம்மை நாமே வஞ்சித்துக் கொள்கிருேம். இரண்டாவதாக நம் நாட்டுப் பண்டை பெரியாரின் நுண்ணிய கருத்துக்களைக் கெடுத்து மதிப்பற்றதாக்குகிருேம். மூன்ருவதாக நம்மொடு பழகி நம்மையறிகிற இந்துக்களுக்கு மனவருத்தத்தையும் உண்டுபண்ணுகிருேம்.

மேல் நாட்டுச் சந்நியாச சங்கங்களுக்கும் கீழ் நாட்டு ஆசிரமங்களுக்கும் மிக்க வேற்றுமையுண்டு. மேல்நாட்டுச் சந்நியாச சங்கங்கள் அல்லது மடங்கள் யாவும் திருச்சபைக் கட்டுக்குட்பட்டவைகள். கீழ் நாட்டு ஆசிரமங்கள் இத் தகைய கட்டுப்பாடுகட்குட்பட்டவைகளல்ல. அன்றியும் ஆசிரமமென்பது பணத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்படும் ஒரு நிலையமுமல்ல. சில வருடங்களுக்கு முன் ஒரு வட இந்திய தனவான் தன் நாட்டில் யாராவது ஆசிரமம் ஒன்று தொடங்கினால் 20,000 ரூபாய் அதற்குக் கொடுத்து உதவுவதாக அறிவித்தார். இதையறிந்த நான் அவரிடம், உங்கள் பணமல்ல நீங்களே அதைத் தொடங்க வேண்டும் என்று கூறினேன். பணத்தால் ஆசிரமமுண்டாக்க நினைப்பது யந்திரங்களைக் கொண்டு கவிகளியற்றத் தொடங்குவது போலாகும்! எனவே நம்முன்னோர்களது கருத்தின்படி ஆசிரமத்திற்கவசியமானவை: 1. இருஷி அல்லது ஜீவன் முத்தன், 2. பிரமசரியம், 3. குருகுலம், 4. துறவு, 5. பக்தி, 6. அஹிம்சை அல்லது ஜீவகாருண்ணியம்.

# 1. இருஷி அல்லது ஜீவன் முத்தன்.

இருஷி அல்லது ஜீவன் முத்தன் இருக்கிற இடத்தைத் தான் ஆசிரமம் என்று சொல்ல முடியும். இப்படிச் சொல்லுவதால் ஜீவன் முத்தர்கள் ஆசிரமங்களில் மாத்திரந் தான் இருப்பார்களென்று கூறுகிறதில்லை. எந்த நிலையிலும் ஜீவன் முத்தர் உண்டு. ஆயினும் இவர்கள் ஆசிரமம் என்ற பெயர் படைத்த நிலையங்களுக்கு இன்றியமையாத அங்கங்களாவர். ஜீவன் முத்தனது இலக்ஷணத்தைப் பற்றிச் சற்று ஆராய்வோம். முத்தி யென்பது வீடு எனப்படும். இப்பதத்தைத் தமிழ் மக்களாகிய நாம் சாதாரணமாகக் குடியிருக்கும் கட்டிடத்துக்கு உபயோகிக்கிறோம். அன்றியும் இப்பதத்துக்கு விடுதலை அல்லது மோக்ஷம் என்ற உயர்ந்த மூல அருத்தமும் உண்டு. "அறம், பொருள், இன்பம், வீடு" என்பதிலுள்ள "வீடு" இப்பொருளுடையதே. ஒரு ஆன்மா மண், பெண், பொன் என்ற மூவாசையினின்று விடுபடுவதையே நம் பண்டைப் பெரியார் வீடென்றனர். இவ்வாறு ஆசைக் கட்டையறுத்து விடுதலை பெற்ற ஆன்மா பரமான்மாவுடன் இரண்டறக்கலந்து கொள்ளுகிறதென்பது வேதாந்திகளின் துணிபு. சித்தாந்திகளோ இரண்டறக் கலத்தலை மறுத்து கடவுளின் சமுகத்தில் ஆன்மா நெருங்கிச் சேரும் இன்பம் நுகர்வதையடையுமென்பார்கள். சிறைப்படுத்திக் கொண்டிருக்கும் ஆசைக்கட்டுக்களை அறுத்து ஆன்ம விடுதலையடைவதே முத்தியென்பது.

சில வருடங்களுக்கு முன் தென்னாட்டு மலைக்குகை யொன்றில் ஒரு சந்நியாசியைச் சந்தித்தேன். அவர் சிவ ஞானபோதத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அதன் கருத்து என்னென்று நான் வினவியபோது; வெள்ளம் பெருக்கெடுத்தோடும் ஒரு ஆற்றில் ஒரு விறகுக்கட்டை விட்டுவிட்டால் அது எப்படிப் பல இடங்களிலும் சிக்கிச் சிக்கி விடுபட்டு இறுதியாகக் கடலையடைகிறதோ அப்படியே ஆன்மாவும் இம்மையின் வாழ்க்கையிலே சிக்கிச்சிக்கி விடுபட்டு இறுதியாகக் கடவுளையடையும் என்றார். எனவே சரீரத்திற் இருக்கும்போதே ஆன்ம விடுதலைபெற்று வாழ்வதே ஜீவன் முக்தி எனப்படும். இத்தகைய கடவுட் பிரசன்னத்தின் இன்ப வாழ்க்கை பரி. பவுலப்போஸ்தலனுக்குக் கிடைத்தது போல் பக்தர்களுக்கு இம்மையிலேயே கிடைப்பதுண்டு.

> "கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனையறிவேன்; அவன் பதினாலுவருஷங்களுக்கு முன் மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ அதையறியேன்; கடவுள் அறிவார். அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டான்.— அவன் சரீரத்திலிருந்தானோ சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ அதை அறியேன், கடவுள் அறிவார்.— மனுஷர் பேசக்கூடாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை அங்கே கேட்டானென்பதையும் அறிவேன்". (II. கொரி 12: 2—4)

தான் மூன்றும் வானம் மட்டும் எடுக்கப்பட்டு பாதீசுக்குட் புகுந்து அவ்விடத்து நன்மைகளைக் கண்டு அனுபவித்ததாக அவர் கூறுகிருர்.

> "அவருடைய மகத்துவத்தைக் கண்ணுரக் கண்டவர்களாகவே நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என் நேச குமாரன், இவரில் *பிரியமாயிருக்கிறேன் என்ற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்குண்டாகவே பிதாவாகிய கடவுளால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது அத்திருமலையில் நாங்களும் அவரோடிருந்து வானத்தினின்று வந்த அந்தச்சத்தத்தைக் கேட்டோம்". (II. பேது 1 : 16—18)

எம்பெருமானுடன் மலை மீதிருக்கும்போது தான் கண்ட காட்சியையும் வானத்திற் கேட்ட வார்த்தையும் பற்றிப் பரி· பேதுரு அப்போஸ்தலன் தெற்றென இங்கு விளக்கிக் கூறுகிருர். இப்படியே பக்தர்கள் மாமிச சரீரத்திலே பிழைத்தும் சரீரக்குடிலை மறந்து ஐம்புலன்களுக்குச் செத்துக் கடவுள் வசத்தாய்க் கடவுளின் சமுகத்திற் பேரின்பம் நுகர்ந்து வருகின்றனர். இப்பாக்கியமான நேரங்களில் கடவுளின் பிரசன்னத்தையன்றி வேறொன்றையும் உணருகிறதில்லை. இதுவே தன்வயமிழந்து மெய் மறத்தலெனப்படும். எந்த உலகத் தொல்லையினுலும் கடவுளை விட்டுப் பிரிக்க முடியாத சாந்தி நிலையென்பதும் இதுதான். இதைச் சமாதி நிலை

---

* பிரியங்கொண்டேன் என்னும் திருப்பலாம்.

யென்றும் கூறினர். சாது சுந்தரசிங், சகோதரன் லாரன்ஸ் முதலிய பக்தரைப்போல் மாறாத கடவுளின் பிரசன்னத்தை யுணர்ந்து அதிலேயே நிலைத்து இவ்வுலக காரியங்களிலும் கடவுளுக்கேற்கும் முறையில் ஈடுபட்டிருப்பதே ஜீவன்முத்தி. (சாது சுந்தரசிங் அடைந்து அனுபவித்த பரவச இன்பம் இப்படிப்பட்டதே).

சாதாரணமாகப் புலனுணர்ச்சித்தன்மையில் மக்களுக்கும் மிருகங்களுக்கும் ஒருவித ஒற்றுமையுண்டு. தொடுதல், பார்த்தல், கேட்டல், முகர்தல், ருசித்தல் ஆகிய ஐம்புலன்கள் இருதிணைக்கும் பொது. ஜீவன் முத்தனே இதற்கு மாறான தன்மையுள்ளவன். மக்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவாயுள்ள புலனுணர்ச்சியைக் கடந்து கடவுளினிடமிருந்து வரும் இன்பங்களை ஆர்வத்துடன் பருகும் ஆத்மீக நிலையிலே பிழைக்கிறான். பாவத்துக்குச்செத்து நீதிக்குப் பிழைப்பது என்றதன் உட்பொருள் இதுதான். நாடோடிய உலக சம்பவங்களுக்குப் புலனுணர்ச்சி பதிலளிக்கின்றன. ஜீவன் முத்தன் இவற்றைக் கடந்து கடவுளையே நோக்கிக் கொண்டிருப்பதால் கடவுளுக்கே பதிலளிக்கும் ஆன்ம நிலையில் இருக்கிறான். கடவுள் ஒருவரே ஜீவன் முந்தனுக்கு பிரத்தியக்ஷமான அனுதின திட அநுபவம் — மற்றவை அநிச்சயம்.

> "ஏனெனில் மாம்சத்துக்கிசைந்திருக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவிக்கிசைந்திருக்கிறவர்களோ ஆவிக்குரியவைகளைச்

சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படி யென்றால், மாம்சசிந்தை கடவுளுக்கு விரோதமான பகை; அது கடவுளின் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படிய முடியாமலும் இருக் கிறது. மாம்சத்துக்குள்ளானவர்கள் கடவுளைப் பிரியப்படுத்த முடியாது. நீங்களோ, கடவுளின் ஆவி உங்களில் வாசமாயிருந்தால் மாம்சத்துக்குள் ளானவர்களல்ல, ஆவிக்குள்ளானவர்களே. ஒருவன் கிறிஸ்துவின் ஆவியில்லாதவனாயிருந்தால் அவன் அவருடையவனல்ல. மேலும், கிறிஸ்து உங்களி லிருந்தால் சரீரம் பாவத்தினிமித்தம் மரித்த தாயிருக்கும், ஆவியோ நீதியினிமித்தம் ஜீவனாயிருக் கும். அன்றியும், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரின் ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்து இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின வர் உங்களில் வாசமாயிருக்கிற தமது ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்''.

(ரோமர் 8, 5—11)

சரீரத்தில் பிழைப்பவர்க்கு இவ்வித மாறாத திவ்விய பிரசன்ன அநுபவம் கூடிவருமோவென்று சிலர் ஆக்ஷே பிக்கலாம். மனுஷரால் கூடாதது கடவுளின் வல்லமையால் கூடிவரும்.

''என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்தில் என்வல்லமை பூரணமாய் விளங்கும்''.

(II கொரி. 12, 9).

அற்புத ஜீவகங்கை யாடுவரமாராவார்
பொற்புறு ராஜ சேவை பொருந்துவர் புனிதராவார்
கற்பக நிழலிற்றங்கிக் களிப்பர் வான்கணங்களாவார்
தற்பரன்றொழும்பு செய்வர் தகைபெறு முத்தராவார்.

1

ஜீவன்முத் தருக்கு நல்குந் திவ்விய சிந்தை ஞானம்
மேவருங் குணங்க ளோர்க்க விசுவாசம் விரதஞ் சீலந்
தாவருந் நலங்க ளெல்லாந் தந்தருள் புரியுந் தூய
தேவனல் லாவி யுள்ளந் திகழ்தர ஜெபித்தல் வேண்டும்.

2

கிறிஸ்துவினிடமே கற்றுக் கேவல நிலையை நாடிக்
கிறிஸ்துவின் சிந்தை தன்னுட் கிடைத்திட ஜெபித்து நாளுங்
கிறிஸ்துவின் சிலுவை தாங்கிக் கிட்டிப்பின் றொடர்ந்து [சென்று
கிறிஸ்துவுக் கன்பிற்செய்யுங் கிரியையைப் படைத்தல் [வேண்டும்.

3

அந்தரங் கத்திற் பாவ மருவருப் பாதல் வேண்டும்
புந்தியிற் புனித மாகிப் புதுப்பிறப் படைதல் வேண்டும்
சொந்தநீ தியினு ரோபந் துறந்துமெய் விசுவா சத்தால்
சந்ததங் கிறிஸ்து யேசு நீதியைத் தழுவல் வேண்டும்.

கிருஷ்ண பிள்ளை.

மேற்கூறியவற்றையெல்லாம் நான் இவ்வளவு விரிவாக விவரித்தது ஏன் ? முற்றும் கடவுளுக்கு தம்மைப் பிரதிஷ்டை செய்து திவ்விய ஜீவனடைந்த ஓர் பக்தன் அல்லது பக்தரால் தான் ஆசிரமம் ஏற்படுமென்ற சத்தியத்தைத் தெளிவாகக் காட்டவே. எனினும் தற்கால ஆசிரமவாசிகள் இவ்வித பரிபூரண ஜீவன் முத்தரென்று நான் சொல்லத்துணிய மாட்டேன். சத்தியத்திற்கு அது விரோதமாகுமே! ஆனால் பரிபூரண ஜீவனை தமது மக்கள் அடையவேண்டுமென்பதே கடவுளின் சித்தம். இதற்கு இசைய கடவுளின் பரம அழைப்பின் "பந்தயப்பொருளும், இலக்கும், முற்றுந்தேறுதலும்" ஆகிய பரிபூரண ஜீவனைச்சேரத்தொடர்ந்து முயற்சிசெய்பவர் தேறின பரிசுத்தவான்களென்று வேதவசனம் கூறுகிறது.

> "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றுந் தேறினவனானேனென்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப்பிடிக்கப் பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளத்தொடருகிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் இன்னும் எண்ணுகிறதில்லை ; ஒன்று செய்கிறேன் : பின்னானவைகளை மறந்து முன்னானவைகளைப் பார்த்துத் தாவியோடிக் கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுள் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளைப்பெறுவதற்கு இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகவே நம்மில் தேறினவர்கள் யாவருக்கும் இதே சிந்தையே இருப்பதாக ; நீங்கள் ஒரு காரியத்தில் வேறே சிந்தையாயிருந்தால் அதையும்

கடவுள் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எவ்வளவு முன்னேறி யிருந்தாலும் அதே ஒழுங்காய் நடப்போமாக." (பிலி 3 : 12—16)

இதனால் தவறக்கூடியவர்களாகிய நாம் அதைரியப்பட அவசியமில்லை.

"நற்கிரியை ஆரம்பித்தவர் கிறிஸ்துஇயேசுவின் நாள் மட்டாக அதைமுடிய நடத்துவார். (பிலி 1 : 6)

உத்தம மனதுடன் நம்மை அவருக்கு முழுவதும் தத்தம் செய்து கீழ்படிந்து நடந்தால் அவர் நம்மூலமாய் மகத்தான காரியங்களை நிறைவேற்றுவார்.

"இடறிவிழாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமை யுள்ள சந்நிதானத்திலே மாசற்றவர்களும் மகிழ்ச்சி யுள்ளவர்களுமாய் உங்களை நிறுத்தவும் வல்லமை யுள்ளவருக்கு, ஏக கடவுளும் நமது இரட்சகரு மாகிய அவருக்கே, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் யுகாரம்பத்தின் முன்னும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங் களிலும் மகிமையையும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இருப்பதாக; ஆமேன்."

(யூதா. 1: 24—25).

# 2. பிரமசரியம்.

மேற்கூறிய ஜீவன்முக்தன் கிருகஸ்தனாகவும் விவாகமில்லாத சந்நியாசியாகவும் எந்த நிலைமையிலும் இருக்கக்கூடும். கிருகஸ்தராயிருக்கு மொருவர் ஆசிரம வாசியானால் அந்த ஜீவன்முக்தன் குரு நிலையிலும் மனைவியார் மற்ற சிஷ்யருடன் தான் சிஷ்யநிலையிலும் இருந்து ஆசிரமத்தை நடத்துவர். "இருதயத்தில் பரிசுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்" என்ற ஆண்டவர் வாக்குக்கிணங்க யாவரும் உள்ளத்தூய்மை தன்னடக்கம் ஆகிய நற்காரியங்களைக் கைக்கொண்டொழுகினர். சிஷ்யராயிருந்தவர்களிற் பெரும்பான்மையோர் ஆத்மவளர்ச்சிக்கனுகூலமானதும், வாழ்க்கையின் நோக்கத்தைத் தெளிந்துணர்ந்து தீர்மானிக்கக் கூடியதும், கடவுளின்மேல் தங்கள் ஜீவியத்திற்கு அஸ்திவாரம் போடவேண்டியதுமான நற்பருவமாகிய இளம் பருவத்தினராகவே இருந்தனர்.

நான் பிரமசரியத்தைப் பற்றிக் கூறுமுன் கிருகஸ்த நிலையைப்பற்றிச் சற்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏனெனில், பிரமசரியம் சந்நியாசம் என்னும் நிலையிலிருக்கும் சிலர் இல்லறத்தை இழிவுபடுத்திக் கூறி தங்கள் நிலைமையை அளவுகடந்து உயர்த்த முயலுகின்றனர். இந்த மூடத்தனமான வாதாட்டத்தை நான் ஆதரிக்கமாட்டேன். இதில்

இரண்டு தவறுதலுண்டு. 1. முக்கியமில்லாததை முக்கியப் படுத்தி வாதாடுவது. 2. கடவுளின் அழைப்புகளை எது மேல் எது கீழ் என்று ஒப்பிட்டுப்பார்த்து ஒன்றை உயர்த்தி ஒன்றைத்தாழ்த்துவது. இது பெருங்குற்றம்.

சில வருடங்களுக்குமுன் ஒரு போதகர் கலியாணத்தைக்குறித்துச் செய்த ஒரு பிரசங்கம் என் நினைவிலிருக்கிறது: இதன் மேன்மையை வற்புறுத்திக்கூறும்போது பிரமசரியம் இயற்கையென்றும் விவாகம் கடவுளின் அழைப்பென்றும் விளக்கிக் காட்டினார். அன்றியும் தன்னிடம் விவாகத்தை உறுதிப்படுத்த வரும் மண மக்களிடம் முதலாவது கடவுளே அவர்களை அந்த நிலைமைக்கு அழைத்தாரென்ற நிச்சயமிருக்கிறதா என்று இருவரையும் பொதுப்படக் கேட்பதோடு, இரண்டாவதாக ஒருவரையொருவர் மணம் புரிந்துக்கொள்ள கடவுளின் அழைப்புண்டா என்று தனித் தனியாகக் கேட்டும் உறுதிப்படுத்துவதாகக் கூறினார். இயற்கை வாழ்க்கை முறையில் எதையும் எம்பெருமான் கிறிஸ்து அசுத்தமென்று தள்ளினதில்லை. இதுதான் ஆத்மீகமென்றும் இதுதான் லௌகீகமென்றும் பிரிக்கமுடியாது. ஆகவே நமது வாழ்க்கை முழுவதையும் ஆண்டவருக்குப் பிரதிஷ்டை செய்து விடுவதே அவருக்குச் செய்யும் ஆத்ம ஆராதனை. வாயாற் பேசுவதற்குக்கூட அச்சப்படும் கலவியென்பது கடவுளின் ராஜ்யத்துக்கு ஒரு அங்கத்தை உற்பத்தி செய்யக் காரணமாயிருப்பதால் அது கடவுளின் பார்வையில் பரிசுத்தமானதென்றே சொல்ல வேண்டும்.

மனுஷர் இதை மறந்து இச்சைக்குட்பட்டு மிருகத் தன்மையை யடைவதால் கடவுளின் பரிசுத்த நோக்கத்தை மாற்றவாவது இல்லற வாழ்க்கையை இழிவுபடுத்திக் கூறவாவது முடியாது. இது கடவுளாலேயே உண்டானது.

> "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப்படாததாயும் இருக்கக்கடவது".
> (எபி. 13—4)

என்று பரி. பவுலப்போஸ்தலனும் கூறியுள்ளார். என்றாலும் இல்லறவாசி தன் மனைவியின் பலவீனத்தின் நிமித்தமும், தான் காப்பாற்றமுடியாத நிலையில் பிள்ளைகளைப் பெறாதிருக்க வேண்டியதன் நிமித்தமும், இச்சைக்கடலிலாழ்ந்து தன் ஆத்தும வளர்ச்சி குன்றாது வளர்ச்சி பெறவேண்டியதன் நிமித்தமும், பிரமசரிய விரதத்தைக் கையாடுவது அவசியம். இதைக் கையாடுவதை விட்டு கர்ப்பத்தடைக்கருவியையுப யோகிப்பது கடவுளுக்கு விரோதமான பெரும்பாதகமாகும்.

இல்லறவாழ்க்கை எவரும் இகழக்கூடாத தூய வாழ்க்கையென்பதை மேலே வற்புறுத்தியதால் பூரண பிரம சரிய நிலையை நான் புறக்கணிப்பதாக ஒருவரும் எண்ண வேண்டாம். உலகத்தின் சகல பாகங்களிலுமுள்ள சகல மக்களிலும் விவாகத்திற்குட்படாத பூரண பிரமசரிய வாழ்க் கைக்கு கடவுள் மக்களை அழைக்கிறாரென்பது உண்மை.

> "தாயின் வயிற்றிலிருந்து அண்ணகராய்ப் பிறந்தவர் களுமுண்டு; மனுஷரால் அண்ணகராக்கப்பட்ட வர்களுமுண்டு; பரலோகராஜ்யத்தினிமித்தம்

> தங்களை அண்ணகராக்கிக் கொண்டவர்களுமுண்டு இதை அங்கீகரிக்க வல்லவன் அங்கீகரிக்கக் கடவன் என்றார் ” (மத் 19 : 12)

ஆண்டவர் கூறுகிற இவ்விஷயத்தை அவரது சாதனையிலும் காண்கிறோம். நம் பெருமான் மனுஷீகத்திலிருந்தபோது நித்திய பிரமசாரியாயிருந்ததை நாமறிவோமே!

> “ நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் ஆண்டவருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று ஆண்டவருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். (I கொரி 7 : 32)

பரி பவுலப்போஸ்தலனும் விவாகமில்லாமலிருப்பதை முக்கியப் படுத்துகிறார்.

இல்லறத்தை மேற்கொண்டொழுகுவோர் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய இன்றியமையாத கடமைகளுண்டு. இந்தக் கடமைகளை பிள்ளைகளுக்குச் செய்யாதிருப்பது பெருந் தவறுதலாகும்; இல்லறவாசிகள் தங்கள் பிள்ளைகளை கண்ணும் கருத்துமாக சன்மார்க்க வழியில் வளர்த்துவிட்டால், பின்காலத்தில் பிள்ளைகள் பெற்றோருக்கு மகிமையுண்டாக்கும் கிரீடம்போல் துலங்குவார்கள். எனவே

> “ தந்தை மகற்காற்று நன்றி யவையத்து,
> முந்தி யிருப்பச் செயல்,” என்றும்,
> “ மகன் தந்தைக் காற்று முதவி யிவன் தந்தை
> யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்,”
>
> என்றும்,


திருவள்ளுவர் கூறியபடி பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் கடமைகளால் பிள்ளைகள் மேன்பாடடைந்து பெற்றோரை மகிமைப் படுத்தவேண்டியது மிகவும் அவசியம். பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமையைத் தாங்கள் செய்யமுடியாத நிலைமையில் பிள்ளைகளொரு தேசத்திலும் தாங்களொரு தேசத்திலும் பிரிந்திருக்கிற மிஷனெரிகள் இவ்விஷயத்தை யெண்ணி அடையும் மனவேதனையை நான் அறிவேன்.

இல்லற வாழ்க்கையின் கடமை இவ்வாறிருக்க உலகத்தில் தலைசிறந்து விளங்கின பெரும் பெரும் பக்தர்களின் பிள்ளைகள் கெட்டழிந்தும் பயனற்றும் போனதை உற்று நோக்கில் பயங்கரமாகவே யிருக்கிறது. தன்னை மறந்து மற்றவர்களுக்குத் தொண்டாற்றிய ஒரு அம்மாளவர்களின் மகன் தன் உடன் மாணவனிடம் "தாயின் அன்பைப்பற்றி பெருமையாகப் பேசுகிறார்கள். எனக்கோ அதைப்பற்றி ஒன்றுந் தெரியாது" என்று சொன்னாராம். மற்றொரு அம்மாளவர்கள் இப்படியே தன்னைமறந்து பிறருக்காகத் தொண்டாற்றினர். இவர்கள் மற்றவர்களுக்குள் தொண்டாற்றி மனைக்குத் திரும்பும்பொழுது தன் பிள்ளைகளுக்கு நூதனமான பொருட்களை வாங்கிக்கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். ஒரு நாள் தான் ஊருக்கு போகும்போது பிள்ளையைப்பார்த்து "நான் உனக்கு நல்ல பொருட்கள் வாங்கிக்கொண்டு வருவேன்" என்றார்களாம். உடனே பிள்ளை தாயைப்பார்த்து "எனக்கு வேறொன்றும் வேண்டாம்

நீங்கள்தான் வேண்டும்'' என்றதாம். இந்தப்பிள்ளைக்குத் தாய் தன்னுடன் இருக்க எவ்வளவு வாஞ்சையிருந்த தென்பதை இங்கே காண்கிறோம். மற்றவர்கள் நிமித்தம் தங்கள் பிள்ளைகளை மறப்பதால் பிள்ளைகள் கெட்டுப்போக நேரிடுகிறதோ! இதுவும் ஒருகாரணமாயிருக்கலாம்.

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் பராமரியாமற் போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவன், அவிசுவாசியிலுங் கெட்டவன்''. (I தீமோத்தேயு 5—8)

பிரமசரிய வாழ்க்கையைப்பற்றித் தெளிவாய் ஆராய்ந் தறிந்த ஒரு பக்தன் கூறுவதாவது: "பிரமசரியத்தையும் அதனால்விளையும் பலனையுங் குறித்து ஆழமாக ஆராய்ந்தேன். ஆராய்ச்சிகாரணமாக உண்டான உறுதிப்பாடான எண்ணங் கள் என்னுள்ளத்தே வேரூன்றின. ஒருவன் தன் முழு வல்லமையோடும் பிறருக்குத் தொண்டாற்ற விரும்பினால் பிரமசரிய விரதம் அவசியமெனக் கண்டேன். மாமிசத்தின் பிரகாரமும் ஆவியின் பிரகாரமாகவும் நான் ஒரே சமயத்தில் பிழைப்பது முடியாதகாரிய மென்பதையும் கண்டறிந்தேன். இக்காரணம் பற்றியே என் வாழ்க்கை முழுவதும் பிரமசரிய விரதத்தை கைக்கொண்டொழுகுவதென்ற தீர்மானத்தில் குதித்துவிட்டேன். என் பிரமசரிய விரதத்தை எத்தனை காரியங்கள் தொட்டுக்கொண்டிருக்கின்றன வென்பதை அறியாமலே இப்படிச்செய்தேன். இன்றைக்குங்கூட (வயது 60) இதன் தொல்லைகள் என்னை வெருட்டிப் பார்க் கின்றன. அதிசய சக்தி நிறைந்த இவ்விரதம் சுலபமானதல்ல



கிறிஸ்துகுல ஆசிரம வைத்தியசாலை — வியாதியஸ்தர் தங்குமிடம் —
மச்சிலிருப்பது ஜெப அறை.



கிறிஸ்துகுல ஆசிரம வைத்தியசாலை முன்னிருக்கும் கல் மண்டபம்—வைத்தியம் பெறவருபவர்கள் காத்திருக்குமிடம் — பஜனை, ஜெபம், ஜனங்களுக்கு ஆத்மீக, சரீர விஷயங்களில் நன்மையாயிருப்பவைகளைப்பற்றி உபநியாசங்கள் முதலியன இங்கு நடந்தேறும்.

வென்பதையும் ஆத்துமத்துக்கடுத்ததென்பதையும் கண்டடைந்தேன். சரீரத்திலே இதைத்தொடங்கினாலும் முடிவோ சரீரத்திலல்ல. இந்த விரதம் பூரணத்துவமடைய வேண்டுமென்றால் அசுத்த எண்ணமுங்கூட வரக்கூடாது. ஒரு உத்தம பிரமசாரிக்கு தன் ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் கனவிலும் வராது. பிரமசாரி இந்நிலையை யடையுமட்டும் பூரணத்துக்கு இன்னும் தூரமாகவே இருக்கிறான்.

சரீரத்தில் பிரமசரியத்தை யனுசரிப்பதில் எண்ணிறந்த கஷ்டங்களேற்பட்டிருக்கின்றன. சொல்ல வேண்டுமானால் தற்சமயம் எனக்கு அவ்வளவு மோசமில்லை. என்றாலும் மனநிலையில் முழுவெற்றி கிடைக்கவில்லை. வெற்றி பெற வேண்டுமென்ற பிரியமும் முயற்சியுமுண்டு. வெறுக்கத்தக்க எண்ணங்கள் எங்கிருந்து நுழைகிறதென்றுதான் விளங்கவில்லை. நிறைவும் விடுதலையும் கிருபையிலிருந்துதான் வருகிறது. ஆண்டவரின் கிருபைக்குத் தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடாவிட்டால் துர் எண்ணத்தின்மேல் வெற்றியடைவது முடியாத காரியம்''. (மகாத்மா காந்தி)

> "நான் உங்களுக்குச் சொல்வதோ: ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று."
>
> (மத் 5: 28).

இது சம்பந்தமாக விரதங்கொள்ளுவதைப்பற்றி அவர் சொல்லுகிறதாவது: "விரதங்கொள்ளுவது ஒருவனது

மெய்ச்சுயாதீனக்கதவை அடைத்துப் போடுவதில்லையென்று கண்டேன். என்னை நான் நம்பாததும் கடவுளின் கிருபையை விசுவாசிக்காததுமே என்வெற்றிக்குத் தடை. இதனால் என் மனம் கொந்தளிக்கும் சந்தேகக்கடலில் அலசடிப்பட்டுக்கொண்டிருந்தது. ஒருவன் விரதங்கொள்ள மறுக்கும்போது சோதனைக்குள் இழுக்கப்படுகிறுனென்பதையும், விரதத்தால் தன்னைக் கட்டிக்கொண்டவன் மனம்போனபடி அலைந்து திரிந்த ஒருவன் ஒரே மனைவிக்குப் புருஷனானது போலிருப்பதையும் கண்டுகொண்டேன். நான் முயற்சியை நம்புகிறேன் விரதத்தால் என்னைக்கட்டிக் கொள்ளவோ விருப்பமில்லை என்பது ஒருவனது பலவீன மனதை வெளிப்படுத்துவதுடன் எதை வெறுக்கிறுனே அதன்மேல் தானறியாத ஆழத்தில் விருப்பம் மறைந்து கிடக்கிறதென்பதையும் கண்டுகொண்டேன். அல்லாவிட்டால் முடிவான தீர்மானஞ் செய்யக் கஷ்டம் எங்கிருக்கிறது? என்னைக்கடிக்கும் பாம்பை விட்டு ஓடிப்போக விரதங் கொள்ளுகிறேன்; அதை விட்டு ஓடிப்போகவேண்டுமென்ற வெறும் முயற்சி மாத்திரம் செய்து கொள்ளுகிறதில்லை. வெறும் முயற்சி நிட்டமான மரணம். அது கடிக்குமென்ற உண்மையை உள்ளபடி அறியாதிருப்பதே வெறும் முயற்சி மாத்திரத்திலிருக்கச் செய்வது. வெறும் முயற்சியில் மாத்திரம் அமர்ந்திருப்பது கட்டாயமாய்க் கிரியை செய்ய வேண்டுமென்ற அவசியத்தைக் கண்டு பிடிக்கவில்லையென்று அர்த்தமாகும். ஒரு வேளை பிற்காலத்தில் என் எண்ணங்கள் மாறக்கூடும். அப்படியிருக்க நான் என்னை

விரதத்தால் எப்படிக் கட்டிக்கொள்வது என்று சந்தே கிக்கலாம். இச்சந்தேகம் எதைவிட வேண்டியதோ அதைப் பற்றித்தெள்ளத்தெளிய ஆராயவில்லையென்பதையே காட்டு கிறது.........................ஒரு பிரமசாரிக்கும் பிரமசாரி யல்லாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை யறிந்து கொள்ளவேண்டும். இருவரும் தங்கள் கண்களை உபயோ கிக்கிறார்கள். பிரமசாரி தன் கண்களைக் கடவுளின் மகிமை களைக்காண உபயோகிக்கிறான்; மற்றவனோ தன்னைச்சூழ்ந் துள்ள வீண் வேடிக்கைகளின் மேல் அவற்றை உபயோ கிக்கிறான். இருவரும் தங்கள் செவிகளை உபயோகிக்கிறார் கள். பிரமசாரி தன் செவிகளைக் கடவுளைத்துதிக்கும் துதி களைக்கேட்க உபயோகிக்கிறான்; மற்றவனோ வம்பு வார்த்தை களைப் பருகுவதற்கே அவற்றை உபயோகிக்கிறான். இருவரும் இரவில் வெகு நேரம் விழித்திருக்கிறார்கள். பிரமசாரி அந்த நேரத்தை ஜெபத்தில் செலவிடுகிறான். மற்றவனோ மிருகத்தனமாக வீண் உல்லாசத்தில் அதைப் பறக்கவிடுகிறான். இருவரும் உள்ளான ஆளை வளர்க் கிறார்கள். பிரமசாரி கடவுளுடைய ஆலயத்தைச் சீர்ப்படுத்து கிறான். மற்றவனோ நாறும் சாக்கடையாக்குகிறான். நினைவு, வார்த்தை, செய்கை என்னும் மூன்றையும் அடக்கியாள் வதே பிரமசரியமென்பது''.

பிரமசரியத்தை யொட்டி அனுசரிக்கும் உபவாசத்தைக் குறித்துச் சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்: மத் 17 : 21-ல் "இவ்வகைப்பேய்கள் ஜெபத்தினாலும்

உபவாசத்தினுலுமன்றிப் போகாது" என்று நம்பெருமான் கூறியுள்ளார். அன்றியும் அவரே நாற்பது நாள் உபவாசம் செய்தாரென்பதையும் நாமறிவோம். எனவே ஒரு பக்தனது வாழ்க்கையில் உபவாசம் அவசியமென்பது தெளிவான காரியம் ஆனுல் இதோடு மற்ருென்றையும் நான் சொல்லவேண்டியதவசியம்: ஒரு உயர்ந்த நோக்கமின்றி வெறும் வைதீக முறையில் இந்த நோன்பையனுசரிப்பது வீண்.

நமது வாழ்க்கையில் ஏதாவதொரு பெரிய காரியத்தைத் தெளிவாயறியவும், அதில் தீர்மானஞ் செய்யவும் நேரிடும்போது இதில் என்ன செய்கிறதென்று தெரியாமல் திகைக்கக்கூடும். அவ் வேளையில் நமது நெருங்கிய இனத்தாரையுங்கூட விட்டுப்பிரிந்து கடவுள் திருச்சமுகத்தின் முன் காத்திருந்து நேரம் முழுவதையும் மன்ருட்டிலும் நல்லாராய்ச்சியிலுமே செலவிட வேண்டியதாகும். அன்றியும் நமக்குச் சோம்பல் விளைவிக்கும் உணவு கொள்வதால் நாம் சோம்பராவதுமன்றி அதற்காக மற்றவர்களோடு கலப்பதால் நம் சிந்தை சிதறிப்போகவுங்கூடும். எனவே இத்தகைய நன்னேக்கங்களை முன்னிட்டு உபவாசம் கொள்வது பேருதவியாயிருக்கும்.

சிலர், இந்நோன்பு புலனடக்கத்திற்கு ஏதுவாயிருப்பதால், நாம் கண்டதையெல்லாம் விரும்பிக் கறைப்பட்டுப் போகாதிருக்க உதவியாயிருக்குமென்று கருதுகிருர்கள்.

"உங்கள் இருதயங்கள் பெருந் தீனியினாலும் வெறியினாலும் லௌகீகக் கவலைகளினாலும் எப்போதாகிலும் பாரமடையாதபடி உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்". (லூக்கா 21 : 34.)

என்ற நம்பெருமானின் திருமொழியின் சத்தியத்தையும் உணர்வோம். அன்றியும் I கொரி 9 : 27 பிற்பாதியில் "என் சரீரத்தை ஒடுக்கி அடிமையாக்கிக்கொள்ளுகிறேன்" என்று பரி. பவுலப்போஸ்தலன் கூறுகிறார். ஆனாலும் நாம் இதைக் குறித்துத் தெளிந்த அறிவுள்ளவர்களாயிருக்கவேண்டும். சரீரத்தை ஒடுக்குவதினாலேயே காரியம் கைகூடிவிடுமென்று நாம் தவறான வழியில் உள்ளத்தைச்செலுத்தி உள்ளான மனுஷனின் வளர்ச்சியையும் உதவியையும் மறந்து மோசமான நிலைமைக்குக்கிட்டிச் சேர்ந்திடவும் கூடும். பரம வாழ்க்கையில் ஏறித்தேறுவதற்கு இந்த உள்ளானவனின் வளர்ச்சியும் உதவியுமே இன்றியமையாதது.

"மனத்தகத்தழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத்திருப்பினும் மனத்தகத்தழுக்கறார்,
மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
தனத்தகத்திருப்பினும் மனத்தகத் தழுக்குறார்"

என்று கூறியபடி உள்ள அடக்கமே நமக்கு மிகமிகத் தேவை. இதற்கு நாம் கைக்கொள்ளும் உபவாசம் துணை செய்தாலன்றி அதிற்பயனில்லையென்பது திண்ணம். உள்ளத் தூய்மைக்காக நோன்பேயன்றி நோன்புக்காக உள்ளத் தூய்மையல்ல. உள்ளத்துக்கும் நரம்புகளுக்கும் உறுப்புகளுக்கும் நெருங்கிய

தொடர்பிருக்கிறது. ஒருவனது உறுப்புகளின் செயலுக்கு உள்ளத்தின் எண்ணங்களே முதல் தூண்டுதல். நெருப்பின்றிப் புகையில்லாதது போல் எண்ணமின்றிச் செய்கையுமில்லை. காரியம் இவ்வாறிருப்பதால் நோன்பு நாட்களில் உள்ளமும் உடலும் ஒத்துழைத்தாலன்றி வெறும் உண்ணாமை பயன்படாது. பட்டினி கிடக்கும்போதே புலன்கள் சிதறிச் சிற்றின்பக்கடலில் அலசடிப்படக்கூடும்.

கடவுள் சில பக்தருக்கு தம் தரிசனத்தைத் தந்து, சுய ஜன விடுதலைக்காவது, மார்க்க காரியங்களுக்காவது, தேச காரியங்களுக்காவது, அவர்களை ஏவி யெழுப்பலாம். இந்த தரிசனத்திற்கேற்ப கிரியை செய்யவேண்டுமென்ற பேரவா மனதிற் பொங்கி அவர்களைத் தள்ளிக்கொண்டு போகவும் கூடும். இந்த வாஞ்சையினால் சாதாரண குடும்பக் கட்டுகளைக் கடந்து பக்தர்கள் தங்கள் அழைப்பை நிறைவேற்றுவதற் கனுகூலமாய் விடுதலை பெற்று நிற்கலாம். இவர்கள், அன்பு மேலிடுவதால், பிறர்பால் மட்டற்ற காதல்கொண்டு, இளைப்பாறுதலின்றி உழைப்பர். பெரிய காரியங்களை நிறைவேற்ற எண்ணி சிறு கட்டுகளைத் துறந்து விடுதலை யடைகின்றனர். தங்கள் ஆண்மையையும், தொண்டையும் சுய குடும்பமாகிய ஒரு சிறு பாகத்துக்கு மாத்திரம் செலுத்தி அதிலேயே ஆழ்ந்துபோகாதிருக்கவே இப்படிச் செய்கின்றனர். இப்படிப் பட்டவர்களுக்கு எல்லாருமே சொந்தம். வேற்றுமையில்லை. கடவுளின் சித்தப்படி நடக்கும் எவரும் இவர்களுக்கு உற்ற இனத்தார்.

"தமது கையைத் தமது சீஷருக்கு நேரே நீட்டி, இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாம் என்றார்." (மத் 12 : 49—50)

ஒரு போர் வீரன் தன் அரசனாணைப்படி எந்த இடத்துக்கும் எந்த நிமிஷத்திலும் புறப்பட்டுப்போக தயாராயிருப்பது போல் இவர்களும் கடவுள் தங்களையனுப்பச் சித்தம் கொள்ளுகிற இடத்துக்குத் தட்டுத்தடையின்றி உடனே புறப்பட்டுப்போக உலகப்பற்றினால் கட்டப்படாமல் விடுதலையுடையவர்களாயிருக்க வேண்டும். இவ்வாறு விடுதலை பெற்று, இன வேற்றுமையின்றி யிருக்குமிவர்கள் சாது சுந்தரசிங்கைப்போல் துறவுபூண்டு தனிமையாய் எங்கும் சுற்றித் திரிந்து தொண்டாற்றவும், அல்லது தன்னைப்போன்றவர்களுடன் கூடி ஒரு இடத்தில் ஒத்துழைக்கவும் தங்களை ஒப்புக்கொடுக்கக்கூடும். இவ்வாறு தங்களை ஆண்டவருக்குள் கட்டிக்கொள்ளும் கட்டு உலகக்கட்டல்ல.

எனவே நமது கிராமத்தாரை நசுக்கித் தாழ்த்தும் மடமை, வறுமை, நோய், இன்னல், அகால மரணம் முதலிய கொடுமைகளை நாம் கண் நோவக்காணும்போது, ஒரு புதிய இந்தியாவைக் கண்டு மகிழவேண்டுமென்ற அவாவினால் பீடிக்கப்பட்ட தியாகிகள் எண்ணிறந்த பேர் உடனே எழும்பி முன்வரவேண்டியதின் அவசியத்தை நாம் உணரு

கிறதில்லையா? இப்படி முன்வரும் தியாகிகள் தமக்கென வாழாது பிறர்க்குறியாளராய், தங்களைச் சுற்றியுள்ள மக்களின் இன்னலைத்தொலைத்து, கடவுள் அவர்களுக்குக் குறித்த சுதந்திரத்தை யடையப்பண்ணுமட்டும் தாங்கள் உலக கட்டுகளிற் சிக்கிக்கொள்ளாதிருக்க பிரமசரிய விரதங் கொள்ளவேண்டியது அவசியமில்லையா? காரியம் இவ்வாறு இருப்பதால் கிராம முன்னேற்றத்துக்குத் தொண்டாற்ற வேண்டியவர்கள் நகரத்தொண்டுக்கு உதவாதவர்களென்று தள்ளப்பட்டவர்களும், கற்றறிந்த பெரியோரின் குழாத்துக் கருகால்லாதவர்களென்று எண்ணப்பட்டவர்களுந் தானென்று அசட்டை யாயிருந்துவிடப் பார்ப்பது மடமையும் பெரும் பாதகமுமாகும். எனவே தெய்வ தரிசனம் பெற்றவரும், பேரறிவாளரும் மகான்களுமே நமது கிராமங்களில் தொண்டாற்ற இன்றியமையாதவர்கள்.

பிரமசாரியென்று நான் சொல்லும்போது உடலூனம், பலவீனம், பேடித்தனம் முதலிய இயற்கைக்கு மாருன தன்மை யுள்ளவர்களைக் குறித்தல்ல. மக்களுக்குறிய சகல நற்றன்மையும், வீரிய விருத்தியும், உடல் நலமும், பொருந்தினவர்களாய்த் தங்கள் தத்துவங்களை முற்றிலும் கடவுள் திருச்சமுகமுன் புடமிட ஊற்றி, அவைகளை உன்னத நிலைக்கு மாற்றி, தெய்வ நகரத்தைச் செழிப்பிக்கக்கூடிய வல்லமை நிறைந்த உத்தம பிரமசாரிகளையே குறிக்கிறேன். இப்படிப் பட்டவர்களையே என் கண்கள் நோக்கிக் கொண்டிருக்கின்றன. நன்கு புடமிடப்பட்டதங்கம்போல் ஆத்மீகபுடத்தால் மாற்றுயர்ந்த பிரமசாரிகளே நம்நாட்டுக்குத் தேவை.


இக்காரியங்களில் மேல்நாட்டு வழக்குகளைக் கலக்கக் கூடாது. எதையும் வரையறுத்துக் கூறுமலும், பிடிவாதமாய் வழக்காடாமலும், கால, தேச, வர்த்தமானத்துக்கேற்றபடி உண்மையும் உத்தமுமானதையே நோக்கிப்பார்க்கவேண்டும். இந்தியாவை ஆத்மீக வளர்ச்சிக்குக் கொண்டுவரவும், கடவுள் தந்த சுதந்தரத்தை யடையப்பண்ணவும் வேண்டுமானல் நம் நோக்கம் கலங்காத தெளிவு நிலையை யடையவேண்டும். நாம் எதைப்பார்த்தாலும் எதை நிதானித்தாலும் எதைத் தீர்மானித்தாலும் நன்கு தீரத்தெளிய ஆராய்ந்து கண்டு செய்யவேண்டும். காலநிலையறிந்து அழைப்பைத் தெளிவாய்க்கண்டு நடக்க நம் கண்கள் மிக்க தெளிவாயிருக்க வேண்டும்.

---

# 3. குருக்குலம்.

நான் முன் கூறியபடி ஆசிரம வாசிகள் ஒரு குடும்பமாக இருந்தனர். ஒரு குடும்பத்தில் தாய் தகப்பன் பிள்ளைகள் ஆகிய யாவரும் தங்கள் பொருளை எப்படி மனவேற்றுமை யின்றிக் கையாளுகிறார்களோ அப்படியே இவர்களின் உடைமைகளையும் பொதுவாய் வைத்து உள்ளத்தில் வேறு பாடின்றிக் கையாண்டனர். இது என்னுடையது, அது உன்னுடையது, இது உன்னுடையதல்ல, அது என்னுடைய தல்ல என்ற உரிமையும் உரிமையின்மையும் அங்கே இருந்த தில்லை. இப்படிப்பட்ட தகாத விதமான உரிமையிலும் உரிமையின்மையிலுமிருந்துதான் தீமை விளைகிறது. ஆசிர மத்தலைவர் குருக்குல வாசிகளிடம் சமநோக்குடையவரா யிருப்பார். ஒருவனை வெறுப்பதும் மற்றொருவனை விரும்பு வதுமான தீயதன்மை அத்தலைவரிடம் இராது. தனக்குப் பிரியமானவனென்று ஒருவனைத் தெரிந்துகொண்டு அவனைச் செல்வப்பிள்ளையைப்போல் பாராட்டுகிற தன்மையும் இருந்த தில்லை. உடுப்பு உணவு சிற்றுண்டி முதலிய நாடோடிய கொடைகள் ஒரே விதமாக இருக்கும்.

பண்டைய ஆசிரமங்களில் குருக்குல மக்களுக்கு கொடுத்த கல்வியும், அதின் முறையும் மிகவும் ஆழ்ந்து ஆராய்தற்கவசிய மான காரியம். அது, இக்கால கலாசாலைக் கல்வியைப்போல் வெறும் ஏட்டறிவையும், வெறும் மனப்பாடத்தையும், வெறும் உபந்நியாச முறைமையையும், வெறும் பரீக்ஷையில்



கிறிஸ்துகுல ஆசிரமத்தொண்டர் கிராமத்திற்குப்போய்த் திரும்புதல். பக்கத்திலிருக்கும் ஆசிரம மாட்டு வண்டியை "மோட்டார்" என்று வேடிக்கையாய் அழைப்பதுண்டு!



கிறிஸ்துகுல ஆசிரம பள்ளிக்கூடப் பிள்ளைகள் வனபோஜனம்.

சித்தியடையும் பயிற்சியையும், ஆங்கில பட்டங்களைப் பெற வேண்டுமென்று பேராவல்கொண்டு பயிலும் பயிற்சியையும் கொடுத்ததில்லை. ஒவ்வொரு மாணவனும் சரியான பூரண ஆள்தத்துவத்தையடைய வேண்டுமென்பதே அதன் முழு நாட்டம். சகல நல்லொழுக்க வழக்கங்களிலும் ஏறித்தேறும் பொருட்டே மாணவர்களை ஆசிரமங்களில் விட்டு வைத்தார்கள். அக்காலத்தில் கல்வி பயின்றதெல்லாம் உள்ளான மனுஷனின் வளர்ச்சிக்கே. பூவும் மணமும்போல் அக்காலக் கல்வியும் ஒழுக்கமும் பிரிக்கக்கூடாத நிலைமையிலிருந்தது. ஆசிரியரும் மாணவரும் ஒரே தன்மையான உள்ளேவுதலால் ஏவப்பட்டிருந்தனர். இதனால் அவர்கள் நாட்டமும் வேறுபாடின்றியிருந்தது. கடவுள்மேல் வாஞ்சை, அவரது பிரசன்னவுணர்ச்சி, உன்னத அவா, தங்களுடைய வாழ்க்கையின் நோக்கத்தைக் கண்டு தெளிதல் ஆகிய இத்தன்மையதான உன்னத நாட்டத்தையே கொண்டிருந்தனர்.

இவர்கள் கற்றுக்கொண்ட முறையை உற்று நோக்கும்போது படித்தார்களென்று மாத்திரம் சொல்லாமல் பிடித்தார்களென்றே சொல்லவேண்டும். படிப்பதற்கும் பிடிப்பதற்கும் மிக்க வேற்றுமையுண்டு. ஒருவன் ஒன்றைத் தனக்கு உரியதாக்கிக்கொள்ளாமலே அதைப்பற்றி நன்றாய்ப் படித்தறிந்து கொள்ளலாம். இதைத்தான் வெறும் மூளையறிவென்று சொல்லவேண்டும். தான் கற்றதைத் தனக்கே உரியதாக்கிக்கொண்டு அதற்கு வேறுபடாது ஒழுக்க முறையிற்கொண்டுவரக் கற்பதே பிடித்துக்கொள்ளுவது.

கற்கக் கசடறக் கற்பவை — கற்றபின்
நிற்க அதற்குத் தக. (திருக்குறள்)

இவ்வாறு கல்வியை பிடித்துக்கொள்ளுவதற்கு ஜீவன் முத்தராகிய ஆசிரியர் இவர்களை விட்டுப் பிரியாது மாணவர்களிடையிலேயே இருந்து சகல இன்ப துன்பத்திலும் உதவிபுரிந்து வெளிச்சத்தில் நடத்தினர். ஜீவன் முத்தாது ஒப்பற்ற நல்லொழுக்க வாசனையிலேயே மாணவர்கள் இணைபிரியாதிருந்தபடியால் "பூவோடிசைந்த நாரும் மணம் பெறும்" என்றபடி மாணவர் நல்லொழுக்கமுடையவராயினர். ஜீவன் முத்தருடைய போதனையையும் சாதனையையும் கேட்டும் கண்டும் அறிந்தும் தெளிவடையுமாறு சிறுபருவத்திலேயே பிள்ளைகளின் பெற்றோர் அவர்களை ஆசிரமங்களில் விட்டு வைத்தபடியால், மாணவர்கள் நல்லொழுக்கத்திலும் பக்தியிலும் எறித்தேறுவதற்கு மிக்க உதவியாயிருந்தது. பெற்றோரிடம் பிள்ளைகள் எவ்வாறு சுலபமாய்க் கற்றுக் கொள்ளுகிறார்களோ அப்படியே இவர்களும் தாங்களறியாமலே கஷ்டமின்றிப் பல நுட்பமான காரியங்களைக் கற்றுக் கொண்டனர்.

நான் முன்னே சொன்னபடி தனக்குள்ளும் தன்னைச் சூழ்ந்துள்ள மக்களுக்குள்ளும் நன்னோக்கம் வெற்றி சிறக்கும்படி சரியான பூரண ஆள்தத்துவத்துவம் வளரும்படிக்கே கற்பிக்கப்பட்டனர். சுருக்கிச் சொன்னால் கடவுளோடும் மக்களோடும் பிணக்கின்றி வாழும் சாந்தி நிலையடைவதே அவர்களின் முக்கியம். எனவே, முற்கால கல்வியில் விளைந்த

பலனோடு தற்கால கல்வியில் விளையும் பலனை ஒத்துப்பார்ப்பது நலம். தற்கால கலாசாலைகள் தற்பொழிவற்ற நற்றொண்டரைப் பக்குவப்படுத்தி யனுப்புவதற்குப் பதிலாக பெரும்பான்மையும், தற்பொழிவை நாடும் பணப்பிரியரையும், அதிகாரப் பிரியரையுந்தான் வளர்த்தனுப்புகின்றன. தற்கால கலாசாலை மாணவர்களின் மனநிலையை உற்று நோக்குவோமானால் மற்றவர்களை ரக்ஷிக்கவேண்டிய இவர்கள் பக்ஷிக்கும் நோக்கத்தோடிருப்பதைக் காணலாம். ஏழை மக்களின் சொற்ப வருமானத்தைக் கொள்ளையடித்துப் பணம் பறிக்க உதவியான உத்தியோகத்தைப் பெறுவதற் கனுகூலமான பட்டங்களைப் பெறவேண்டுமென்பதே தற்கால மாணவரின் பேரவா. கலாசாலைப் படிப்பை முடித்துப் பட்டங்களைப் பெறுவதால் தக்க பண முடிப்புடன் பெண்களை மணந்து வாழலாமென்னும் கருத்தோடு படிக்கும் மாணவரும் உண்டு. ஆண் மக்களுக்குள்ளும் பெண் மக்களுக்குள்ளும் இத்தகைய அற்ப நோக்கங்களமைந்து கிடப்பதைக் காண்போமேயன்றி, மற்றவர்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்றுவது, கடவுள் பக்தியில் வளர வேண்டுமென்றுவது எண்ணும் பெருந்தன்மையான மாணவரைக் காண்பது அத்தி பூத்தாற்போலவே ஆய்விட்டது. எனவே தற்கால கலாசாலைக்கல்வி மாணவர்களுக்குள் பணம் தேடவேண்டுமென்ற தேட்டத்தையும், சிற்றின்ப நுகர்ச்சியின்மேல் நாட்டத்தையுமே உண்டாக்கும் வியாபாரக் கல்வியாய் விட்டது.

கல்வியாளரின் நாடோடிய வாழ்க்கையின் நல்லொழுக்கந்தான் எவ்வாறிருக்கிறதென்பதைச் சற்று ஆராயலாம்.

கற்றுத் தேறிய இவர்கள் கற்றறியாத பாமர மக்களிடையே தங்கள் வாழ்க்கையின் முன் மாதிரியால் நல்லொழுக்கத்தை வளர்க்கவேண்டியதற்குப் பதிலாய், மனுஷீகத்துக்கு மாருக முரட்டுத்தனமாய் ஒழுங்கற்ற நிலைமையில் நடந்து, பிள்ளைத் தன்மை வாய்ந்த ஏழைமக்களின் ரத்தத்தை உறிந்து குடிக்கும் வன்கண்ணர்களாயிருக்கிருர்கள். இந்த நோக்கத்துடனேயே கற்பதால் கலாசாலையைவிட்டு வெளியேறிய பின் தங்கள் கல்வியையும் பட்டங்களையும் தங்கள் நோக்கம் நிறைவேறவே உபயோகிக்கிருர்கள். பயிரைக் காப்பாற்றுவதற்குப் போட்ட வேலியே பயிரை மேய்ந்தால் இக்கொடுமையை யாரிடஞ் சொல்வது! தங்களை உயர்ந்தவர்களென்று காட்டும் பட்ட எழுத்துக்களைத் தங்கள் பெயர்களுக்குப் பின் போடுகிறவர்கள் அதற்கேற்ப தங்கள் மதிப்பைக் காத்துக்கொள்ளும்படி நல்லொழுக்க முறையில் நடந்துகொள்ளவோ அறியார்கள். பொதுக்கூட்டங்களிலும் புகைவண்டிகளிலும், தங்களினத்தாரிடையிலும், தங்கள் சொந்த வீடுகளில் தாய் தகப்பன்மாரிடையிலும் இவர்கள் நடந்துகொள்ளும் ஒழுங்கற்ற தன்மை மகாபரிதாபமானதாகும். இதை இவர்களின் சாதாரண வாழ்க்கையில் காணலாம்.

வெறும் எழுத்தறிவுக்கும் அனுபவ ஆராய்ச்சியால் பெற்ற கலையறிவுக்கும் அதிக வித்தியாசமுண்டு. எழுத்தறிவும் கலையறிவும் கலந்தும், தனித்தும் இருக்கலாம். எழுத்து வாசனையறியாத எத்தனை மகான்கள் இந்நாட்டில்

தோன்றி பெரும் பெரும் காரியங்களை நிலைபெறச்செய்தனர்! இன்றும் நமது கண்முன் நிற்கிற கோவில்களையும், கோபுரங்களையும், சிலைகளையும், சிற்பமுறை தவருதபடி செய்து வைத்தவர்கள் பலர் இத்தகைய எழுத்துவாசனையறியாத கலையறிவாளர்களன்றோ! அன்றியும் அரசாட்சிகளையும் மதங்களையும் கூட இத்தகைய எழுத்துவாசனை யறியாத கலையறிவாளர்கள் நிறுவி நடத்தினரென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இப்பொழுதும் இப்படிப்பட்ட கலையறிவாளர் ஆங்காங்கு இலைமறைகனிபோல் திகழ்கின்றனரென்பதையும் நானறிவேன். உதாரணமாக இந்த ஆசிரம ஜெபாலயத்தைக் கட்டிமுடித்த சிற்பிகளிற் பெரும்பாலர் எழுத்தறிவில்லாதவர்கள்தான். என்றாலும் அவர்கள் கணக்கும் வேலைப்பாடும் யுக்தியும் ஆச்சரியமாயிருக்கின்றன. இப்படியிருக்க இத்தகைய ஜனங்கள் தங்கள் சமுதாய அரசியல் விஷயங்களை நடத்தத் தகுதியற்றவர்களென்று சிலர் எண்ணுவது எவ்வளவு மடமையாகும்!

அனுபவ முதிர்ச்சியால் விளையும் கலையறிவில்லாத தற்கால கலாசாலைப் பட்டதாரிகள் மிதமிஞ்சின பெருமை பாராட்டுவதைக் காண்கிறோம். இப்படித் தங்களை மறந்து பெருமை பாராட்டி இறுமாப்புக் கொள்ளுவதை மெய்யறிவாளர் காணும்போது மனத்துட் புன்னகை கொள்கின்றனர். இந்த வெறும் பட்டதாரிகள் தங்கள் பட்டங்களைப் பெறக் காரணமாயிருந்த பெற்றோரையும் மற்றோரையும் மறந்து இறுமாப்படைவது எவ்வளவு பெரிய

நன்றிக்கேடாகும்! பெற்ளூர் பண உதவி செய்யாமலும், மற்ற கிராமவாசிகள் தங்கள் தங்கள் சக்திக்கிசையச்செலுத்தும் கல்வி வரியைச் செலுத்தாமலும் நிறுத்தி விட்டால் இவர்கள் எங்கிருந்து பட்டங்கள் பெறுவார்கள்! இந்த நன்மையை மறந்துபோவதால் இவர்கள் பொது மக்களுக்கு உதவிபுரியவேண்டுமென்ற எண்ணமற்று, மறுபடியும் மறுபடியும் மக்கள்மேல் வரி விதித்துச் சுமையேற்றிச் சேர்ப்பதினுல் வரும் பெரும் சம்பளம்பெற்றுக் கவலையற்றுப் பிழைக்கின்றனர். என்னே இவர்களின் உணர்ச்சியற்ற தன்மை! தங்களுக்கு வேண்டியதற்கு மிஞ்சி வரம்புகடந்து உடுக்கவும் உண்ணவும் விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட உலக டம்பங்களில் தகப்பன் எந்த இடத்தில் முடித்தானே அங்கேதான் மகனும் தொடங்க விரும்புகிறுன்.

அன்றியும் ஆங்கிலம் கற்றுத்தேறினவர்கள் தங்கள் அறிவை மற்ற சாதாரணமக்களுக்குத் தெளிவாக்கி கல்வியை அவர்களுக்குள் பரவச் செய்ய உதவமாட்டார்கள். தாய் மொழியைக் கீழ்ப்படுத்தி ஆங்கில பாஷையில் சகல உயர் கல்வியையும் வைத்ததால் விளைந்த இந்தத்தீமையை எடுத்துக் காட்ட எத்தனையோ திருஷ்டாந்தங்கள் உண்டு. அதற்கு இது சமயமன்ருதலால் விட்டுச் செல்கிறேன். இந்தப் பெருங்குறைவை இந்திய ஆசிரமங்கள் நிவர்த்தி செய்ய முயற்ச்சி எடுக்கவேண்டியது மிக அவசியம்.

---

## 4. துறவறம்.

துறவற மென்பது பண்டைக்காலத்தும் இந்தக் காலத்தும் யாவராலும் போற்றப்படத் தக்கதாகும். ஒரு துறவி தன் கைகளால் பணத்தைத் தொடக்கூடாதென்பது பண்டை அபிப்பிராயம். உலகத்தில் ஒருவனைக் கட்டுப் படுத்தக்கூடிய பணம், வீடு, காடு, ஆடு, மாடு, சுற்றம் முதலிய எல்லாவற்றையும் விட்ட துறவி மறுபடியும் அதில் சிக்கிக்கொள்ள விருப்பங்கொள்ளுவதெப்படி! இப்படி எல்லாக் கட்டுகளையும் துறந்த ஆசிரமவாசிகள் காட்டுக்குச் சென்று அங்கே சிறு குடிசைகளில் வசித்து வந்தனர். மிகவும் சாதாரண உணவும், உடையும் உண்டு உடுத்தியபடியால் அவர்களுக்கு ஒன்றும் தேவையாயிருந்ததில்லை. காட்டில் கிடைத்த காய், கனி, கிழங்குகளையே புசித்து பக்கத்து ஆறுகளிலோடிய தெள்ளிய தண்ணீரைக் குடித்துப் பசி யாற்றினர். நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவை களுக்குக் கூடுகளும் உண்டு. மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்றும், ஒருவன் உலகமுழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும் அவன் தன் ஆத்துமத்தை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன ? என்றும் நம் பெருமான் கூறியபடியே இந்த ஆசிரமவாசிகளும் இவ்வுலகப் பற்றற்றவர்களாய் ஆத்துமலாபம் ஒன்றையே நாடி வாழ்ந் தனர்.

இத்தாலியா தேசத்திலிருக்கிற அசிஸிநகரில் ஒரு வர்த்தகன் வீட்டிற் பிறந்துவளர்ந்த பிரான்செஸ் என்பவர்

வாலிபனாயிருந்தபோது ஒரு நாள் ஆலயத்துக்குப் போயிருந்தார். அங்கே ஆராதனையின் சுவிசேஷ வசனங்களாகிய

"அவர் வழிநடந்து வெளியே செல்லுகையில் ஒருவன் அவரிடம் ஓடிவந்து முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். அதற்கு இயேசு: நீ என்னை நல்லவரென்று சொல்வானேன்? கடவுள் ஒருவரே தவிர நல்லவர் ஒருவருமில்லையே. நீ கற்பனைகளை யறிவாய்: கொலை செய்யாதே, விபசாரஞ் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சாட்சி சொல்லாதே, வஞ்சனை செய்யாதே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணு என்பவைகளே என்று சொல்ல அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேனென்றான். இயேசு அவனை உற்றுநோக்கி அவனில் அன்பு கூர்ந்து; உன்னிடம் ஒரு குறைவு உண்டு, நீ போய் உனக்குண்டானவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்தில் உனக்கு ஐசுவரியமிருக்கும், அப்பால் வந்து என்னைப் பின் பற்று என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாய் இருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு முகம் வாடித் துக்கத்தோடே போய்விட்டான்.

அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்துத் தமது சீஷரிடம்: ஐசுவரியமுள்ளவர்கள் கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிது என்றார்.

சீஷர் அவருடைய வார்த்தைகளைக்கேட்டு பிரமித்து போனார்கள். இயேசு பின்னும் அவர்களைப்பார்த்து பிள்ளைகளே, கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப் பது எவ்வளவு அரிது. ஐசுவரியவான் கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிது என்றார். அவர்கள் மிகவும் பிரமிப்படைந்து, அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடுமென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். இயேசு அவர்களை உற்றுநோக்கி; மனுஷரால் ஆகாதது தான், கடவுளாலோ ஆகாததல்ல; கடவுளால் எல்லாமாகும் என்றார்.'' (மார்க் 10 : 17—27)

எனும் வசனங்களை போதகர் வாசிக்கக் கேட்டார். கேட்கவே பிரான்செஸ் மனம் அசைவுற்றது. தனக் குண்டான இம்மையின் உடமைகளனைத்தையும் துறந்து, கிறிஸ்துவின் நிமித்தம் ஏழைகளோடு ஏழையாகித் தொண்டு செய்தார்.

ரோமான் சபையில் ஏசு சங்கத்தை நிறுவிய இன் ஞசியார்லாயலா என்ற பெரியார் பாரிஸ் நகரிலிருந்தபோது பிரான்செஸ் சவரியார் என்ற ஒரு வாலிபன் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தார். இவர் பெரிய தனவந்தன் வீட்டிற் பிறந்து வளர்ந்தவர். ஆத்துமீக விஷயத்தில் கவலையற்ற வராயிருந்தார். இதையறிந்த லாயலா, சவரியாரைச் சந்திக் கும்போதெல்லாம்,

"மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன?". (மார்க்கு 8 : 36)

என்ற வேதவசனத்தைக் கூறுவார். சவரியார் இந்த வசனத்தை ஆய்ந்துணர்ந்தபோது மனம் மாறி தனக்கிருந்த சகல உடமைகளையும் துறந்து இயேசு சங்கத்தில் ஒரு அங்க மானார். இவர்தான் இந்தியாவிற்கு வந்து அப்போஸ்தல ஆவிநிறைந்தவராய்ப் பெருந்தொண்டாற்றிய சவரியார்.

இரக்ஷணிய சேனையார் முதலில் இந்தியாவுக்கு வந்த தொடக்கத்தில் இந்திய ஏழைமக்களைப்போல் நடை உடை பாவனைகளில் ஒத்துப்பிழைத்தனர். அந்நாட்களில் இலங்கை யிலிருக்கும் கண்டிநகர்க்கல்லூரியில் ஆசிரியராயிருந்த வீர சூரியா என்னும் பெயர்கொண்ட ஒரு சிங்கள வாலிப பக்தன் தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தவராயிருந்தும், கிறிஸ்துவின் நிமித்தம் எதையும் விட்டுவிடவேண்டுமென்ற எண்ணமில்லாதவராயிருந்தார். ஒரு நாள் இரக்ஷணிய சேனை யைச் சேர்ந்த ஒரு ஐரோப்பிய தொண்டனைக் கண்டபோது அவரது எளிமையைப்பார்த்த வீரசூரியா, உள்ளமுருகி தானும் கிறிஸ்துவின் நிமித்தம் எல்லாவற்றையும் விட்டுத் துறவியானார். இவர் இரக்ஷணிய சேனையில் தலைவனாயிருந்து, பக்தசிரோமணியாய் விளங்கி, அப்போஸ்தல ஆவி நிறைந்த வராய் ஆண்டவருடைய தொண்டிலேயே தன் உயிரையும் கொடுத்து மகிமைப்படுத்தினார். இப்படியே மாணிக்க வாசகர், தாயுமானவர், பட்டினத்தார், பத்திரகிரியார் முதலிய எண்ணிறந்த துறவிகளை நாமறிவோமே.

ஆசிரம முறைப்படியே ஆதி கிறிஸ்தவர்கள் தங்களுக்கிருந்த சொத்துக்களை யெல்லாம் பொதுவாக்கி அவற்றை யாவரும் வேற்றுமையின்றி அனுபவித்ததையும் நாமறிவோம். இந்த ஆதிகிறிஸ்தவர்கள் ஒரு சபைக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு இவ்வாறு செய்யாமல் கிறிஸ்து இயேசு பெருமானின் பேரன்பினுல் ஏவப்பட்டு இயல்பாகவே தங்களிட மிருந்ததை மனமகிழ்ச்சியோடு பொது உடைமையாக்கினர். தங்கள் சகோதரரின் வறுமைத்துன்பத்தைக் கண்டு மனம் பொருத வர்களாய் இப்படிச்செய்தனர். ஆண்டவரின் சரீரத்திலேயே ஒருபாகம் இன்னலையனுபவிக்க மற்ருெரு பாகம் அதைப் பார்த்துக்கொண்டு இன்பமனுபவிப்ப தெப்படி! இந்த மேலான வழக்கத்துக்குள்ளே நாளடைவில் தற்பொழி வென்னும் விஷமும், பொருமை யென்னும் நெருப்பும் ஊடாடத்தொடங்கவே எல்லா நன்மையும் தொலைந்தொழிந்தது. இப்படியே திருச்சபை தன் கடமையைச் செய்யத் தவறிவிட்டது. கிறிஸ்துவின் பேரைத் தரித்துக்கொண்டிருக்கும் திருச்சபை தன் கடைமையை மறந்துவிடவே, திருச்சபைநாதரின் நோக்கத்தை சபைக்குப் புறம்பேயிருக்கிறவர்கள் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றத் தொடங்கினர்.

பொதுவுடைமையென்பது கிறிஸ்தவ போதகந்தான். ஆனுல் தற்காலத்தில் இதை நிறைவேற்ற விரும்பி முயற்சிக்கும் ஒரு சில புரட்சிக்காரர்களோ ஆண்டவரது முறையை விட்டு விலகினர். உன்னதமான நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானுல் உன்னதமான முறையும் இன்றியமையாத

தாகும். இலக்கு எப்படியோ அப்படியே அந்த இலக்குக்குப் போகும் வழியும் தகுதியானதாயிருக்கவேண்டும். கிறிஸ்துவையும் அவரது ராஜ்யத்தையும் நாமடைய வேண்டியதுண்மையானுல் கிறிஸ்துவே அதற்கு மெய்யான வழி.

எனினும் தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிப் பாராட்டுகிறவர்கள் தாங்கள் ஆண்டவரைப் பின்பற்ருதே போனுல் அவரது பேரைத் தரித்துக்கொள்ளாத புற மதஸ்தரிடையே தீர்க்கதரிசிகளையும் மகான்களையும் எழுப்பி ஆண்டவர் தம் வேலையைச் செய்கிருர். இந்த மறுக்க முடியாத சத்தியத்தை நாம் மறவாது உள்ளத்தின் ஆழத்தே பதித்து வைக்கவேண்டியது. நாம் வாயால் பாராட்டியும் செயலிற் பின்பற்ருத சத்தியங்களை அவர்கள் சொல்லிற் பாராட்டாமலே கைக்கொண்டொழுகுகிருர்களே! இப்படியே ஆண்டவர் முற்காலத்திலும் செய்தார்; தற்காலத்திலும் செய்கிருர்; நாம் வெட்கித் தலைகுனியும்படி வருங்காலத்திலும் செய்வார்.

ஒருவன் தன் தேவைக்கு மிஞ்சினவைகளை வைத்துக்கொண்டு மற்றவர்களைத் தவிக்க விடுவதும் ஒரு வகைத் திருட்டுத்தானே! "எனக்கு இன்றியமையாததையொழிய மற்றதை வைத்திருப்பது திருட்டு" என்று காந்திஜீ அவர்கள் கூறுகிருர். ஒருவன் பிறன் மனைவியைத்திருடி விபசாரஞ் செய்தால் திருச்சபை அவனைப் புறம்பாக்குகிறது. மற்றவர்களுக்குத் தேவையானதை ஒருவன் அவசியமின்றி தனக்கு வைத்துக் கொண்டிருப்பதைத் தெளிவாய் கண்டாலும்

அவன்காரியத்தில் திருச்சபை எதுவும் செய்கிறதில்லை. வறியரின் இரத்தத்தை உறிந்து பணத்தின்மேல் பணத்தைச் சேர்த்து சிற்றின்பத்திலே ஆழ்ந்து செத்துக்கிடக்கும் அங்கங்கள் திருச்சபையில் இல்லையோ? இக்கொடுமைகளையெல்லாம் திருச்சபையும் அதன் தலைவர்களும் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார்கள்! என்னே இவர்களின் உணர்வற்ற தன்மை! அந்தோ எண்ணிறந்த ஏழைலாசருக்கள் அன்றாடக உணவுக்கும், அரையிலுடுக்க அவசியமான நான்கு முழ உடைக்கும் என்ன பாடுபட்டுத் தவிக்கிறார்கள்! இந்தக் கொடிய வறுமைக்குக் காரணந்தான் என்ன?

ஆகாயத்துப்பறவைகளுக்கு வேண்டிய உணவையும் புல்லுப்பூக்களுக்கு நேர்த்தியான உடையையும் பரமதகப்பன் கொடுத்துக் காப்பாற்றுகிறதாக நம்பெருமான் கூறுகிறார். அப்படியானால் வறுமை எப்படி வந்தது! நம்பெருமான் கூறியது பொய்யோ! அல்லவே அல்ல. மக்கள் வறுமையின் வாய்ப்பட்டு வருந்த மக்களே காரணமாயிருக்கின்றனர். பரம தகப்பன் உலகத்தில் படைத்திருக்கிற எல்லாவற்றுக்கும் போதுமானவற்றைக் கொடுத்தேயிருக்கிறார் போதுமான அளவுக்கு மிஞ்சி அவர் ஒன்றும் தருகிறதில்லை. அவரது சிக்கன முறை அதிசயமானது.

> "அவர்கள் திருப்தியடைந்த பின் அவர் தமது சீஷரிடம்: மிஞ்சின துணிக்கைகளைச் சேர்த்து வையுங்கள், ஒன்றும் சேதமாகக்கூடாது என்றார்".
> (யோவான் 6 : 12.)

ஆடம்பரத்துக்கும் பெரும் போக நுகர்ச்சிக்கும் அவர் இடந்தரவில்லை. எனவே தற்பொழிவை நாடும் மக்கள் கடவுளின் சிக்கன முறையை எண்ணிப்பாராது அடாத முறையில் பணத்தின் மேல் பணத்தைத் திரட்டி வைத்துக் கொள்ளுவதாலும், இயற்கை முறையில் பலர் உண்ணக் கூடியதையும் உடுத்தக் கூடியதையும் வசிக்கக்கூடியதையும் ஒருவன் தனக்கே சொந்தமாக்கிக்கொள்ளுவதாலும் எண்ணிறந்த மக்களின் வயிறும் உடலும் ஒட்டி உலர்ந்து போகிறது. இப்படியே "பெரிய மீனுக்குச் சிறு மீன் இரை" என்றபடி ஜாதிக்கு ஜாதியும், நாட்டுக்கு நாடும், தேசத்துக்கு தேசமும் பகைகொண்டு எளியதை வலியது அடக்கிக் கொண்டுதானிருக்கிறது. மக்கள் யாவருக்கும் கடவுள் குறித்த சுதந்தரத்தைத் தற்பொழிவை நாடும் ஒரு சார்பான சிலர் இவ்வாறு கொள்ளையடிப்பதனாலேயே அநேகர் வறியராய் வருந்த நேரிடுகிறது.

பொருள்ப்பிரியமான சில தேசத்தார் மற்றவர்களை அடக்கி தாங்கள் அபகரித்தவைகளை இழந்துபோகாதபடி பயங்கர யுத்தாயுதங்களையும் சேனைகளையும் திரட்டிக் கொள்ளுகிறார்கள்.

இதனால் மக்களிடையே விளையக்கூடிய யுத்தங்களும் கலகங்களும் வெளிப்படையாகக் காணப்படாத சமயத்திலும்கூட, அவைகட்குக் காரணமான பொறாமை பகை முதலிய தீய குணங்கள் அவர்களுள்ளங்களில் மூண்டுக் கொண்டுதானிருக்கின்றன.

> "உங்களுக்குள் யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகின்றன? உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா?" (யாக் 4:1)

வெளியான யுத்தம் தக்க தருணத்துக்கு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டே யிருக்கிறது. தருணம் வாய்த்தால் உடனே வெளிப்படும். இத்தகைய மக்களை மக்களோடும், மக்களைக் கடவுளோடும் ஒப்புரவாக்கவே நம் பெருமான் இயேசு கிறிஸ்து வந்தார் என்று வேதம் கூறுகிறது. ஆனால் மண்ணினாலும் பொன்னினாலும் விளையும் இத்தற்பொழிவு ஆண்டவருடைய நோக்கத்தை எதிர்த்துப்பாழாக்கப் பார்க்கிறது. "உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோல அயலானிடத்திலும் அன்புகூரவேண்டும்" என்பதுதான் ராஜ பிரமாணம்.

> "ஆகிலும் உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல அயலானிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்று வேதவாக்கியத்திற் கண்டிருக்கிற ராஜபிரமாணத்தை நிறைவேற்றினால் நீங்கள் செய்கிறது நன்று". (யாக் 2:8.)

ஒரு கிறிஸ்தவன் எப்படி மற்றவனைக் கொள்ளையடித்துச் சுகிக்கிறானென்றுதான் எனக்கு விளங்கவில்லை.

மண்ணும் பொன்னும் எங்கே நுழைகிறதோ அங்கே மக்களிடையே தற்பொழிவும் நுழைந்து நன்னோக்கங்களைப் பாழாக்குமென்று கண்டதினாற்றான் அசிஸிநகர் பிரான்செஸ் மகாத்மா தன் சங்கத்துக்கு எந்தவிதமான சொத்தும்


இருக்கக்கூடாதென்ற திட்டத்தை முக்கியப்படுத்தினர். இவரும் மற்ற சகோதாரும் கூடித்தொண்டாற்றிய போது மலைக்குகைகளில் வசித்து வந்தனர். "சங்கத்தின்போரால் சொத்திருந்தாலென்ன?" என்று இவரைக்கேட்டதற்கு "சொத்தும் வேண்டாம், அதைக் காக்கத் துப்பாக்கியும் வேண்டாம்", என்று பதிலுரைத்தாராம்.

பூமியில் உறவினர், சம்பத்து முதலியனவற்றை விட்டு விட அழைக்கப்படும் துறவியை உற்று நோக்கில் அவன் நஷ்டத்தையல்ல, பெரும் ஆதாயத்தையே, கண்டடைகிறுன்.

"என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது சகோதாரரையாவது சகோதரிகளை யாவது தாயையாவது தகப்பனையாவது நிலங்களை யாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மை யிலே இம்சைகளோடுகூட நூறத்தனையாக வீடு களையும் சகோதாரரையும் சகோதரிகளையும் தாய் களையும் பிள்ளைகளையும் நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும், அடைவானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

(மார்க்கு 10 : 29—30)

சிற்றில்விற் றேன்றிச் செகமெலாம் வீடுகொண்டான்
முற்றத் துறந்த முனி.



ஆசிரமத்தொண்டர்கள் போஜனசாலைக்கு வெளியே சிற்றுண்டி அருந்தல்.



கிறிஸ்துகுல ஆசிரம சமையலிடமும்
போஜனசாலையும்.

## 5. பக்தி.

காணப்படாததும் நித்தியமானதுமான பரம்பொருளை கண்டடைவதே ஆசிரமவாசிகளின் நோக்கம். இப்பரம் பொருளே குருக்குலத்துக்கு உயிரும் சுவாசமுமாயிருந்தார். மேலும் கடவுளின் பரிபூரண ஜீவனையடைவதற்கு ஆசிரம வாசிகளைத் தூண்டியேவி யுதவியது அவர்களுடனிருந்த ஆசிரியராகிய ஜீவன்முக்தரின் முன்மாதிரியும், அவர்கள் கையாடிய சந்தியாதியானமுமாகும்.

இந்த ஜீவன்முக்தர் குருக்குலத்துக்குத் தாயுந்தகப்பனு மாயிருந்தார். இவர் கடவுளல்லவென்றாலும் கடவுளின் தன்மை இவரில் பிரதிபிம்பித்துக்கொண்டிருந்தது.

> "நாமெல்லாரும் முக்காடில்லாத முகத்தால் ஆண்டவரின் மகிமையைப் பிரதிபிம்பித்து, ஆவியாகிய ஆண்டவரால் உண்டாவதுபோலவே, அந்தச்சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமாகிறோம்." (II கொரி. 3 : 18)

இதனால் கடவுள்தன்மையை மாணவர்களும் மற்றவர்களும் இவரில் கண்டறிந்து தெளிந்தனர்.

இந்த ஆசிரமவாசியாகிய ஜீவன் முக்தர் உலகக்கட்டுகளை யறுத்துத் துறவியானதுமன்றி, இதனிலும் விடுவதற்கு அதிகக் கஷ்டமான "நான், எனது" என்னும் அகங்கார மமகாராதிகளையும் வெறுத்துத் துறவெய்தினர். தற்காலத்

திலும் இந்திய சந்நியாசிகளுக்குள் இவ்வபிப்பிராயத்தைக் காணலாம். சில வருடங்களுக்குமுன் தென்னாட்டுக்குப் போயிருந்தபோது அங்கே ஒரு மலைக்குகையில் ஒரு துறவியைக் கண்டேன். அவர் பெயரை அறிய விருப்பங்கொண்டு அவரிடம் விசாரித்தேன். புன்னகைகாட்டி அமைதியாய் இருந்ததே அவர் எனக்குக்கொடுத்த பதில். நானோ அவரை விட்டுவிடாது மறுபடியும் வலியுறுத்திக் கேட்டபடியால் இறுதியாக "சுப்பிரமணியனென்று சொல்லிக்கொள்வார்கள்" என அமைதியாகப் பதிலளித்தார். இவர் இவ்வாறு சொல்லக்காரணமாயிருந்தது ஒரு சந்நியாசி "நான், எனது" என்றதற்குச் செத்தவன் என்ற இந்துமதக் கோட்பாடுதான். சுப்பிரமணியன் செத்துக்கடவுள் ஜீவிக்கிறாரென்பதே அதன் கருத்து. இதைப்பல கள்ளப்பண்டாரங்களும் உபயோகிக்கத் தொடங்கிவிட்ட படியால் இத்தகைய வார்த்தைகளுக்குத் தற்காலத்தில் மதிப்பற்றுப் போய்விட்டது. என்றாலும் இதன் உட்கருத்தை நாம் மறக்கக்கூடாது. இது பவுலப்போஸ்தலனுடைய கருத்துக்கு நெருங்கிய பொருத்தமுடையது.

> "கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டேன்;
> ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனிமேலோ நான்
> அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்;
> நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்
> கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத்
> தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தெய்வகுமாரனைப்
> பற்றும் விசுவாசத்தினாலேதான்." (கலா 2 : 20)

"நாம் இனிப் பாவத்துக்குத் தொண்டுசெய்யாதபடி பாவசரீரம் அவமாகும்பொருட்டு நமது பழைய மனுஷன் அவரோடு சிலுவையில் அறையப்பட்ட தென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 6 : 6)

"மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரம் பாவத்தி னிமித்தம் மரித்ததாயிருக்கும், ஆவியோ நீதியி னிமித்தம் ஜீவனாயிருக்கும்". (ரோமர் 8 : 10)

யானென தென்னுஞ் செறுக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

ஏறக்குறைய முப்பத்தாறு வருடங்களுக்கு முன் மதுரை யிலிருந்த 17 வயதுள்ள ஒரு வாலிபன் திடீரென்று தன் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். இவன் தன் வீட்டை விடும்போது ஒரு சிறு கடிதத்தில் "என்னைத் தேடவேண் டாம், நான் என் தகப்பனைத் தேடப்போகிறேன்" என்று எழுதிவைத்துவிட்டு வீட்டைத்துறந்தான். புகைவண்டியில் ஏறிப் பிரயாணப்பட்டு திருவண்ணாமலை வந்து சேர்ந்தான். திருவண்ணாமலை சேர்ந்தபின் திறந்திருந்த கோயில் மூலஸ் தானத்திற்குள் சென்று வணங்கி ஆனந்தமடைந்தார். சில நாட்களிற்குப்பின் கோயிலைச்சார்ந்த ஆயிரங்கால் மண்டபத் தில் மௌன தவமிருந்தார். சில துஷ்ட மனிதர் இவரைப் பரியாசம்செய்து, கற்கள் ஓடுகளை இவர்மேலெறிந்து இம்சை செய்ததால், ஓர் இருண்ட இடத்திலே இருந்த பாதாள லிங்க மறைவில் ஒதுங்கி பல பூச்சி முதலிய ஜெந்துக்கள் இவரைக்கடித்தும் பொறுமையாக நிஷ்டையிலிருந்தார்.

நாளடைவில், இவரை உற்றுநோக்கியவர்கள் ஒரு பக்த னென்று கண்டு மரியாதை செய்யத் தொடங்கினுர்கள். பின்பு மலையில் துறவியாக வசித்து வருவதையறிந்த அவரது தாயும் அங்கேவந்து அவருக்கு உதவிசெய்து கொண்டிருந்து, அவ்விடத்திலேயே மரித்து மலையடிவாரத்தில் அடக்கம் பண்ணப்பட்டார்கள். இப்போது அங்கேதான் ஆசிரமமொன்றை நிறுவி சில சீஷரோடு வசித்து வருகிறுர். இவர்தான் ரமண மகாரிஷி என்பவர். மூன்ருண்டுகளுக்குமுன் நான் இவரை நேரிற் கண்டேன். இவர் அதிகமாய்ப்பேசும் பழக்கமுடையவரல்ல வென்ருலும் என்னுடன் மிக்க மன மகிழ்ச்சியோடு பேசினுர். ஜெபம் என்பது கடவுளுடைய பிரசன்னத்தை உணர்ந்து மகிழ்வதுதானே என்று வினவினேன். மலர்ந்தமுகத்தோடு, "நான் போவது எங்கே! என் ஆண்டவன் எங்குமிருக்கிருனே" என்று பதிலளித்தார்.

துறவும் பக்தி விருத்தியும் மக்களுக்கு இன்றியமையாதன. ஆனுல் மாமிசம் ஒருவனை நித்திய ஜீவனிலிருந்து தவறும் மனச்சார்பிலேயே நடத்துகிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

> "நானே மாம்சமானவன், பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டவன். எப்படியெனில் நான் நடப்பிக்கிறது எனக்கேதெரியவில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததையே செய்கிறவனுயிருக்க நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக் கொள்ளுகிறேனே. ஆதலால் அதை நடப்பிக்கிறது

நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே. என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமா யிருக்கிறதில்லை யென்பது எனக்குத் தெரியும். விரும்புதல் என்னிடத்திலுண்டு, நன்மை செய்தலோ என்னிடத்திலில்லை. எப்படியெனில், நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும் பாத தீமையையே அனுசரிக்கிறேன். இப்படியாக நான் விரும்பாததைச்செய்தால் அதை நடப்பிக் கிறது நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே. ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டு என்கிற ஒரு பிரமா ணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனை பார்த்தால், கடவுளின் நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியப்படுகிறவனாய் இருக்கிறேன். என் அவய வங்களிலோ வேறொரு பி ர மா ண த் தை க் காண்கிறேன். அது என்மனதின் பிரமாணத் துக்கு விரோதமாய்ப் போராடி என் அவயவங்களி லிருக்கும் பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறை யாக்குகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலை யாக்குவார்? நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்க் கடவுளுக்கு ஸ்தோத்திரம். இப்படியாக நானே என் மனதினாலே கடவுளின் நியாயப் பிரமாணத்துக்கும் மாம்சத்தினாலே பாவப் பிரமா ணத்துக்கும் தொண்டு செய்கிறவனாயிருக்கிறேன்."

(ரோமர் 7 : 14—25)

என்னும் வசனங்களில் பவுலப்போஸ்தலன் இந்த உண்மையைத் தன் சொந்த அனுபவத்திலிருந்து எடுத்துக்காட்டி விளக்குகிறார். 24-ம் வசனத்தை உற்றுநோக்குவோமானால் இந்தப் போராட்டத்தில் அப்போஸ்தலனுக்கிருந்த தாங்க முடியாத துன்ப நிலைமை எவ்வளவு பயங்கரமானதென்று நமக்கு விளங்குகிறது. "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்னும் இந்த வார்த்தையில் அடங்கியிருக்கும் கசப்பையும் துன்பத்தையும் அளவறுத்துக்கூற யாரால் இயலும்! அப்போஸ்தலனனுபவம் நம்மிலுமில்லையோ?

திரும்பத்திரும்ப மீறுந்தீ நினைவடக்கி நான்
சீர்பொருந்திடுவ தெப்போதோ?
கரும்பல்ல தீது கற்றூளை யெனவெறுத்து
களங்கமற் றிருப்பதெப்போதோ?

இவ்வளவு கசப்பும் இன்னலும் நிறைந்த போராட்ட வாழ்க்கையாயிருந்தாலும் சேற்றில் தாமரை வளர்ந்து அழகிய பூப் பூப்பது போல் ஒரு பக்தனது ஆத்மா மாமிசத்தோடிருக்கும் இப் போராட்டங்களிலெல்லாம் வெற்றி சிறந்து ஜெயகோலம் பூண்டு உன்னத பதவியையடைகிறதென்பதையும் மறு பக்கத்திற் காண்கிறோம். இதுவே சாந்தி நிலை.

"ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் கிறிஸ்து இயேசுவுக்குள் என்னைப் பாவம் மரணம் என்பவற்றின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே".

(ரோமர் 8 : 2)

என்று அப்போஸ்தலன் கூறுவதில் விடுதலே என்னும் பதத்தை உபயோகிக்கிருர். முன்பு நான் கூறிய முக்தியென்பதும் வீடென்பதும் இதுவே................ஒருவன் இழிவான "நான்" என்பதற்குச் சாகும்போது தன் உன்னதமான "நானே" கிறிஸ்து இயேசுவுக்குள் கண்டடைகிருன். "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்பதன் உட்பொருள் இதுதான்.

> பற்றுக பற்றற்ருன் பற்றினையப் பற்றைப்
> பற்றுக பற்றுவிடற்கு.

தீமையினின்று நம்மை விடுவிப்பது கடவுளைப் பற்றிக் கொள்ளும் விடாப்பிடியே.

இவ்வாறு பண்டை ஆசிரமவாசிகளின் ஜீவன் முக்தி நிலையையும் அப்போஸ்தலனது ஜீவன் முக்தி நிலையையும் நாம் ஒத்திட்டுப் பேசும்போது ஒரு காரியத்தில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

> "நாம் அனைவரும் கடவுளின் குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் முற்றறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகிப் பூரண புருஷனுகும் வரைக்கும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வந்தெட்டும் வரைக்குமே".
> (எபே. 4 : 12)

என அப்போஸ்தலன் அடைய விரும்பியது, கிறிஸ்து மூலமாய்க் கிடைக்கும் பரிபூரண ஜீவனையே என்பதை மறந்துவிடக்கூடாது. எனினும், உலகத்தில் இம்மட்டும்

எழுந்த உத்தமரும் பக்தருமான சகலரையும் திவ்விய ஜீவனை யடையும்படி செய்த வெளிச்சம் ஒன்றான கடவுளின் வெளிச்சந்தான்.

> "எந்த மனுஷனுக்கும் வெளிச்சத்தைத் தருகிற மெய்யான வெளிச்சம் உலகத்தில் வந்துகொண் டிருந்தது". (யோ 1 : 9)

அவரவர்கள் கண்டறிந்த அளவில் தங்களை ஒப்புக்கொடுத் துப் பணியாற்றினர். பரமபிதாவினுடைய பார்வையில் சகல தேசத்தாரும், சகல வருணத்தாரும், சகல வகுப்பாரும் ஒன்றே. அவருக்குள் ஓர வஞ்சகமில்லை.

> "கடவுள் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எந்த ஜாதி யானாயினும் அவர் அங்கீகாரத்துக்குரியவனென் றும் நிச்சயமாய் அறிந்துகொள்ளுகிறேன்."
> (அப்போ 10 : 34—35.)

என்று காட்டியிருக்கிறபடியே உண்மையும் உத்தமமும் எங்கேயிருக்கிறதோ அங்கே கடவுள் தம்மை வெளிப்படுத் துவதுமன்றி, தம் ஜீவனைப் பெறவும் உதவி செய்கிறார்.

எனவே கிறிஸ்தவர்களுக்குள் பல மலைவுவினாக்கள் எழக்கூடும். அவற்றுள் இரண்டு முக்கியமானவை, விண்ணைத்துறந்து மண்ணைப் புரக்க மாமிசத்தில் வந்த சரித் திர கிறிஸ்துவின் மூலமாயன்றி கடவுளைக் காண முடியுமா? பாவ மன்னிப்பினாலும் பாவத்தினின்று விடுதலையடைவ தினாலும் கிடைக்கிற மீட்பு கிறிஸ்துவையன்றி வேறு

வழியில் வருமா? என்பதே. ஒருவாறுய் இக்கேள்விகளுக்கு முன்னரே பதில் கொடுத்தாயிற்றென்றே சொல்லவேண்டும். அன்றியும் கடவுள் ஓர வஞ்சகமுள்ளவரல்லவென்பது நாம் கவனிக்கவேண்டிய முக்கிய காரியம். கிறிஸ்தவர்களிற் பெரும்பான்மையோர் கிறிஸ்தவ தேசத்தில் அல்லது கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கிறிஸ்தவர்கள். இதனால் இவர்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றிய அறிவு பிறப்புரிமையாகவே கிடைத்துவிடுகிறது. இவ்வாறு கிறிஸ்துவையறிய இடமின்றிப் பிறந்து வளர்ந்து இறந்துபோகும் எண்ணிறந்த மக்களை அன்பு வடிவான கடவுள் அந்தகாரத்தில் விட்டு விடுவாரோ?

நம் பெருமானிடம் வந்து சத்தியத்தைத் தெளிய விளக்கிக் காட்டும்படி கேட்டவர்களுக்கு அவர் தெளிவாக பதிலளிக்கவில்லை. உவமைகளாலும் மறைமொழிகளாலும் சத்தியத்தைக் கூறினர். சத்தியத்தையறிய மக்களின் முயற்சியும் அவசியமென்று கருதியே இவ்வாறு கூறினர். பிறவிக் கிறிஸ்தவர்களில் பெருமை பாராட்டுகிற எத்தனைபேர் இவ்வாறு ஆண்டவருடைய கருத்தைக் கடைப்பிடித்துச் சத்தியத்தைக் கண்டடைந்தோம்? காரியம் இவ்வாறிருக்க உண்மையுள்ளவர்களுக்குக் கடவுள் தன்னை எப்படி மறைத்துக்கொள்ள இயலும்! பாவத்திலிருந்து விடுதலைபெற்று கடவுளின் பிரசன்னத்தைத் துய்த்து மகிழ்ந்திருத்தலே வீடென்றால், பாவத்தை வெறுத்து மாமிச சிந்தையைத் துறந்து கடவுளை ஆவலோடுதேடும் உத்தமருக்கு ஓர வஞ்சகமற்ற பரம தகப்பனாகிய கடவுள் தன்னை மறைப்பாரோ!

Q6
N33

அப்படியானல் கிறிஸ்து என்னத்திற்கு? என்று கேட்கலாம். ஆனல் மாமிசத்தில் வந்து, மரித்து உயிர்த்தெழுந்து பரத்துக்கேறிய கிறிஸ்துவைத் துய்க்குமொருவன் இப்படிக் கேட்பானே என்பது எனக்கே ஐயப்பாடாகும்! கொஞ்சங் கொஞ்சமாக அல்லது பங்குபங்காக திவ்வியஜீவனையடைவது ஒன்று; உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின்மேல்வைக்கும் திட நம்பிக்கையால் அவர்பாடுகளின் ஐக்கியத்திலும் உயிர்த்தெழுதலின் வல்லமையிலும் பங்கு பெறும் பரிபூரண திவ்விய ஜீவனையடைவது மற்ருென்று. இதனல் புறமதஸ்தரில் தங்களை முற்றும் தத்தம் செய்து பெரும் பணியாற்றும் பக்தரை நாம் காணும்போது சந்தேகமாவது பொருமையாவது ஆணவமாவது அடையாமல், உன்னதமானவரின் சீஷனுகிய நான் இந்த அளவுக்குக்கூட ஏறித்தேறவில்லையே என்று மனதில் குத்தப்படவேண்டும். எண்ணமற்றுக் கிடக்கும் நம்மை வெட்கப்படுத்தவும் குத்தியெழுப்பவும் கடவுள் இவ்வாறு செய்கிருர்.

ஆங்கில திருச்சபையின் அங்கமாயிருந்து பின்பு ரோமான் சபையைச் சேர்ந்த பக்தன் பேபர் என்பவர், கடவுளின் கரைகடந்த அன்பை ருசித்து அதை ஆங்கிலத்தில் பாட்டாக பாடியிருப்பதை ஈண்டு தமிழில் மொழி பெயர்த்துள்ளேன்.

விருத்தம்.

கடவுளினீறிலாத கருணையங்கடல் விசாலம்,
மடமை சோராணவத்தால் மக்கள் நாம் வரையறுப்போம்;
திடமிது தெய்வன்புக்கோர்மட்டுமுமளவுமில்லை,
இடமுள தெவர்க்குங்காண்பீரெம்பிரானிதயத்துள்ளே.

விஷயம் இவ்வாறிருப்பதால் குருகுல மாணவர் கடவுளைக்கண்டறிய ஜீவன் முக்தரின் சாதனையும் போதனையும் பேருதவியாயிருந்தது. இன்றைக்கும் கிராமவாசிகளிடையே மெய்த்தொண்டாற்றும் பக்தர்களை அம்மக்கள் காணும்போது நீரே கண்கண்ட கடவுள் என்று கூறிப் பணிகின்றனரன்றோ! இவ்வாறு நேரிடும்பொழுது பக்தர்கள் தங்களைத்தாழ்த்திக் கடவுளை உயர்த்திக் காட்டவேண்டியது இன்றியமையாத காரியம்.

> "நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமென்று பிரத்தியட்சமாகிறது; அது மையினாலல்ல ஜீவனுள்ள கடவுளின் ஆவியினாலும், கற்பலகைகளிலல்ல சதை இருதயங்களாகிய பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது."
>
> II. கொரி. 3 : 3.

பவுல் மகாத்துமா இப்படிக் கூறுகிறபடி கிறிஸ்தவர்களாகிய நம்மில் கிறிஸ்துவின் ஜீவனிராவிட்டால் புறமதஸ்தர் கிறிஸ்து பெருமானைக்காண்பதெப்படி! நான் இங்கிலாந்திலிருந்த பொழுது மேல்நாட்டு பேர்க்கிறிஸ்தவர்களின் தீய பழக்க வழக்கங்களை உற்று நோக்கிய ஒரு இந்து வாலிபன் கிறிஸ்து மார்க்கத்தில் ஐயுற்றவராய் என்னுடன் பேசினார். கிறிஸ்தவர்களையல்ல கிறிஸ்துவையே பார்க்கும்படி நான் அவரிடம் சொன்னேன். ஆயிரக்கணக்கான வருடங்களாய்த் தன்னைப் பின்பற்றி வரும் இம்மக்களின் ஜீவனை கிறிஸ்து மாற்றாவிட்டால் நான் அவரை எப்படி நம்பக்கூடும்? என்று அவர் பதிலுரைத்தார். அப்படியிருக்க கிறிஸ்தவர்களாகிய நாம்

மாமிசத்திலும் உலகத்திலும் அகப்பட்டுக் கெட்டு, பார்ப்போருக்கும் கேட்போருக்கும் மாய்மால வார்த்தைகளால் சாக்குப்போக்குச் சொல்லப் பார்ப்பது நாம் உயிருடன் செத்துப்போய்க் கிடப்பதையே மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறது. பண்டைய ஜீவன் முக்தர் தாம் கண்ட அளவில் கடவுளை தவறின்றி வெளிப்படுத்தினரென்பதே எனது துணிவு.

இரண்டாவது, சந்தியா தியானம். பகலும் இரவும் சந்திக்கும் நேரமே சந்தியா நேரமாகும். விடியற்காலம் விண்மீன் மறைந்த பின்னும் கதிரவன் வெளிப்படு முன்னும் இடையிலுள்ள நேரம் சந்தியா நேரம். அப்படியே மாலை கதிரவன் மறைந்த பின்னும் விண்மீன் தோன்றும் முன்னும் உள்ள நேரம் சந்தியா நேரம். கம்பீரமான இந்த நேரம் தெண்ணீர்த்தடாகங்களிலும்மலர்க்காவனங்களிலும் முதிர்ந்த மலர் முகைகளை மலரச் செய்து மணத்தைப் பரப்பும் அமிர்த நேரமாகையால், தன் வனப்பைக் கண்டு களிகூரும் மக்களுடைய உள்ளத்தையும் ஆத்துமத்தையும் மலரச் செய்து ஞான வாசனையூட்டுகிறது. மெல்லிய வெளிச்சமும் கண்ணைக்கவரும் பலநிற மேகங்கள் விண்ணில் மாறி மாறி வரும் சுந்தர தோற்றமும் செறிந்த இந்த நேரத்தின் மாண்பைக் கூறி விளக்குவதெங்ஙனம்! கடவுளின் படைப்புத்திறத்தை ஆழ்ந்து நோக்கும் புத்தி மாத்திரம் நமக்கிருந்தால் காலையில் கதிரவனெழுமுன்னும், அஸ்தமன வேளையிலும், எவ்வளவு கம்பீரமான தோற்றத்தைக் கண்டுகளி

கூறலாம்! அந்தோ! எண்ணிறந்த போக்குக் கண்ணில்லையோ! கதிரவன் வரவையறிவிக்கும் அருணோதயத்தின் பெருமையையும் விவரிப்பதெங்ஙனம்!

வானங்கள் கடவுளின் மகிமையைப் பிரஸ்தாபிக்கின்றன;
ஆகாயமண்டலம் அவர் கரங்களில் கிரியைக் காட்டுகிறது.

பகல் பகலுக்கு வார்த்தைகளை உரைக்கிறது;
இரவு இரவுக்கு அறிவைத் தெரிவிக்கிறது.

அவைகளின் சத்தம் கேட்கப்படாத பேச்சுமில்லை, பாஷையுமில்லை.

அவைகள் பூமியெங்கும் பரவியிருக்கின்றன,
அவைகளின் வசனங்கள் பூமியின் கடைசிவரைக்கும் செல்லுகின்றன;
அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.

அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருக்கிறது,
பராக்கிரமசாலியைப்போல் தன் பாதை வழியே ஓட மகிழ்ச்சி கொள்ளுகிறது.

அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு
அவைகளின் மறு முனைவரைக்கும் சுற்றியோடுகிறது;
அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.


(சங். 19 : 1—6)

இந்த அருமையான நேரம் ஆதிமுதல் பக்தரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அதனால் இந்தப் புனித நேரத்தை கடவுளாராதனைக்கு ஏற்ற நேரமென்று கண்டறிந்தனர்.


சூரியப் பிரகாசமதிகமில்லாத மேல் நாட்டுவாசியான ஒரு ஐரோப்பிய அம்மாள் கீழ்நாட்டுப் பெரியார் ஒருவரிடம்,

"உங்கள் நாட்டில் சூரியனைக் கும்பிடும் மூடவழக்கம் இருப்பதென்ன?" என்று கேட்டார்களாம். அதற்கு அவர், "மேல்நாட்டாராகிய உங்களுக்குச் சூரியனை மகிமையோடு பார்க்கப்பாக்கியமில்லை, இருந்தால் நீங்களும் எங்களைப் போலவே கும்பிடுவீர்கள்" என்றாராம்! இந்தியாவில் பிறந்து வளர்ந்த ஒரு மேல் நாட்டுப் பிள்ளையை ஐந்து வயதானபோது ஐரோப்பாவுக்கு அழைத்துக் கொண்டு போனார்களாம். அங்கே மேகமறைவிலிருந்து சற்று வெளி வந்த சூரியனைக் காட்டி "அம்மா, கண்மணியே, பார்த்தாயா சூரியனை?" என்று சொல்ல, "இதை நாங்கள் சந்திரனென்றல்லவோ இந்தியாவில் கூறுவோம்" என்று களங்கமற்று அக்குழந்தை பதிலளித்ததாம்! நம் பாரத தேசம் சந்தியாவின் மகிமை நிறைந்த தேசமாயிருப்பது கடவுள் நமக்குத்தந்த இயற்கைக் காட்சியின் பாக்கியங்களில் ஒன்றாகும்.

இந்த அருமையான சந்தியாப்பொழுதில் சுந்திரமான இயற்கைத் தோற்றங்களைக் கண்டு பேரின்பந்துய்க்கும் பொருட்டு குருகுலமாணவர் வைகறையில் துயில்நீத்து, காலைக் கடன்களை முடித்து ஆயத்தமாயிருப்பார்கள். பெருந்தகைமை வாய்ந்த விடியல் நேரம், வீடு-இயல்-நேரம்=முக்தியின் மாண்பு பொருந்திய நேரம் என்பதைக் குருக்குல மாணவர் தெற்றென வறிந்திருந்தபடியால், எழுப்புவாரின்றியும் தூண்டுவாரின்றியும் அருணோதயத்தைக் காண ஆயத்தப்பட்டனர். அன்றியும் அவர்கள் தங்களைத்தாங்களே



கிறிஸ்துகுல ஆசிரம ஜெபாலயம்—ஒரு
பக்கத்துப் பார்வை—சுற்றியிருக்கும்
பிரகாரத்தில் வளரும் பூஞ்செடிகள்.
இதற்கு வெளியே சுற்றி திருமதில்.



கிறிஸ்துகுல ஆசிரம ஜெபாலயங்கட்ட கல் கொண்டுவருதல்.

நடத்தும் தகுதி பெற்றிருந்தனர். எனவே கதிரவனெழுகின்ற காலையிலிறைவனைத் தொழும் பெரும் பேற்றை நாடோறும் பெற்று தங்கள் உள்ளான மனுஷனை வளர்த்து வந்தனர். பகற்பொழுதில் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து முடித்து மாலைப்பொழுதின் இன்பந்துய்ப்பதற்கு ஆயத்தமாக எதிர்பார்த்திருப்பர். இந்த இன்பமான சந்தியாநேரத்தைக் கைக்கொண்டொழுகியதால் பண்டைய ஆசிரமவாசிகள் பெற்றபேறு மிகப்பெரியதென்றே சொல்லுவேன்.

மலைகள், கடல், புல்தரைப் பள்ளத்தாக்குகள், காடுகள் முதலிய இயற்கை வனப்பு நிறைந்த கலிலேயா நாட்டில் வளர்ந்த நம்பெருமானாகிய கிறிஸ்து விடியல் நேரமும் அந்தி நேரமுமாகிய சந்தியாநேரத்தை எவ்வளவாக விரும்பிக் கையாடினரென்பதை மெய்த்திருமறையில் தெளிவாய்க் காண்கிறோம்.

> "அதிகாலையில் இருட்டோடே அவர் எழுந்து வனாந்திரமான இடத்திற்குப் போய் அங்கே ஜெபித்துக் கொண்டிருந்தார்." (மார்க் 1 : 35.)

இயற்கைவனப்பை உள்ளபடியே கண்டு மகிழும் கண்ணனாகிய நம்பெருமான் உலகத்தைப்படைத்த பரமதகப்பனோடு இச்சந்தியா இன்பத்தையும் அதன் பயனையும் எவ்வளவாய்த் துய்த்திருக்கவேண்டும்! இத்தகைய இயற்கைத் தோற்றம் ஒரு பக்தனுக்கு ஞான திரவியமாகவுமிருக்கலாம். எங்ஙனமெனில் சரீரக்கண்களால் காணப்படாத கடவுளை, காணப்படும் இயற்கை உறுதிப்படுத்துகிறதன்றோ!

ஆனால் இயற்கைவனப்பின்மேல்கொள்ளும் மிதமிஞ்சிய தேட்டத்தால் வெறும் உள்ளக்கிளர்ச்சியுற்றுக் கடவுளை மறந்து, இயற்கையையே வணங்கி வழிபட நேரிட்டாலும் நேரிடக்கூடுமென்பதை நான் மறந்தவனல்ல. கடவுளின் மகிமையை வெளிப்படுத்தும் இதே இயற்கை வனப்பைச் சில மக்கள் காணும்போது மாமிசக் கிளர்ச்சியுற்று சிற்றின் பங்களைத் துய்க்க நாட்டங்கொள்ளுவதுமுண்டு. முக்கியமாய் பாடகர்களும் நடிகர்களும் கவிராயர்களும் இப்பெருஞ் சிக்கலில் அகப்படுவர். இதனால் இயற்கைவனப்பைக்கண்டு களிப்போர் வெறும் உள்ளக்கிளர்ச்சிக் கிடந்தராதிருக்க வேண்டியதுமன்றி, மாமிசக்கிளர்ச்சிக்கும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இயற்கைவனப்பை ஞான திரவியமாகத் துய்ப்பதற்குக் கடவுளின் கிருபை இன்றியமையாதது.

> "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் ஆண்டவரின் அப்பத்தைப்புசித்து அவர் பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் ஆண்டவரின் சரீரத்தையும் இரத்தத்தையும் பற்றிய விஷயத்தில் குற்றத்திற்காளாகிறான். ஒருவன் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்."
>
> (I கொரி. 11 ; 27—28)

என்று அப்போஸ்தலன் நற்கருணை விஷயத்தில் கூறுகிறபடி, இந்த இயற்கைவனப்பையும் அடாதவகையில் துய்ப்பவன் ஆக்கினைக்குள்ளாவான்.

இந்த ஆசிரமவாசிகள் பக்தி வளர்ச்சிக்குக்குதவியான கடவுள் வழிபாட்டை இருவிதமாகக் கைக்கொண்டொழுகினர். ஒன்று தனித்தனியாகவும், இரண்டாவது எல்லாரும் கூடிவந்தும் கடவுளை ஆராதித்தனர். கூடிவந்து ஆராதிக்கும் பொழுது மந்திரம் பாடல் சந்தப்பாட்டல் முதலியவைகளை இந்திய இசைமுறைக்கேற்ப நன்றி செலுத்தியும் துதித்தும் வேண்டுதல்செய்தும் கடவுளை ஆராதித்தனர்.

இதுபற்றி இந்திய கிறிஸ்தவ ஆசிரமங்கள் மிக்க முயற்சியெடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றன. ஏனெனில் இந்திய திருச்சபையில் இந்திய சங்கீதமும் கலையறிவும் வளர்ச்சியுற வேண்டுமன்றோ! தற்கால இந்திய திருச்சபை தன் சொந்தச் சங்கீதத்துக்குக் கடைசியிடம் கொடுத்திருப்பதை அறியாதார் யார்? சில இடங்களில் சில சமயத்தில் பாடினாலும் கிழவரும் சிறுவரும் ஏனோ தானோவென்று தாளமும் இராகமும் இடம்பெற இயலாது தவிக்கக் குளறிக் கொட்டுவர். ஆங்கிலப்படிப்பில் முற்றிய வாலிபரோ முகில்கண்ட குயிலினம்போல வாயை இறுக்கி மூடிக்கொண்டிருப்பர். மேல் நாட்டுச் சங்கீத முறைப்படி பாட வாத்தியக் கருவிகள் உங்காரஞ்செய்தாலோ தங்களையறியாமலே வாலிபரின் தலைகள் உயருகின்றன. அவர்கள் வாய்களும் குரல்வளையும் விசாலமாகின்றன. கூடுமானால் கோவிலின் அடிப்படையும் குலுங்கத்தக்கதாக முழு பலத்துடன் கத்துகின்றனர். என்னே நமது அடிமைத்தனம்!

நம் வாலிபர்களில் எத்தனைபேர் இந்திய சங்கீதத்தைப் பயின்று ஆராதனைகளைச் சிறப்பிக்க முன் வருகின்றனர்?

மேல்நாட்டுச் சங்கீதத்துக்கும் அதற்குவேண்டிய இசைக் கருவிகளுக்கும் செலவழிக்கிற பணத்தையும் நேரத்தையும் ஒரு கிறிஸ்தவன் இந்திய சங்கீதத்துக்குச் செலவழிக்கக் கூடுமானல் எவ்வளவு பெரிய பண்டிதனுகலாம்! தங்கள் குரலியல்புக்கு மாருன ஒன்றை எவ்வளவு முயற்சித்துக் கற்ருலும் பயன் படாதென்றே சொல்லுவேன். கோழி மயிலைப்போலவாவது மயில் கோழியைப்போலவாவது கூவ முடியுமானல் இதுவும் முடியும். எத்தனை முயற்சித்தாலும் இந்தியன் ஐரோப்பியனைப் போலவாவது ஐரோப்பியன் இந்தியனைப் போலவாவது பாடமுடியாது. தொன்மைக் கலைவல்லுநர் அவ்வத்தேயத்தின் இயற்கைத்தன்மையை உற்று நோக்கி இசை நூற்களையும் வகுத்தனர். அப்படியே இசைக்கருவிகளையும் உண்டாக்கினர். இந்தவுண்மையை மறந்தலைவோமானல் இரண்டுங்கெட்டவர்களாய் திரிச்சங்கு சுவர்க்கத்திலேதான் தங்க நேரிடும்! கீழ்நாட்டுச் சங்கீத உலகத்திலும் நாம் இடம் பெருேம். மேல்நாட்டுச் சங்கீத உலகத்திலும் இடம் பெருேம்.

சில ஆண்டுகளுக்குமுன் என் நண்பரொருவர் அழைப் புக்கிணங்கி நானும் அவரும் ஆராதனைக்கு அவர் கோயி லுக்குப் போனேம். ஆலயத்தில் நுழைந்தபின் அங்கே நடந்த நடைமுறைகள் நான் ஒரு மேல்நாட்டின் ஆலயத் திலிருப்பதாகவே எண்ண என்னை ஏவியன. முடிந்து வெளியேவந்தவுடன் என் நண்பர் என்னிடம் ஆராதனை எப்படி இருந்ததென்று கேட்டார். நானே எரேமியா

8–22-ண்டைச் சற்றுமாற்றி சென்னையில் பிசின்தைலமும் தமிழ்நாட்டில் ரணவயித்தியனுமில்லையோ! பின்னையேன் என்ஜனமாகிய குமாரத்தி மேல்நாட்டு முறைகளைத் தேட வேண்டும்? என்று கூறினேன். நம்நாட்டின் வழக்கபழக்கங்களை மறந்து இயற்கைக்கு மாருக நடந்தது என் மனதுக்கு மிகவும் வேதனையாயிருந்தது. மேல் நாட்டுப் பாடல்களை அதே ராகத்தில் இருந்தபடியே தமிழ்ப்படுத்திப் பாடுவது மிகவும் விபரீதமாகும். இந்த விபரீதத்தை மக்கள் உணரும்படி தமிழ்க் கீர்த்தனைகளை இருந்தபடியே வரி வரியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழ் ராகத்திலேயே கமக முதலியவற்றோடு சபை முன் பாடிக்காட்டுவது என் பழக்கம். நான் இவ்வாறுபாடுவதை வேடிக்கையாக எண்ணுவோர் தாங்கள் செய்யும் வேடிக்கையை உணராதே போவதுதான் எனக்கு வியப்பாயிருக்கிறது. ஆனல் மேல்நாட்டார் கீழ் நாட்டிற்காணும் அரிய நூல்களைத் தங்கள் தாய்மொழியில் பெயர்த்தெழுதும்போது தங்கள் தங்கள் நாட்டின் யாப்புக் கொப்ப மொழி பெயர்க்கின்றனர். இப்படியே நாமும் செய்வதில் தப்பன்று. நண்பர் அழகுசுந்தரம் கிங்ஸ்பரி, ஞா. சாமுவேல் ஐயர், மதுரைச் சந்தியாகோ போதகர் முதலிய பல பக்தர்கள் இம்முறையைக் கைக்கொண்டு மேல் நாட்டுப்பாடல்களை தமிழ் யாப்புவிதிகள் இராகங்களுக்கொவ்வ மொழி பெயர்த்து இயற்றியிருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

ஒரு ஆலமரம் நமது நாட்டில் எவ்வாறு முளைத்துக் கிளைத்து இயற்கையாகவே மிகப் பெரிய மரமாகிறதோ

அவ்வண்ணமே மேல் நாட்டாருக்குள் கிறிஸ்து மார்க்க முறைமை, பாடல்கள் முதலியவை அத்தேச இயற்கையின் படி வளர்ந்தோங்கிருக்கின்றன. இயற்கைக்கு மாறான தொன்றும் அங்கு நேரிட்டதில்லை. அப்படியே இந்தியா விலும் கிறிஸ்து மார்க்கம் வளர்ச்சியுற்றுச் செழித்தோங்க வேண்டுமானால் இந்தியாவின் இயற்கைத் தன்மையை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும். அவ்வத்தேயத் தின் இயற்கை வனப்பைக்காட்டும் பலவகைப் பூக்களிருக் கின்றன. நம் பெருமானது வருகையின் நாளில் மற்ற தேசத் தார் தங்கள் தங்கள் தேசத்துக்குக்குரிய மலர்களைக்கொண்டு வந்து ஆண்டவரின் திருவடிகளிற் சாத்தும்பொழுது நம் பாரத தேயத்துக்குரிய தாமரை மலரையல்லவோ நாமும் கொண்டு போய்ச் சாத்தவேண்டும்! கடவுளுடைய ராஜ்யத் தில் சர்வ தேசத்தாரும் வரும்பொழுது தங்கள் தங்கள் இயற்கை வளங்களைக் கரங்களிலேந்தி வருவர்.

> "ஜனங்களின் மகிமையையும் மேன்மையையும் அதற்குள் கொண்டுவருவார்கள்." தரிசனம் 21 : 26.

நாம் கொண்டு போக வைத்திருக்கும் இயற்கை வளம் எது?

இந்திய கிறிஸ்தவர்களின் நிலைமை இவ்வாறானதுக்குக் காரணமென்ன வென்றறிய விரும்புவோர் இந்திய திருச் சபை சரித்திரத்தைச் சற்று ஆராய்தல் வேண்டும். இங்கே திருச்சபையை நிறுவி வளர்த்துவருகிற பக்தர்கள் அறிந்தோ அறியாமலோ செய்தவற்றால் இந்திய திருச்சபை பாரத தேயத்தின் இயற்கை மணத்தில் பற்றில்லாமல் போக

நேர்ந்தது. இதை விளக்குவான் வேண்டி மேல் நாட்டு "மிஷனெரி" போதகர்களின் முற்கால எண்ணம், இடைக் கால எண்ணம், தற்கால எண்ணம் என மூன்று பங்காக்கு கிறேன்.

முற்கால எண்ணம் :—முதன் முதலாக இந்தியாவில் கிறிஸ்து மார்க்கத்தின் நற்செய்தி கூறவந்த மிஷனெரிகள் இந்தியா மூட தேசமென்றும், இந்தியாவிலிருந்த சமய நெறிகள் பிசாசினுடையதென்றும் எண்ணினபடியால் இந்து மார்க்கக்கலை முதலியவற்றை அடியோடு அழித்துவிட்டுக் கிறிஸ்து மார்க்க நெறியையும், தங்கள் தங்கள் வெவ்வேறு சபைகளின் சம்பந்தமாக தங்கள் நாட்டில் பரம்பரையாக ஏற்பட்டுள்ள ஆசாரங்கள், சபாசடங்குமுறைமைகள் முதலிய வற்றையும் நிறுவ முயன்றனர். நம் தாய்மொழியிலமைந்து கிடக்கும் மார்க்க சம்பந்தமான அரிய பதங்களையும்கூட வெறுத்தனர். கிறிஸ்து பெருமானது சுவிசேஷ ஒளிக்கும் இந்தப் பிசாசின் இருளுக்கும் ஒற்றுமையாவது தொடர் பாவது இல்லையென்றனர். இக்காரணம் பற்றியே புற மதஸ்தரை அஞ்ஞானிகளென்றழைத்தனர். எனவே புறமதங்களிலிருந்து எதையாவது கற்பதும் தெய்வ தூஷண மென்றனர். இந்தியாவில் புறமதஸ்தர் பாடும் இராகங்கள், அதற்கிசைவான தம்புரு, தித்தி, புல்லாங்குழல், முகவீணை, யாழ், தாளக் கருவிகள், மத்தளம் முதலிய இன்னிசைக் கருவிகளையும், மங்கள காரியங்களில் வாசிக்கும் நாகசுரம், தவுல் முதலிய வாத்தியங்களும் பிசாசுக்குகந்த

தென்றெண்ணியபடியால் இவைகளை மிகுதியும் வெறுக்கத் தலைப்பட்டனர். இம்மட்டோ! குடுமிவைத்தல், மாமிசம் புசியாதிருத்தல் முதலிய புறம்பான காரியங்களையும் வெறுத்தகற்றினர். திருநெல்வேலி ஜில்லா வாசியான முத்தையா பிள்ளை அவர்கள் கிறிஸ்தவரானபோது குடுமியெடுக்க மறுத்ததால் மிஷன் தலைவர் ஞானஸ்நானங் கொடுக்க மறுத்து மூன்று மாதம் வாதாடினர். முத்தையா பிள்ளை ஒரே தீர்மானமாய் நின்றபடியால் பாரசிந்தையுள்ள ஓர் அத்தியக்ஷர் மிஷனெரிகளை வேண்டிக்கொண்டபடி சில மாதங்களுக்குப் பின் ஞானஸ்நானங் கொடுத்தார்.

சர்வகலாவல்லமை வாய்ந்த பண்டித ராமாபாய் அவர்கள் பெருந்துறவியும் பேரறிவும் அருந்தொண்டும் படைத்தவர்கள். எனினும், இவர்கள் "புத்திரன்" என்ற பதத்தை அதின் மூல அர்த்தம் 'அஞ்ஞான அர்த்தம்' என்று தள்ளி நம்பெருமானுக்கு அதை வழங்க மறுத்து, "பையன்" என்றதற்குச்சரியான மராத்திபதத்தை வழங்கினர்! இப்படி வளர்க்கப்பட்ட திருச்சபையின் நிலைமை எவ்வாறு இருக்குமென்பதை நான் விவரிக்க அவசியமில்லை.

இடைக்கால எண்ணம்.—இடைக்கால 'மிஷனெரிகள்' இந்திய சமயங்களும் கடவுளைத்தேடி யடைய விரும்பிய சமயங்கள்தான் என்பதையறியவும், அவற்றின் அவா முற்றும் நிறைவேறுதல் கிறிஸ்துபெருமான் மூலமாய்த்தான் என்று எண்ணவும் வந்தனர். இந்துசமயம் முடியில்லாத அரசனைப்போலிருப்பதாகவும் அதற்கு கிறிஸ்து பெருமானே

வைரமுடி யென்றும் போதித்தனர். புறச்சமயங்களைத் தூற்றவும் வேண்டாம், போற்றவும் வேண்டாம்; அதின் பேச்சே எடுக்காமல் நம் பெருமானது நற்செய்தியையே மாத்திரம் கூறுவதே நமது கடமையென்று வேறு சிலர் கூறினர்.


தற்கால எண்ணம்:—தற்காலத்தில் பக்தியில் சிறந்த சிலருள்ளத்தே ஆச்சரியமான எண்ணங்கள் தோன்றி யுள்ளன: கிறிஸ்தவர்கள் கடவுளுடைய வழியில் நடக்கவும் அவரை மகிமைப்படுத்தவும் தவறியபோது, நம்மை வெட்கப் படுத்தி மனதைக் குத்தி நம்மைச் சீர்திருத்தும்படி கடவுள் புறமதஸ்தரைக்கொண்டு தன் மகிமையை வெளிப்படுத்து கிறார் என்பதே. கிறிஸ்து பெருமானை நன்கு அறிந்த நாம் கண்ணாரக் காண்கிறபடி, மலைப்பொழிவின் சாரமாகிய பகை வர்மேல் அன்பும், சந்தோஷமாய்த் துன்பத்தைப் பொறுத் தலும், தீமைசெய்வதற்குப்பதில் நன்மை செய்வதுமாகிய அஹிம்சா முறையை நாம் மறந்தலைகிறதைக் கண்ட கடவுள், அதை (தன் சிலுவையைச்) சுமக்கும்படி புறமதஸ்தரைத் தெரிந்து கொண்டார். முன்கூறியபடி உள்ளத்தில் உண் மையுடையவர்கள் மூலமாய்த் தன்னை வெளிப்படுத்துகிறார். வெறும் மூளையறிவும், போதகமும் கடவுளுக்குப் பிரிய மில்லை. "உள்ளத்தில் உண்மையிருக்கவே" விரும்புகிறார். அதினால் உள்ளத்திலிருக்கிற உண்மையின்படியே மக்களுக்கு தன்னையும் ஏராளமாய்த் தந்து தன் குடும்பமாகிய இவ்வுலகத் தினரை நடத்திக்கொண்டு வருகிறார். இதனால் நான் கிறிஸ்து பெருமானின் மேன்மையை மென்மேலும் அறிகிறேனே

யன்றி நம்பிக்கையில் குறைவுபட்டுப் போனதேயில்லை. ஆண்டவரது பெருந்தன்மையை விவரிக்க வல்லவர் யார்? ஆண்டவரை நன்குயறிந்தும் அவருக்குத் தங்களை ஒப்புக் கொடாதவர்களிலும் அவரைச் சரியாக அறியாத நிலையி லிருந்தும் அவருக்குத்தங்களை ஒப்புக்கொடுக்கும் மக்களே முந்துவர். இது பற்றி சி. எப். ஆண்டுரூஸ் (அந்திரேயா) அய்யாவர்கள் கூறுவதாவது :

"நான் இந்தியாவில் விசேஷித்த விதமாய் அடிக்கடி பார்த்ததில் இந்தியமக்கள் கபடற்றவர்களும், தற்பொழி வில்லாதவர்களும், பெருந்தன்மையும் தெய்வ பக்தியுமுள்ள வர்களுமாயிருப்பதைக் கண்டேன். அன்றியும் ஆண் பெண் இருதிறத்தாரிடையிலும் அவர்கள் தின வாழ்க்கையில் காணப்படுகிற ஆவியில் எளிமையும், பிறர் பொருட்டுத் துன் பத்தைச் சகிப்பதும், கிறிஸ்தவனாகிய என்னிலும் மேம்பட் டிருப்பதைக் கண்டேன். ஆகையால் இவர்கள் கிறிஸ்தவ தேசத்தில் பிறவாத காரணம் பற்றி இவர்களைக் கிறிஸ்துவுக் குப்புறம்பானவர்களென்று நான் ஒருபோதும் சொல்லேன். மேல்நாட்டுக் கிறிஸ்தவர்களால் எண்ணமின்றி "அஞ்ஞானி கள்" என்றழைக்கப்படும் கீழ்நாட்டார் எனக்கு கிறிஸ்து மார்க்கத்தின் உட்பொருளைக் காட்டுகின்றனர். கிறிஸ்துவின் போல் தங்களை அழைத்துக்கொள்ளுகிற மேல் நாட் டாரோ தங்கள் தப்பெண்ணப்படியே தங்கள் மனம் போன படி பாக்கியமில்லாத ஒன்றை உண்டாக்கிக்கொண்டு கிறிஸ்து பெருமானைப் புறக்கணித்தனர்.



ஜெபாலய உள்புறம் — சபா மண்டபம் — முகத்துவாரத்தை நோக்கும் விதமாக எடுத்த படம்.



கிறிஸ்துகுல ஆசிரம ஜெபாலயம் உள்புறம்—மூலஸ்தானம். சலவைக்கல் மத்தியில் சிலுவையும் ஒரு பக்கத்தில் திராக்ஷச் செடியும், மறுபக்கத்தில் "கோதுமைமணி நிலத்தில் விழுந்து செத்தாலொழிய தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைத்தரும்" என்ற கிறிஸ்துவின் வசனத்தை விளக்கும் சித்திரமும் வெட்டப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் புதிய இடங்களில் புது முகங்களைக் காணும்போது கிறிஸ்து பெருமானின் பிரசன்னமே கிட்டியதாக உணர்ந்தேன். இப்படி அடிக்கடி நிகழ்வதால் இது இயற்கைக்கு விரோதமானதன்று. இதைத் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் அவர்கள் முகங்களில் கிறிஸ்து பெருமானைக் கண்டதாகவே சொல்லுவேன். இது ஒரு கருகலான பாஷைதான். இதைப்பற்றி வேறு விதமாய்ச் சொல்ல முடியாது. எவர்களுக்குக் கற்பிக்க வந்தேனோ அவர்கள் மூலமாய் நான் பெரிய காரியங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். மேல் நாட்டின் மாமூல்படி பயிற்சி பெறாத இவர்கள் மூலமாய் சுவிசேஷத்தினுட் பொருளை உற்று நோக்கியறியக் கிடைத்தது. யோ. 1 : 9-ல் எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கும் ஒளியைப்பற்றிப் புத்தகத்தில் வாசிப்பது ஒன்று; மக்களின் தினசரி வாழ்க்கையில் அதைக் கண்டறிவது வேறு", என்பதே.

இன்னொரு பெரிய இரகசியத்தையும் நான் கண்டு மகிழ்கிறேன். நமது நாதனின் திரு அவதாரத்தின் பரிபூரண அர்த்தத்தை அறிய திருச்சபைக்கு வெளியிலுள்ள பல புறமதஸ்த பக்தர் நமக்கு உதவி செய்கிறார்கள். யூத பக்தர்கள் கடவுளின் ஆண்மை தத்துவத்தையே பிரதாபமாக பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவில் ஓர் பெண்ணுக்குரிய சகல சாந்த உருக்க இரக்க அன்பின் சொரூபத்தையும் பார்க்கிறோம். இந்து பக்தர்கள் கடவுளை "அன்னை", "தாய்", "அம்மை", "மாதா" என்று பாராட்டுவது வழக்கம்.

"அம்மையே யப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்த வாரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவ பெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவ பெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே".

மாணிக்கவாசகர்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும் குறுகிய சிந்தையர் இல்லாமற் போகவில்லை. ஒரு அம்மாளவர்கள் தான் நிறுவிய நிலையத்துக்கு ஆசிரமமென்ற பேரிட்டிருப்பதை யறிந்த மேல்நாட்டு போதகர் ஒருவர், "இந்து சமயத்திலும் நன்மையுண்டா? அதிலிருந்து வந்த ஆசிரமமென்ற பெயரை இதற்கு என் வைக்கவேண்டும்"? என்று கேட்டாராம்! இந்து

சமயத்தில் நாம் எடுத்தாளக்கூடிய நன்மைகள் உண்டென் பதற்கு ஆசிரமம் என்னுமிப்பதம் கிறிஸ்தவர்களிடையே நுழைந்ததே தக்க ஆதாரமாகும்.

எனவே இந்திய கிறிஸ்தவ ஆசிரமங்கள் இந்திய திருச் சபைக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றன வென்பதை ஈண்டு கூறுதிருக்க முடியாது. உலகந்தோன்றிய நாள் முதல் ஒவ்வொரு தேசத்துக்கும் கடவுள் தந்த இயற்கை வளங்களுண்டென்பதுண்மையானுல் இந்தியாவுக்கு அவர் தந்த இயற்கை வளங்களென்னவென்பதைத் தெற்றென வறிந்து திருச்சபைக்கு உரிமையாக்குவது ஆசிரமங்களின் நோக்கமாயிருத்தல் வேண்டும். முன் கூறியபடியே இந்திய இயல், இசை, நாடகம், சிற்பம், அனுபவ அறிவு, பக்தி முறை, இசைக்கருவிகள் முதலிய சகல வளங்களையும் திருச் சபை தனக்கு உரியதாக்கிக்கொண்டு கடவுளின் ராஜ்ய மாகிய புதிய எருசலேமைச் சிறப்பிக்க வேண்டுமென்பது எத்தனை அவசியம்! அப்போதுதான் திருச்சபையாகிய மணவாட்டி தன் மணவாளனுகிய கிறிஸ்து பெருமானுக்கு உவந்தவளாயிருப்பாள்.

> "புதிய எருசலேமாகிய திருநகரம் கடவுளிடத்தினின்று வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மண வாட்டியைப்போல் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது".
>
> தரிசனம் 21 : 2

இந்த பெருந் தொண்டாற்றுவது ஆசிரமவாசிகளின் ஓர் பெரிய கடமையாகும்.

எந்த மார்க்கமாயிருப்பினும் அவ்வத்தேயத்தின் இயற்கைக்கு மாறுபடாமல் வளர்ந்தாலன்றி நிலைபெறு தென்பதை நான் ஓரிடத்தில் சொல்லிக்கொண்டிருந்த பொழுது "இந்து முறைப்படி மாத்திரம் செய்வது போது மோ, மகம்மதிய முறைப்படியுமாக வேண்டாமோ"! என்று ஓர் மிஷனெரி என்னைக்கேட்டார். அவரது மனம் இவ்வாறு போன போக்குக்காக நான் மிகவும் வருந்துகிறேன்! மகம் மதியரின் பழக்கவழக்கங்கள் இந்திய இயற்கை முறைபடி யல்ல வென்பதையும், இவ்விஷயங்களில் அவர்கள் அரபி நாட்டாரைப் பின்பற்றித் தங்களை வேறு ஜாதி போலாக்கித் தவறினரென்பதையும், இவர் அறியார்போலும்! கிறிஸ்த வர்கள் விழிப்புள்ளவர்களா யிராவிட்டால் மேல்நாட்டுப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றித் தாய்நாட்டின் இயற்கை வாழ்வை இழக்கநேரிட்டுக் கலகத்திற்கும் கட்சிக்கும் காரண ராவாரென்பதற்கு மகம்மதியரின் போக்கு ஏற்றசான்றாகும்.

இயற்கை வாழ்க்கையை வற்புறுத்துவதால் பலருள்ளத் தும் தப்பெண்ணம் விளையலாம். எனவே இங்கு அதை விளக்கிக் காட்டுவதவசியம். இந்திய திருச்சபை இந்திய இயற்கைக் கொத்ததா யிருக்க வேண்டு மென்று நான் சொல்லுவது பெருந்திரளான இந்து மக்களால் சிறு கூட்டமான திருச்சபை நசுங்குண்டுபோகாமல் அவர்களின் தயவைச்சம்பாதிப்பதற்கென்ற நோக்கத்தினலல்ல. பெருந் திரளால் திருச்சபை விழுங்கப்பட்டுப் போகுமென்று நான் பயந்தால் பிரிந்திருக்க வேண்டுமென்றே சொல்லுவேன்.

நித்திய ஜீவாதிபதியின் மார்க்கத்தை நசுக்க யாராலியலும்! அல்லது இது புறமதஸ்தரை ஏமாற்றி அகப்படுத்த எண்ணிச் செய்யும் ஒரு தந்திரமுமல்ல. கோயமுத்தூரில் ஆசிரமத்தைப் பற்றி ஒருதடவை பேசியபோது ஒரு வாலிபன் எழுந்து என்னிடம் "இந்தத் தந்திரமான புதுமுறையில் இந்துமார்க்கத்தைத் தாக்கப் பார்க்கிறீர்களோ?" என்று கேட்டார். என் உள்ளப்பாட்டின் உண்மையை உள்ளபடி அறிந்திருந்தால் இந்தக் கேள்வியை அவர் கேட்டிருக்க மாட்டாரென்றெண்ணுகிறேன்.

> "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ நீதியுள்ளவைகளெவைகளோ தூயவைகளெவைகளோ அன்புக் குரியவைகளெவைகளோ நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்". (பிலி. 4 : 8)

என்பதுதான் என் நோக்கம்.

யோவான் சுவிசேஷகன் 1:1-ல் குறிப்பிட்டிருக்கும் "லோகாஸ்" என்ற மூலகிரேக்க பதத்தை உபயோகித்திருப்பது கிரேக்க ஞானிகளைப் பிரியப்படுத்தும்பொருட்டு அல்ல. அதில் உண்மை விளங்கியபடியால் மனமகிழ்ச்சியோடு அதைச்செய்தார். கள்ளப் போதகங்களைக் கண்டிப்பதில் இவர் எவ்வளவு வல்லமை நிறைந்தவரென்பதை நாமறிவோமே! இதே கருத்தடங்கிய 'ஓம்' என்ற பதத்தை

இந்து பக்தர்கள் அநாதிபரம் பொருளும், சர்வத்திற்கும் ஆதிமூலமும், சிருஷ்டி கர்த்தாவுமான ஈசனாகிய கடவுளைக் குறிக்கும்படி உபயோகித்து வருகின்றனர். வார்த்தை மாம்ச ரூபமாக வந்த இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிட இப்பதம் உபயோகிப்பதற்குத் தக்கதே. திருச்சபையிற்றோன்றிய வேதநாயக சாஸ்திரியார் முதலிய பக்தர்கள் இப்பிரணவத்தை விரும்பிப் பாடல்களில் சேர்த்துப்பாடினர். இத்தகைய புனிதமானதைக் கிறிஸ்தவர்கள் தங்கள் வாயில் வைத்து உச்சரிக்கவும் அஞ்சுகின்றனர். தமிழ் நாட்டில் ஓர் ஊரில் சில கிறிஸ்தவ நண்பர்கள் என்னை கேட்டுக்கொண்டபடி நான் இந்திய முறையில் ஒரு ஆராதனை நடத்தியபொழுது, எல்லாவற்றையும் மனமகிழ்ச்சியோடு சொல்லிக்கொண்டு வந்த சபையோர்கள், "சாந்தி, சாந்தி, சாந்தி ஓம்" என்பதை என்னுடன் கூடிச்சொல்ல அஞ்சி வாய்மூடிக்கொண்டிருந்தனர். நாம் அறியவேண்டியவற்றைச் சரிவர அறிந்து மனத்தெளிவடையாததையே இப்படிப்பட்ட சமயங்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆசிரமவாசிகளின் பக்திக்கு அவர்கள் கையாடின மௌன தியான ஜெபவேளைகளும் பேருதவியாயிருந்தன. நம் கிறிஸ்தவ ஆராதனைகள் ஜெபக்கூட்டங்களில் மனிதர் சப்தமே பிரதானமாகக் கேட்கப்படுகிறது. மௌனநிலையில் காத்திருந்து, கடவுளின் பிரசன்ன உணர்வடைந்து, அவர் மெல்லிய சத்தத்தைக்கேட்க நாம் அவருக்கு இடம் கொடுக்கிறதில்லை. தனியே மௌன ஜெப தியானத்திலிருப்பது

நல்லதுதான். ஆனால் பக்தர்கள் சபை கூடிவரும்போதும் ஏகமாய் ஒருமனப்பட்டு, மௌனமாய் அமர்ந்திருந்து, கடவுளுடைய பிரசன்ன உணர்ச்சியின் அனுபவத்தால் சுரக்கும் இளைப்பாற்றுதலும் ஆனந்தமுமடைந்து, அவர் மெல்லிய சப்தத்திற்கு செவிகொடுப்பதும் மிகவும் அவசியம்.

> "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்திலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலிருக்கிறேன் என்றார்." (மத் 18 : 20)

இவ்விதமாய் அவர் திவ்விய கமலத் திருவடிகளைச் சேவிப்பது அவர் சாயலுக்கொப்பாக நாம் மாறி புதிய ஜீவனையும் வல்லமையுமடையச்செய்யும்.

> "நாமெல்லாரும் முக்காடில்லாத முகத்தால் ஆண்டவரின் மகிமையைப் பிரதிபிம்பித்து, ஆவியாகிய ஆண்டவரால் உண்டாவதுபோலவே, அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமாகிறோம்". (II கொரி 3 : 18)

கிறிஸ்து மார்க்கம் அந்நியமார்க்கம் என்ற அபிப்பிராயம் நமது தேசத்தினருக்குள் பலமாய் குடிகொண்டிருக்கிறது தவறு என்று நாம் உணர்ந்தால், இந்தத் தவறான அபிப்பிராயத்தை மாற்றி சத்தியத்தைப் பரவச்செய்ய நாம் வெகு கவலையாய் நடந்துகொள்ளவேண்டும். இதற்கு உபகாரணமான ஒன்றையும் அசட்டை செய்யலாகாது. நமது உடை நடை வழக்க பழக்கங்கள் எல்லாம் சத்தியத்திற்கு

சாக்ஷி பகரவேண்டும். நாம் புசித்தாலும் குடித்தாலும் அவர் திருநாமமகிமைக்கென்றே செய்வோம். நாம் தொழுது கொள்ளும் ஆலயங்களும் ஏன் குளிர்நிறைந்த மேல்நாடுகளில் வசிக்கும் கிறிஸ்தவர் தங்கள் பரம்பரிய சிற்ப முறைப்படி "காத்திக்" கமானங்களோடு கட்டிக்கொள்வதுபோல் கட்டப் படவேண்டும்? நமது ஜனங்கள் மனதைக் கவர்ந்து அவர் களுக்கு ஆத்மீகக்கிளர்ச்சியுண்டுபண்ணும் அழகிய ஆலயச் சிற்பமுறை தமிழ்நாட்டில் எத்துணை சிறந்துவிளங்குகின்றன! இந்த ஆசிரமத்தில் தென் இந்திய ஆலய சிற்பமுறைப்படி கட்டப்பட்ட ஜெபாலயத்திற்கு கிராமஜனங்கள் எவ்வளவு ஆவலாய் வருகிறார்கள்! ஒருவரும் அவர்களை ஏவாமல் அவர்களே இந்த ஆலயத்திற்குத் தனியே வந்து பிரார்த்தனை செய்து போகிறார்கள். நான் இதைக் கண்ணாரக்கண்டிருக் கிறேன்.

மற்றவர்களுக்குமுன் ஆத்மீக சாக்ஷி பகர விரும்புவோர் அவர்களுக்கு விளங்கும் பாஷையில் பேசவேண்டும். அப் படியே நமது பக்திக்கடுத்த வழிவகைகளும் நமது ஜனங் களுக்கு இலகுவாக விளங்கும் இயற்கை முறைமையின்படி இருக்கட்டும். சங்கீதங்களோ, சாதனங்களோ, ஆலய சிற்பங் களோ, பிரசங்க நடைகளோ, வேறெந்த உபகாரணங்களானா லும் சரி, அவை எல்லாம் நமது ஜனங்களுக்கு விளங்காத 'அந்நிய பாஷை' யிலல்ல, அவர்களைப் பரவசப்படுத்தும் இயற்கை முறையின்படியேயிருக்கட்டும். "எல்லாம் பக்தி விருத்திக் கேதுவாகச்செய்யப்படக்கடவது".

"இப்படியிருக்க, சகோதரரே, செய்யவேண்டுவதென்ன? நீங்கள் கூடிவரும்போது ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வரமுண்டு. ஒருவனுக்கு சங்கீதம், ஒருவனுக்கு போதகம், ஒருவனுக்கு இரகசிய வெளிப்படுதல், ஒருவனுக்கு பரவசப்பேச்சு, ஒருவனுக்கு அப்பேச்சின் விளக்கம், எல்லாம் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது".

(I கொரி 14 : 26)


# 6. அஹிம்சை.

பலாத்காரஞ் செய்யாமைக்கு அஹிம்சையென்று சிலர் சொல்லுவர். புலாலுண்ணாமையை அஹிம்சையென்று மற்றும் சிலர் சொல்லுவர். இவ்வாறு அஹிம்சை எதிர்மறையாக மாத்திரமிராமல், சர்வ சிருஷ்டியோடும் வேறுபடாத ஐக்கிய மனநிலையுள்ளதாகவுமிருக்கிறது. இதையே கிறிஸ்தவர்களாகிய நாம் அன்பென்று கூறுகிறோம். அன்பின் கனியாகிய அஹிம்சை மக்களோடிருக்கும் சம்பந்தத்தில் மாத்திரமிருக்க வேண்டியதாயிராமல் சகல உயிர்களிடத்தும் இருக்கவேண்டிய ஆத்துமீக ஐக்கியமாயுமிருக்கிறதென்று ஒரு பெரியார் கூறுகிறார்.


> "அன்பில் பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயம் தண்டனையை எதிர் நோக்கியது; பயப்படுகிறவனோ அன்பில் பூரணப் பட்டவனல்ல. (I. யோவான் 4 : 18.)

என்று யோவான் கூறுகிறபடி அஹிம்சை (அன்பு) பயமறியாது. தான் பயமறியாதது மாத்திரமல்ல மற்றவர்களையும் பயமுறுத்தாது.

பயம், நம்பாமையையும் சந்தேகத்தையும் பகையையும் உண்டாக்கும் வித்தாயிருக்கிறது. எவனிடத்தில் அன்பில்லையோ அவனில் பயம் விளையும். இந்தப்பயம் பிறன் மேல் சந்தேகத்தையுண்டாக்கிக் கூட்டுறவைக் கெடுக்கும். பயத்தின் முடிவு பிரிவினையே.



கிறிஸ்துகுல ஆசிரம ஜெபாலயம்—அர்த்த மண்டபம்.
வெளியே முன்னிருப்பவை இரண்டு தண்ணீர் கல்
தொட்டிகள். இவைகள் மத்தியில் கல் தளம்.



மஹாகவி ரவீந்திரநாததாகூர்.

அன்பு அஹிம்சையின் மூலமாய்ப் பிறருக்குத் தன்னைக் கொடுப்பதால் பிறரிடத்திருந்தும் அன்பையே பெற்றுக் கொள்ளுகிறது. அன்பெனும் கதிரவன் அஹிம்சை யென்னும் கதிர்களைப் பரப்பும்பொழுது பயம், நம்பாமை, சந்தேகம், பகை முதலிய அந்தகாரம் பறந்தோடிப் போகிறது. இம்சைக்குக் காரணமாகிய உள்ளச்சமும், (சமு சயமும்) சினமும் அன்புக்குமுன் குடிகொள்ள இயலாது. அன்பில் முதிர்ந்தவர் எவ்விதமான வேற்றுமையுங்காணூர். மக்களுக்குள், குலத்துக்குக்குலமும், நிறத்துக்கு நிறமும், தேசத்துக்கு தேசமும், மதத்துக்கு மதமும், தற்பொழி வினாலும், பண ஆசையாலும், சச்சரவு செய்து மனம்வேறு பட்டு, மிருகங்களுக்குள் சிறியதைப் பெரியது இன்னற் படுத்தித் தின்றுகொண்டு இருப்பதுபோன்ற கொடுமை நிறைந்த இவ்வுலகத்திலும் இவ்வன்பர்கள் பிரிக்க முடியாத ஒரு கூட்டுறவையே காண்கிறூர்கள். இந்த ஒப்பற்ற நெறி யைக் கடைப்பிடித் தொழுகுவதையே சத்தியாகிரகமென்ற பெயரிட்டழைத்தார், காந்திஜீ. அன்பின் நெறியே சத்திய நெறியென்பது கருத்து.

அஹிம்சை நெறியில் ஒரு ஒப்பற்ற வல்லமை இருக் கிறது. இது அன்பில் விளைகிற ஆத்தும வல்லமையாகும். எனவே இது விலங்கினங்களுக்கிருக்கும் பலாத்கார வல்லமையல்ல. பகைவனை மீட்டு நண்பனுக்கும் வல்லமை இதுவே. உலகத்திற்றேன்றும் வன்கண்மையாகிய சகல பாறைகளையும் தகர்த்தெறியும் பொருட்டு நம்பெருமான்

ஆயத்தப்படுத்திவைத்துச்சென்ற ஆத்துமீகவெடி வல்லமை இந்த வல்லமையே. இதுவே மலைப்பொழிவின் சாரம். இது எதிரிகளின் மிருக பலத்தால் தோன்றிய சகல ஆயுதங்களையும் துருப்பிடிக்கப் பண்ணி, எதிரிகளைத் தன் வயப்படுத்துவது. "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்", என்று ஆண்டவர் கூறுவதால் இது ஒரு பலவீனமல்ல. பிறனுக்கு இன்னல் விளைக்காத முறையில் பகையை வெல்லும் வல்லமை. தன்னிலுள்ள மிருகபலத்தைத் தலை காட்ட விடாமல் தடுக்கும் தன்னடக்கமே இந்த வல்லமை.

"வலியவனிடத்தும் ஒத்தான்மாட்டினும் வெகுளிகாத்தல்*
பொலிவுசெய்யறமதென்னப் பொருந்துணைதனையர் தம்பால்,
நலிவுறு வெகுளி செல்லாதாதலால் நலியவற்று
மெலியவனிடத்துக்காக்கும் வெகுளியே அறமதென்பார்."

(பிரபுலிங்க லீலை.)

என்றதன்படி தன்னிலும் எளியார்மாட்டுப் பொறுமையாயிருப்பதே சரியான அஹிம்சா முறமையாகும். நமதாண்டவர் சர்வ வல்லவராயிருந்தும் சிலுவையிலறையப்பட்டிருந்த பொழுது பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று வேண்டிக்கொண்ட வல்லமையே இந்த அன்பின் வல்லமை.

---

*வெகுளி காத்தல் = கோபத்தை அடக்குதல்.

நிந்தனைசெய் திருப்பாணி நிரையழுத்திக் கொலைபுரியும்
வெந்தொழிலர் செய்வினையின் விளைவறியார் பொறுத்தருளும்,
எந்தையென வெழிற்கனவா யிதழவிழெம் பெருமானைச்
செந்தனிக்கோற் கொளுந்தேவைச் சிலுவைமிசைக் கண்டேனே.

(கிருஷ்ண பிள்ளை.)

மெய்யான அஹிம்சை ஆவியில் கோழை நெஞ்சு இராது. கோழைநெஞ்சிலும் பலாத்காரம் மேலானதென்று காந்திஜீ கூறுகிறார்.

இத்தகைய அஹிம்சை நெறிக்கு இது காலமல்லவென்றும், அது பின்னே கடவுளின் ராஜ்யம் வரும் பொழுதுதான் ஆகக்கூடியதென்றும் சிலர் கூறுகின்றனர். கடவுளுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று விசுவாசிக்கும் எவரும் இதைக்கைகொண்டொழுகவேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன். அன்றியும் நம்பெருமான் நிறுவிய கடவுளின் ராஜ்யம் இம்மைக்கே உரியது. கடந்த பெரிய யுத்த சமயத்தில் நான் ஐரோப்பாவுக்குப் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தபொழுது கப்பலோட்டி யொருவர் என்னுடன் அடிக்கடி பேசி வந்தார். அவருக்கு அஹிம்சை முறையில் நம்பிக்கையில்லாதிருந்ததால் என்னுடன் வாதஞ் செய்தார். கடைசியாக நாங்கள் பிரயாணஞ்செய்த கப்பல் ஜெர்மன் காரர் குண்டுபட்டுச்சேதமடைய கடவுள் செயலாய் நாங்கள் தப்பினோம். இந்த உயிர்சேதத்திலிருந்து தப்பிய பின், அந்தக் கப்பலோட்டி மறுபடியும் என்னிடம் வந்து நீர் இன்னும் அஹிம்சை முறையை நம்புகிறீரா ? என்று கேட்

டார். ஆம், ஆண்டவருடைய போதனை மாறக்கூடியதல்ல என்றேன். அவர் என்னை மிகவும் கோபித்து, வைது பயமுறுத்தினர். நான் பொறுமையோடிருந்ததால் அதைக் கண்ட மற்றவர்கள், தாங்கள் ஜெர்மன் எதிரிகளின்மேல் மிகக்கோபமாயிருந்தும், அவருடன் சேர்ந்துகொண்டு என்னைத் தாக்கவில்லை. இதன் பின், வேறொருவர் என்னுடன் தனியே பேசி நீர் கூறுகிற சமாதானப்பிரபுவின் போதகம் இந்த யுத்தகாலத்துக்கடுத்த தல்லவென்று சொன்னதுடன், நீர் ஐரோப்பாவில் இந்த எண்ணத்துடனிருந்தால் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்றும் கூறினர். எவர் எண்ணம் எவ்வாறிருப்பினும் இருக்கட்டும், கடவுளுடைய ராஜ்யம் இம்மையிலேயே வரவேண்டுமென்று நம்புகிற நாம் அவருடைய ராஜ்யத்தில் கையாடவேண்டிய அஹிம்சை நெறியைக் கைக்கொண்டொழுக வேண்டியதே. உத்தம கிறிஸ்தவனுக்கு இதில் ஐயப்பாடுண்டாதல் வியப்பிலும் வியப்பாகும். மிருக பலத்தையுடைய ஆயுதங்களைத் துருப்பிடிக்கப்பண்ணும் மகா வல்லமையும், புலிபோன்றபகைவனை ஆட்டுக்குட்டி போன்ற நண்பனுக்கும் வசிய வல்லமையும், இந்த அஹிம்சை நெறியிலிருப்ப துண்மையானல் இதைக்கைக் கொண்டொழுகத் தடையென்ன!

அஹிம்சா விரதத்தையனுசரிப்பவன் "நான்" என்பதற்கு அற்பமும் இடந்தாதிருத்தல் மிகமுக்கியம். எப்போதும் இவன் தன்னை மறந்தவனாய் மற்றவர்களுக்கு என்ன தேவை யென்பதையே கருதுவான். தன்சுகத்தையும்செல்

வத்தையும் இவன் விரும்பமாட்டான். இவ்விரதத்திற் கைதேறிய காந்திஜீ "அஹிம்சை விரதம் பூண்டவன் தனக் கென்று யாதொரு சொத்தையும் வைத்திரான்" என்கிறார்.

> "உன்னோடு வழக்காடி உன் உள் வஸ்திரத்தை எடுத் துக்கொள்ள விரும்புகிறவனுக்கு உன் மேல் வஸ்திரத்தையும் விட்டு விடு. ஒருவன் உன்னை ஒரு மைல்தூரம் வரக் கட்டாயஞ் செய்தால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னிடம் கேட்கிற வனுக்குக் கொடு, உன்னிடம் கடன் வாங்க விரும்பு கிறவனுக்கு முகங்கோணாதே". (மத். 5 : 40–42)

> "நீங்களோ உங்கள் சத்துருக்களில் அன்புகூருங்கள். நன்மைசெய்யுங்கள், திரும்பக் கிடைக்குமென்று கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். நீங்கள் உன்னதமான வருடைய பிள்ளைகளாயிருப்பீர்கள்; நன்றிகெட்ட வர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் அவர் நன்மை செய்கிறாரே". (லூக். 6 : 35)

இவ்வாறு நம்பெருமான் திருவாய் மலர்ந்தருளியதை உற்று நோக்குமிடத்து எதையும் தன்னுடையதென்றெண்ணிப் பற்று வைக்காதிருக்க வேண்டியதன் அவசியம் விளங்கு கிறது. இந்த "நான், எனது" என்பதை ஒருவன் விட்டு விலகுவது சுலபமானதன்றென்று ஏற்கெனவே கூறியிருக் கிறது. ஆனால் அஹிம்சை குறி நிற்கும் வீரனை "நான் எனது" என்னுந்தொடர்பு, புதுத்தளிர் விடும் இளவேனிற்

காலத்தில் பழைய பழுப்பிலைகள் உதிர்ப்பாரற்று மரங்களி லிருந்து உதிர்வதுபோல் தானாகவேவிட்டு ஒழிந்துபோம்.

"அன்பிலாரெல்லாந் தமக்குரியர்—அன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு"

என்ற வள்ளுவருரைப்படி இந்த அஹிம்சை நெறிநிற்பவன் நானென்பதை முற்றிலும் மறந்து பிறனுக்கென்றே பிழைப் பான்.

உலகத்தில் ஒருவன் தன் நண்பனுக்காக தன் உயிரைக் கொடுப்பதே முடியாதகாரியம். எனவே ஒருவன் தன் பகை வர் மீட்கப்பட உயிர்கொடுப்பது சுலபமோ? ஒரே இடத்தில் வசிக்கும் கூட்டுறவுக்குள் உதட்டிலுறவுகாட்டி உள்ளே சதி நினைக்கும் நயவஞ்சகர்களைப் பொறுப்பது மிகமிகக் கடின மான காரியமாகும். அன்றியும் சத்துருக்களைமாத்திரமல்ல நம்முடன்வசிக்கும் உடன்தொண்டர்கள், உறவினர், நம் மனப்போக்குக்கு இணங்கிவாராதபோது அவர்களையுங்கூடச் சிநேகிப்பது எவ்வளவு கடினமானதென்பது நமது தினசரி வாழ்க்கையிலறிவோம். என்றாலும் இவைகள் யாவும் அன்பு நெறியாகிய அஹிம்சையினால் நிறைவேறுகிறதென்பது உண்மை. ஆசிரம வாசிகள் இந்த ஒரே வழியில் சகல தீமை களையும் மேற்கொண்டொழுகுவர். இந்த அஹிம்சை புறாவைப்போல் கபடற்றது. எனவே இதுவெறும் பேதமை யல்ல. பாம்பைப்போல் விஷமுள்ளதாகவுமிருக்கும்.

அஹிம்சை மற்றவர் செய்யும் விரோதத்தையும் குற்றங் களையும் மன்னிப்பதுமாத்திரமல்ல, அவற்றைமறந்தும் விடும்.

"பொறுத்த லிறப்பினை யென்றும் : அதனை
மறத்த லதனினு நன்று".

வெறும் புலாலுண்ணுவிரதம் மாத்திரம் பூரண அஹிம்சை யாகமாட்டாது. புலாலுண்ணுதிருப்பதற்கு மூலகாரணமாயிருக்கிற ஜீவகாருண்யமே நமக்கு இன்றியமையாததாகும். புலாலுண்ணாத ஒருவன் வண்டியிழுக்க வன்மையில்லாத எருதின் வாலைமுறுக்கி ஓடித்துத் துன்புறுத்துவதும், கன்றுக்கு ஒரு சொட்டுப்பாலும் விடாமல் ஓட்டக்கறப்பதும் அஹிம்சையாகுமோ? அநியாய வட்டிக்குப்பணத்தைக் கடன்கொடுத்து, ஏழைகளை நெருக்கிஒடுக்கி, அவர்கள் நிலத்தைப் பறித்துக்கொள்பவர்கள் புலாலுண்ணாமையைக் கையாடுவது கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குவதற்கு ஒப்பாகும். புலாலுண்பதில்லை யென்று பெருமைபாராட்டும் இப்படிப்பட்ட எண்ணிறந்த மக்கள் இருக்கிறார்களே! எந்த நன்னெறியையும் உயிர்ப்பிப்பது ஆவிதான்; எழுத்தல்ல. எழுத்து கொல்லும் தன்மையுள்ளது.

எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணியிரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.

என்று தாயுமானவர் பராபரத்தினிடம் மன்றாடிக்கேட்ட தெய்வவருட் கருணையாகிய ஜீவகாருண்ய ஆவியே இந்த ஒப்பற்ற அஹிம்சை நெறியில் ஒருவனை உயிர்ப்பிக்கும்.

"இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? ஆயினும் அவற்றில் ஒன்றேனும் கடவுள் சந்நிதியில் மறக்கப்படுவதில்லை",
(லூக்கா 12; 6)

என்று நம்பெருமான் கூறுவதில் பரமபிதாவாகிய கடவுள் ஒவ்வொரு சிற்றுயிர்மேலும் கண்காணிப்பா யிருக்கிறாரென்பது தெளிவாகிறது. தாவரசாஸ்திரத்தில் அநேக நுட்பங்களைக்கண்டுபிடித்து உலகெங்கும் பெயர் பெற்றவரான ஜகதீசன் சந்திரபோஸ் என்னும் பெரியார், மரம், செடி, கொடிகளாகிய தாவரவர்க்கத்திலும் மக்களுக்கிருக்கும் உணர்ச்சிகள் உண்டென்று தக்க ஆதாரங்களுடன் காட்டியிருக்கிறார். ஒரு மரத்துக்கு மயக்க மருந்து கொடுத்து அதைப்பெயர்த்து வேறொரு இடத்தில் நட அது நோவில்லாமல் பிழைத்துக்கொண்டதாம். ஏனைய உயிர்களுக்கு இன்ப துன்பமிருப்பதுபோலவே தாவரவர்க்கத்திலு முண்டென்று விளக்கியுள்ளார். அன்றியும் மக்களுக்குத் தீமைசெய்யும் என்று வைத்தியர்கள் பயப்படுதற்கிடமான புழுப்பூச்சிகளுங்கூட மக்களுக்கு நன்மை செய்யும்படிக்கே கடவுளால் உண்டாக்கப் பட்டிருக்கின்றன என்று ஒரு வைத்திய ஆராய்ச்சியாளர் கூறுகிறார். அவைகள் இருக்கவேண்டிய இடம்விட்டு இருக்கக்கூடாத இடத்தில் சிக்கிக்கொண்டு தம் தொழிலுக்கு மாறானதைச் செய்யும்போதுதான் மக்களுக்கு இன்னல் விளைவிக்கின்றன. எனவே உலகத்தில் படைக்கப்பட்டதில் யாவும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து வாழவேண்டுமென்பதே கடவுளின் நோக்கம்.

ஆதலால் உலகத்தில் உயிர்களிடையே அன்பும் கூட்டுறவும் வளர ஆசிரமங்கள் அதிகமதிகமாய் உழைத்தல் வேண்டும். ஜீவகாருண்ய அறத்தை உலகத்தில் வளர்ப்பதால் போருக்கென்று ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் யுத்தக்கருவிகளையழித்துச் சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டும். தற்காலத்தில் ஆக்கப்பட்டுள்ள படைக்கருவிகள் மிகக் கொடூரமானவை. இனி போர்தொடங்குமானால் உலக முழுவதும் பாழாய்ப்போகுமென்பதில் ஐயமேயில்லை. ஆண் பெண் பிள்ளைகள் எல்லார்மேலும் பரவிக்கொல்லும் விஷப் புகையை அகத்தே அடக்கிக்கொண்டிருக்கும் வெடிகுண்டுகள் எதைத்தான் மீத்துவைக்கும் !

> " அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள் ; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை ", (எசாயா 2 : 4)

என்று எசாயாதீர்க்கத்தரிசி கூறுகிறபடி படைக்கலங்கள் யாவும் அழிக்கப்பட்டு தொழிற் கருவிகளாக ஆக்கப்படும் பூரண சமாதானம் வந்தாலன்றி உலகம் வாழப்போகிறதில்லை.

அமெரிக்கா ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் நிற வேற்றுமையால் கறுப்பு மனிதரை இகழ்ந்து ஒடுக்கி இன்னற் படுத்துவதால் உண்டாகும் பகையும் சச்சரவும் சமாதானத்தையல்ல போரையே குறிக்கிறது. நம் தேசத்தை ஆளும்

அதிகாரிகள் வியாபார விஷயத்திலும், அரசியல் விஷயத்திலும், இந்தியரை அடக்கிக் கீழ்ப்படுத்திக் கொள்ளையடிக்கப் பார்ப்பதும், கடவுள் மக்களுக்கென்று கொடுத்துள்ள சுய உரிமையை அவர்கள் பெறுதபடி தடைசெய்வதும், மக்களை மக்கள் ஒடுக்குவதும், யுத்தத்தையல்லவா குறிக்கின்றன! மண்ணையும் பொன்னையும் நாடி தேசத்துக்குதேசம் முனைந்து நிற்கிறது. இந்தியாவும் தீண்டாமையென்னும் மாய்கையிற் சிக்குண்டு தவிக்கிறது. உலக முழுவதையும் பற்றிப்பிடித்திருக்கும் சுயநலம் என்னும் எலும்புருக்கி நோயைப் பரிகரிக்கும்பொருட்டு முயலவேண்டியதை இராஜதந்திரிகள் அறவேவிட்டு, இதன் பலனாக விளையும் யுத்தத்தை தடுக்க வேண்டுமென்று ஆயுதப் பரிகாரண மகாநாடுகளை ஜெனிவா என்னும் மேனாட்டு நகரத்தில் அவர்கள் கூட்டி முயல்கின்றனர். இவர்கள் செய்யும் முயற்சி பூரண சுகத்தையளிக்கமாட்டாது. ஏனெனில் இவர்களும் இந்த நோய் வாய்ப்பட்டவர்கள். எனவே இதைப் பரிகரிக்க அஹிம்சையென்னும் மருந்தொன்றுதானுண்டு. இதைக் கொடுத்து சுகப்படுத்தும் சிலாக்கியம் பெற்றவர்கள் பக்தர்களும் தீர்க்கதரிசிகளும் ஆவர். அஹிம்சை விரதத்தை யனுசரிக்கும் ஆசிரமங்களை யுத்தவொழிப்பு வேலையைச்செய்யும் சமாதான சங்கங்களென்றே சொல்லவேண்டும்.



சாந்திநிகேதன ஆசிரமத்தில் இந்திய சங்கீத வகுப்பு, வாத்தியக் கருவிகள் வாசிப்பது, சித்திரம் வரைதல் முதலிய வித்தைகளில் மாணவர்கள் பாண்டித்தியமடையும்படி விசேஷித்த முயற்சி செய்கிறார்கள்.



சாந்திநிகேதனத்தில் ஓர் வகுப்பு. மஹரிஷி தேவந்திரநாதர் தாகூர் நாட்டி வளர்த்த பல விருக்ஷங்கள் நிழலில் வகுப்புகள் நடக்கும்.

# இரண்டாம் பாகம்.

## இந்தியாவில் தற்காலத்திலுள்ள ஆசிரமங்கள்.

### 1. சாந்திநிகேதனம் ஆசிரமம்.

இந்த ஆசிரமத்தை நிறுவினவரும் உலகமெங்கும் புகழ் பெற்ற கவிவல்லுநருமான கவி ரவீந்திரநாதர் தாகூரின் தகப்பனாகிய மகரிஷி தேவேந்திரநாதர் தாகூர் தன் ஆத்தும சாந்திக்காகப்பற்பல இடங்களுக்குச்சென்ற பக்தன். இப்படி சென்றுகொண்டிருந்த நாட்களில் கல்கத்தாவுக்கு ஏறக்குறைய 100 மைல் தூரத்திலுள்ள போல்பூருக்கு 10 மைலில் ஒரு சமவெளியில் வந்து தங்கினர். மத்தியில் ஒரு மேடும் இயற்கை வனப்பும் செறிந்த இந்தஇடத்தில் ஒரு இடத்தை கண்டபோது இது ஜெபத்துக்கும் தியானத்துக்கும் ஏற்ற இடமென்று மகரிஷி கண்டார். காணவே அந்த இடத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டு 1863ஞ அங்கே ஒரு உய்யானச்சோலையை நிறுவினர். அதில் விருந்தினருக்கு ஒரு விடுதியும், ஒரு ஆலயமும் கட்டி, ஆசிரமமாக அமைத்தார். இதுவே சமாதான வாசஸ்தலமெனப் பொருள்படும் சாந்திநிகேதனம். இது மகரிஷி கொடுத்த பெயர். மகரிஷி அமர்ந்திருந்து தியானம்பண்ணி ஜெபித்துவந்த இரண்டு மரங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. அதின் கீழ் சலவை கல்லொன்று நட்டிருக்கிறது. அதில் மகரிஷியவர்கள்

ஜெபத்தின் சாரமாகிய : "அவரே என் வாழ்க்கையின் முசிப் பாறுதல், அவரே என் உள்ளத்தின் மகிழ்ச்சி, அவரே என் ஆவியின் சாந்தி," என்னும் சொற்களை வெட்டியிருக்கிறது.

மேன்மையான ஆன்ம ஈடேற்றத்தையே நாடித்தேடிய மகரிஷியின் மகனாகிய கவி ரவிந்திரநாதர் தாகூர் அவர்கள் தன் தகப்பனார் நிறுவிய ஆசிரமத்தையே வளர்த்து உறுதிப் படுத்த முயல்கின்றனர். இவர் கீதாஞ்சலி முதலிய அரிய பெரிய நூல்கள் பற்பல இயற்றியுள்ளார். அவற்றை அநேக பாஷைகளில் மொழி பெயர்த்துமிருக்கின்றனர். பாடசாலைகளில் படித்துப் பரீக்ஷை தேறிப்பட்டம் பெறுமல் தன் முயற்சியால் கற்றுத்தேறிய பெருமுயற்சியாளரான கவியவர்கள், தான் கண்டறிந்த முறையில் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்ற வேண்டுமென விரும்பி 1901ஆ பாடசாலை யொன்றைச் சாந்தி நிகேதனத்தில் நிறுவினர்.

தற்கால பாடசாலைகளின் கல்வி முறைகள் பிள்ளைகளின் இயற்கை வளர்ச்சியைக் கருதாமல், எதையோ வழக்கம் போல் வைத்துத் திணிப்பதாயும், பிள்ளைகளுக்குப் பாரந்தர கூடியதாயும், வெறும் ஏட்டறிவாயும், அடிமை வாழ்க்கைக் குரியதாயும் இருப்பதோடு, பெற்றுக்கொண்ட படிப்பை வியாபாரஞ்செய்து, பணந்திரட்டவேண்டுமென்ற இழிவான எண்ணத்தை யூட்டுவதாயுமிருக்கிறபடியால், கவியவர்கள் இம்முறைகளை மிகவும் அருவருத்தனர். அன்றியும் தற்கால பாடசாலையை ஒரு சிறைச்சாலையைப்போல் கருதியபடியால் கவியவர்கள் ஏராளமான செல்வத்தில் பிறந்து வளர்ந்தும்

தம் இளமையில் பாடசாலைப் படிப்பை வெறுத்துவிட்டனர். கவியவர்களின் முக்கிய நோக்கம் வெறும் படிப்புமாத்திர மல்ல, மக்களுக்குள் உள்ளான ஆள் தன்மை வளர்ச்சியுற வேண்டுமென்பதே. இந்த ஆத்துமீக வளர்ச்சிக்குத்தற்கால பாடசாலைக் கல்வி முறைகள் தடையாயிருப்பதைக் கண் டுணர்ந்ததினால் அக்குறைவை நீக்குவான்வேண்டி கவியவர் கள் இந்தப் பாடசாலையை நிறுவினர். இதன் முறைகளும் நோக்கமும் அவர்கள் கருத்துக்கே இசைந்ததாயிருந்தாலும், இதில் கற்றுப்பயின்ற மாணவர்களை கல்கத்தா சர்வகலாசாலை பரீக்ஷைக்கு ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பாடசாலையை இயற்கை வனப்பு நிறைந்த வெளி யிடத்தில் மரத்தடிகளில் வைத்து நடத்துகிறார்கள். ஆண் பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் வேற்றுமையின்றிக் கூடிப் படிக்கின்றனர். இங்கு கற்பிக்கும் எல்லாப் பாடங்களும் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. பாஷையறி விற்காக மாத்திரம் ஆங்கிலமும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

இதில் படிக்கும் மாணவர்களுக்கு விடுமுறை வேண்டு மென்ற விருப்பங்கிடையாது. வேலைகளை மாற்றிக்கொள்வதே இவர்கள் விடுமுறை. பையன்கள் பாடசாலையிற் சேர்ந்த புதிதில் உயர்ஜாதியென்பதினாலுண்டாகும் தற்பெருமையும், தாழ்ந்தவரென்பதனாலுண்டாகும் தன்னிகழ்ச்சியும் காணப் பட்டதாம். ஆனால் சில நாட்கள் கடந்தபின் அவைகள் யாவும் மாறி ஒரேவிதமாய் யாவரும் தொண்டு செய்ய வேண்டுமென்ற சுயவெறுப்புக் கொண்டனராம். அநாத

பிள்ளைகளுக்கென்று ஓர் ஸ்தலமும் உண்டு. இங்கே தங்களுக்குவேண்டிய உணவு முதலிய எல்லா வசதிகளையும் இவர்களே செய்து கொள்ளுகிறார்கள். தங்களுக்குவேண்டிய குடிசைகளையும் இவர்களே சேர்ந்து கட்டிக்கொள்ளுகிறார்கள். ஆசிரம மாணவர்களாகிய இவர்களிடையே உண்டாகும் சச்சரவுகளை இவர்களே விசாரணைசெய்து தீர்த்துக்கொள்ளும்படி மாணவர் பஞ்சாயத்துக்களுமுண்டு. இந்த மாணவர்கள் பாடசாலையை விட்டபின் பிறர் உதவியின்றிப் பிழைக்கவேண்டிய வாழ்க்கைக்கவசியமான யாவும் இங்கேயே கற்றுக்கொள்ளுகின்றனர்.

ஆசிரமத்து மாணவர்கள் நாடோறும் அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பொழுது புலருமுன் 15 நிமிஷம் அமைதியாயிருப்பார்கள். இவர்களுக்குத் தியானமுறை தெரியாவிட்டாலும், அமைதியாயிருப்பது முக்கியமென்று கவியவர்கள் கூறுகிறார். அதன் பின் எல்லாரும் ஒரு இடத்தில் கூடிவந்து மந்திரங்களை ஒன்றுபோல் ஓதுவார்கள். காலை சிற்றுண்டியருந்தியபின் அங்குள்ள புத்தகசாலைமுன் கூடி நன்கு பாடத்தெரிந்த சில மாணவர் கவியவர்கள் இயற்றிய பாடல்களில் இரண்டொன்றைப்பாட மற்றவர்கள் அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருப்பார்கள். காலை 7-மணி முதல் 10-மணி வரையிலும், மாலை 2-மணி முதல் 4-மணி வரையிலும், பாடசாலை நடைபெறும். ஆசிரியர்முதல் யாவரும் தரையில் பாய்மேல் உட்கார்ந்திருப்பார்கள். மாணவர் தங்கள் பிரியப்படிதானிருந்துகொள்வார்கள். பயமுறுத்தும் கண்டனை தண்டனை கிடையாது.

இங்கே புலாலுணவு கிடையாது. மற்றப்படி சாதாரண மான சாப்பாடுதான். ஆசிரியர்களில் பிரம்மசாரியர்களா யிருப்பவர்கள் மாணவருடன்கூட வசிக்கின்றனர். இந்த இடத்துக்குத்தான் ஆசிரமமென்றுபேர். இதற்கு வெளியே சற்று தூரத்தில் இல்லறவாசிகளிருக்கின்றனர். சமய தூஷணம், சமயவாதம் ஆகிய இவைகள் இங்கு அறவே கூடாது.

ஒழிந்த நேரத்தில் மாணவர் வெளியே சென்று சுற்றிலு முள்ள கிராமவாசிகளுக்குத் தொண்டு செய்வார்கள். முக்கியமாய் நெருப்புச்சேதம் விளையும்போதும், தொத்து நோய் முறைக்காய்ச்சல் பரவும்போதும், அவைகளைத்தடுக் கும்படி கிராமங்களில் தொண்டு செய்வார்கள். பலவிதமான விளையாட்டுகளும் விளையாடுவார்கள். கவியவர்கள் இயற்றிய நாடகங்களைப்பயின்று நடிப்பார்கள். இரவில் படுக்கைக்குப் போகுமுன் மாணவர் பாடிக்கொண்டு ஆசிரமத்தில் சுற்றி வருவார்கள். இந்தப்பாடசாலை இப்போது விசுவபாரதி யென்னும் கலாசாலை நிலைக்கு வளர்ந்தோங்கியிருக்கிறது. சங்கீதம், வாத்தியங்கள், சித்திரம் முதலிய கலைகள் இங்கே முக்கியம்.

கீழ் நாட்டிலுள்ள சகல கலைகளையும் இங்கே கூட்டிச் சேர்த்து, பலரும் பகிர்ந்துகொண்டு, எங்கும் பரப்பவேண்டும் என்பதே இக்கலாசாலையின் முக்கிய நோக்கம். மேலும் பிறநாட்டாருக்கும் இக்கலையைக்கொடுக்க வேண்டுமென்ப தும் இதன் கருத்தாகும். உலக முழுவதையும் கூவியழைக்கும்

இடமாக இது விளங்கவேண்டுமென்பது கவியவர்களின் விருப்பம். 1920ஸூ கவியவர்கள் மேல் நாட்டுக்குப் போயிருந்தபோது, மேல்நாட்டார் உலகவல்லமையை வணங்கி வழிபடுவதைக்கண்டு உள்ளங் கன்றினவராய் மேல் நாட்டார் கீழ் நாட்டாருடன் ஐக்கியப்படவேண்டியதின் இன்றியமையாமையை உணர்ந்தார். இருதிறத்தாரும் மனமொத்து, தங்களுடைய நன்மைகளை ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொள்வதால், இருதிறத்தாரிடையிலுமுள்ள குறைபாடுகள் நீங்குமென்று கண்டு, இக்கூட்டுறவுக்கு மிகுதியும் உழைத்து வருகிறார். இதனால் தேசத்துக்கு தேசமும், ஜாதிக்கு ஜாதியும், சமயத்துக்குச் சமயமும், மாறுபட்டுக் கிடக்கும் பகைகள் ஒழிந்துவிடவும், யாவரும் ஒரே மெய்க் கடவுளில் ஐக்கியப்படவும் வேண்டுமென்பது கவியவர்களின் வாஞ்சை.

கலைவல்லுநரான பல இதரநாட்டு வித்வான்களும் பற்பல தேசங்களிலிருந்து இந்த ஆசிரமத்திற்கு வந்து வசித்து, தாங்கள் மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அரியபெரிய காரியங்களைப்போதித்து, இந்தியாவிலிருந்து தாங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய மேலான சத்தியங்களை கற்றுக் கொண்டும், தங்கள் சுய தேசங்களுக்குத் திரும்புகிறார்கள்.



மகாத்துமா காந்தியவர்கள்.

1931-ம் வருஷம் இங்கிலாந்திலிருந்து திரும்பி கப்பலில் பிரயாணஞ் செய்கையில்எடுத்த படம்.

## 2. சத்தியாகிரக ஆசிரமம்.

வாய்மைக்கே வெற்றியென்பதை நன்கு தெளிந்தவரும், உள்ளொன்றுவைத்துப் புறமொன்று காட்டாத கண்ணுடி நெஞ்சனும், எத்தனை இடையூறுகள் வரினும் தான்கண்ட நேர்மையை விட்டுவிலகாத செஞ்சேவகனும், அஞ்சா நெஞ்சனுமாகிய உலகறிந்த பெரும் புகழாளனுகிய காந்திஜீ அவர்கள், தான் மேற்கொண்ட அறத்தை நடாத்த ஒரு பொதுவான இடத்தை நிறுவ எண்ணியபோது பலரும் பல இடங்களைக்குறிப்பிட்டு இருக்கும்படி வேண்டினர். அவைகள் காந்திஜீ அவர்களின் உள்ளக்கிடக்கைக்கிசையா திருந்த போது ஆமதாபாத்திலிருந்த பணக்காரர்களும் செல்வாக்குள்ளவர்களும் தங்கள் நகருக்கருகில் தங்கியிருக்கும்படி வேண்டினர். இந்த இடம் காந்திஜீக்கு திருப்தியளித்த படியால் இங்கே தங்கி ஒரு ஆசிரமம் நிறுவத் தீர்மானித்தார்.

ஆமதாபாத் நகரில் காக்கிராபு என்ற இடத்திலிருந்த தன் வீட்டை பாரிஸ்டர் ஜீவன்லால் தேசாய் இவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்க இசைந்தபடியால், அந்த வாடகைக் கட்டிடத்திலே 1915ஆு மேமீ 25உ இந்த ஆசிரமத்தை நிறுவினர். தன்னிடம் வேண்டிக்கொண்ட பலர் கருத்தையும் தவிர்த்து, காந்திஜீ இந்த இடத்தை விரும்பித் தெரிந்து கொண்டதற்கு விசேஷித்த மூன்று காரணங்களைக் கூறுகிறுர்: ஒன்று, தன் தாய்மொழியாகிய குஜராத்தி மொழியிலேயே, தேசத்துக்குத் தொண்டாற்ற குஜராத்தி

நாட்டுக்குத் தலைநகராகிய ஆமதாபாத்துக் கருகிலிருப்பது தகுதியாகும் என்பது. இரண்டாவது, தான் இந்தியாவில் வளர்க்க விரும்பிய குடிசைக் கைத்தொழிலை விருத்திசெய்ய அது ஏற்ற இடமென்று கண்டார். ஏனெனில் ஆமதாபாத் நகரில் ஏராளமான கைத்தரிகளுண்டு. மூன்றுவதாக, பணக் காரர்களும் செல்வாக்குள்ளவர்களும் இந்த ஆசிரமத்துக்குப் பண உதவிசெய்வார்களென்று நம்பியது. இந்நகரில் தான் குஜராத்து நாட்டின் பெரும் பணக்காரர்கள் உண்டு.

இக்காரணங்களை முன்னிட்டு ஆசிரமத்தை இந்த இடத் தில் நிறுவியபோதிலும், காந்திஜீ தான் சிறுபிராயமுதல் கைக்கொண்டுவந்த தீண்டாமை விலக்குத் தொண்டுக்குப் பின்னல் பங்கம் நேரிடாதபடி, ஆசிரமவிதிகளுக் கிசைந்து ஒழுகத் தகுதியுள்ள தீண்டாதார் ஆசிரமத்திற்சேர விரும் பினுல், யாதொரு தடையுமின்றிச் சேர்த்துக்கொள்ள வேண்டியதாகுமென்று தொடக்கத்திலேயே தன் நண்பர் களுக்கு வெளிப்படையாகச் சொல்லிவைத்தார். உங்கள் மனதுக் கிசைந்தொழுகுந் தீண்டாதார் எங்கிருந்து வரப் போகிருர்களென்று அவர்களிலொருவர் கூறியுள்ளார். என்றுலும், வருங்காரியங்களை உற்றுணர்ந்து வழிதேடும் வன்மையுள்ள காந்திஜீ ஏற்கெனவே இதை வெளியிட்டு யாவரையும் பக்குவப்படுத்தினுர்.

இவ்வாசிரமத்துக்கு என்ன பெயரிடலாமென்று யோசித்தபோது, தான் நிறைவேற்றப்போகும் தன் நோக் கத்தையும், நிறைவேற்றும் முறையையும், ஒருங்கே திரட்டி யமைக்க முயன்றுர். வாய்மையை மக்களுக்கு உரிமை

யாக்கவேண்டுமென்பதே காந்திஜீயின் முக்கிய நோக்கம். வாய்மையைக் கடைப்பிடித்தொழுகுவதே அதை நிறைவேற்றும் பொருட்டு அவர்கொண்டமுறை. ஆனதுகொண்டு தென் ஆப்பிரிக்காவில் கொடியவர்களையும் வசப்படுத்தும்படி அவர் கைக்கொண்ட சத்தியாகிரகமென்ற பேரையே இந்த ஆசிரமத்துக்கும் கொடுத்தார். சத்தியத்துக்கு விரோதமான கட்டுகளை அஹிம்சை முறையில் மீறி அறுத்தொழிப்பதே சத்தியாகிரகமாகும். "சத்தியப்பற்றே எங்கள் கோட்பாடாகவும், சத்திய ஆராய்ச்சியும், சத்தியத்தில் உறுதியுமே எங்கள் வேலையாகவும் இருந்தன," என்று காந்திஜீ கூறுவதால் நண்பர்கள் ஆலோசனையாய்க் குறிப்பிட்ட 'சேவாசிரமம், தபோவனம்" என்ற பெயர்கள் அவருக்குப் பிடித்தமில்லாமற் போனதில் வியப்பின்று. தபோவனமென்ற பெயரிட்டு வசிக்க நாங்கள் தகுதியுள்ளவர்களன்றென்பதையும் குறிப்பிட்டுள்ளார். எனவே காந்திஜீக்குப் பிடித்தமான "சத்தியாகிரக ஆசிரமம்" என்ற பெயரையே யிட்டார்கள்.

சில நாட்கள் செல்லவே திரு. அமிர்தலால் தாக்கர் என்பார் தீண்டாத வகுப்பைச் சார்ந்த உத்தமமும் உண்மையுமுள்ள ஒரு குடும்பத்தை உங்கள் ஆசிரமத்தில் ஏற்றுக் கொள்ள முடியுமா என்று கேட்டெழுதிய கடிதம் காந்திஜீ அவர்களுக்குக் கிடைத்தது. ஆசிரமவாசிகள் இதற்கு ஆயத்தமாயிருந்தபடியால் வரவேற்றனர். ஆசிரமவிதிகளுக்கிசைந்து நடக்கக்கூடுமானுல் வரவேற்பதாக காந்திஜீ

தெரிவிக்கவே அவர்கள் குடும்பத்துடன் வந்து சேர்ந்தனர். வரவே இம்மட்டும் பணவுதவி செய்தவர்கள் இக்காரணம் பற்றி உதவியை நிறுத்திவிட்டனர். என்செய்வார் காந்திஜீ! இப்படித் தங்களை விலக்கிவைத்து வசதிக்குறைவுகளால் வருத்தினாலும், காக்கிராபு என்ற இடம் விட்டுப்போகலாகா தென உறுதிபூண்டார். தொல்லைகள் மிகுதியானால் காக்கிராப் பிலுள்ள தீண்டாதாருடன் வசித்தாவது தன் கொள்கையை நிலைநாட்டச் சித்தமாயிருந்தார். ஆனால் பணவுதவி நின்று போனதால் ஆசிரமத்துக்கு உணவுவசதி குறைந்து பட்டினி கிடக்கவேண்டிய சமயம் கிட்டிவருவதைக் கண்டு உடன் தொண்டர்கள் உள்ளஞ்சோர்ந்தனர். அறக்கடவுளை நம்பிய காந்திஜீயோ அந்த முட்டுப்பாடான சமயத்திலும் தளராது நின்றார். எதிர்பாராதவிதமாய் இவர் முன்னும்பின்னுமறியாத ஒருவர் 13,000 ரூபாய் கொண்டுவந்து கொடுத்துச் சென்றனர். எனவே ஆசிரமத்தின் புறத்தும் அகத்தும் எழும்பிய சகலசோதனைகளையும் மேற்கொண்டு வெற்றி சிறந்தார். இந்தத் தீண்டாதவகுப்புக் குடும்பத்திற் பிறந்தபிள்ளைதான் காந்திஜீயின் சுவீகார புத்திரியாகிய லக்ஷ்மி. தற்சமயத்தில், சிறைவாசஞ்செய்யும் காந்திஜீ தீண்டாமையை ஒழிக்கப் பலமாய் தொடங்கியிருக்கும் இயக்கம் ஜீவியகாலமெல்லாம் அவருக்கிருந்திருக்கும் வாஞ்சையின் பயனேயென்று இதனால் தெளிவாகும்.

காந்திஜீ ஏழை தொழிலாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் காக்கிராபிலிருந்துகொண்டு பேருதவி புரிந்துவந்தார். இப்படியிருக்கும்போது ஆசிரமத்தின் சுற்றுப் புறங்களில்

பெருவாரிக் காய்ச்சல் (பிளேக்) வந்துவிட்டது. வியாதியைத் தடுக்கும் சுகாதார விதிகளைக் கிராமஜனங்கள் அனுசரிக்கச் செய்ய இவர்களாலாகவில்லை. ஆசிரமத்திலிருந்த குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டியதாயிருந்தது. ஆனபடியால் ஆசிரமத்தை வேறொரு இடத்துக்கு மாற்றத் தருணங் கிடைத்தபோது சொந்தமாக ஒரு இடம் வாங்கி அதிலே தங்கவேண்டுமென்று காந்திஜீ விரும்பினார். ஆசிரம நிலையம் எந்த நகருக்கும் ஊருக்கும் மிக நெருங்கியாவது, மிக தூரத்திலாவது இருக்கக்கூடாதென்பது காந்திஜீயின் கருத்தாகையால் அவரே தேடிச்சென்று தற்சமயம் சபர்மதியில் உள்ள ஆசிரம இடத்தைத் தெரிந்துகொண்டார். இதற்கும் ஆமதாபாத்துக்கும் 4 மைல் இருக்கும். திரு. புஞ்சாபாய் ஹீராசந்து என்பவரின் உதவியால் இந்த இடத்தை வாங்கிக் கொண்டு குடியேறினர்.

இது ஆற்றங்கரையும் காடடர்ந்த பாழிடமுமாயிருந்தபடியால் ஏராளமான பாம்புகள் இங்கே உண்டு. இந்த ஆசிரம வாசிகள் விஷஜெந்துக்களையும் கொல்லுவதில்லை யென்ற கோட்பாடுடையவர்களாதலால் ஒரு பாம்பையும் கொன்றதில்லை. அவைகளால் இவர்களுக்கு ஒரு தீங்கும்நேர்ந்ததில்லை. இவர்களின் அஹிம்சைநெறிக்கு வெற்றியும் மேன்மையும் கடவுளே தருகிறாரென்பதற்கு இது கண்கூடான சான்றாயிருக்கிறது. இது மற்றவர்களுக்குப் பயித்தியம்போலக் காணப்பட்டாலும் காந்திஜீ இதை மிகவும் மெச்சிக் கடவுளின் கருணையைப் புகழ்ந்து உளம் பூரிக்கிறார்.

இந்த ஆசிரமத்தொண்டரிடத்தில் தாழ்மைக் குணம் விளங்கும்படி எல்லா விதிக்கும் மேலான தன் முன்மாதிரியினாலேயே அவர்களைத் தூண்டி ஏவி விடுகிறார். ஒரு தொண்டருக்கு வேண்டிய மெய்த்தாழ்மையானது தலைவர் ஏற்படுத்தும் கட்டளைகள் விதிகள் முதலிய புறம்பான கட்டாயத்தினால் வந்துவிடுமோ? விடுதலை அடைந்தவனின் இயற்கைக் குணமாகவல்லவோ துலங்கவேண்டும். தாழ்மைக்குணமே முக்தியென்று காந்திஜீ கூறுகிறார். இவ்வரும் பெருங்குணத்தைத் தங்களுக்கு உரிமையாக்கிக்கொள்ளும் பொருட்டு இங்கே அனுசரிக்கும் முறைகள் கண்டோர் உள்ளத்தைக் கவரச்செய்வதாகும். "நான்" என்பது சாகும்படி இங்குள்ள எவரும் எந்தக்கீழான ஊழியத்தையும் செய்ய வெகு விழிப்போடு காத்திருக்கின்றனர். "உயர் ஜாதி" என்ற வகுப்பினர் இங்கு தோட்டி வேலை செய்வதை என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன். ஊழியஞ்செய்கிறவர்களைக் காணலாமேயன்றி ஊழியங் கொள்ளுகிறவர்களைக் காண்பதரிது.

தன்னையடக்கியாள்வதாகிய சுய கண்டிதம் என்னும் விஷயத்தில் கீழ்நாடு தலைசிறந்ததென்று எட்டளவிலிருக்கிறதேயன்றி நடைமுறையில் தற்காலம் நம்மக்களிடையே இதைக்காண்பதரிது. எந்தப்பொது நிலையத்திலும், பொதுக் கூட்டங்களிலும், பொது விருந்திடங்களிலும், மக்கள் கூடிவரும்போது, தன்னடக்கமில்லாத மிருகங்களைப்போல் ஒருவர் மேலொருவர் விழுந்து பிறருக்கு இன்னல் விளைவிப்

பதும், முதலிடங்களைப்பற்றிக்கொண்டு பின்பு வெட்கிப்போவதும், பிறனை நினையாமல் வாரி வாயிலடித்துக்கொள்வதும், நாம் கண்கூடாகக் காண்கிறோமே! இந்தத் தவறான வழியில் படித்தவனும் படிக்காதவனும் ஒருமிக்கச் சென்று கேடுவிளைவித்துக் கொள்கிறார்களென்பதில் ஐயப்பாடேதுவுமுண்டோ? இத்தகைய சுயகண்டிதமிலாத மக்களுக்குள் இம்மாதிரியான ஆசிரமங்கள் எண்ணிறந்தன எழுந்து மக்களைத்திருத்தவேண்டியது வெள்ளிடைமலையேயாகும்.

இந்த "நான்" "எனது" என்னும் செருக்குத்தன்மையால் விளையும் சுயகண்டிதமில்லாமை பொதுமக்களிடையில்த்தானிருக்கிறது, சிறப்புடைமக்களிடத்துக்கிடையாதென்று நான் கூறத்துணியேன். நாட்டை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கங்கொண்டு, சிறைப்புடைமக்கள் கூடியுழைக்கும் கூட்டுறவு நிலையங்களிலும் இந்தத் தொல்லை தலைவிரித்தாடுவதை எங்கும் எவ்விடத்தும் காண்கிறோம்.

> "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்குப் பாத்தியமுண்டு, ஆகிலும் எல்லாம் பிரயோஜனமாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்குப்பாத்தியமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்திக்கேதுவாகாது. ஒருவனும் தனக்கானதையல்ல பிறனுக்கானதை நாடக்கடவன்." (I கொரி. 10: 23-24)

என்று அப்போஸ்தலன் கூறுகிறபடி, பிறர் நன்மையைக் கருதித் தனக்கிருக்கும் சரியான உரிமைகளையும் விட்டுக்

கொடுத்து, ஒரு பொது நிலையத்தின் அல்லது சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தி நடப்பவனே நாட்டுக்காசீர்வாதமுள்ளவனுவான். இப்படிக்கின்றி தளை தெறித்து விட்ட குதிரைகளைப்போல் தலைக்குத்தலை மணியஞ் செய்யத்தொடங்கினுல், கூட்டுறவெங்கே, நாட்டுமுன்னேற்ற மெங்கே! யாவும் பறந்தொழிய வேண்டியதே! எனவே பொது நன்மைக்காக தன்னை ஒடுக்கிக் கட்டுப்படுத்தி கீழ்ப் படியாத ஒருவனைத் தொண்டனென்று அழைப்பது பொய் யாகையால், முண்டனென்றழைப்பதே தகுதியாகும். சுய ஒழுக்கமும் கீழ்ப்படிதலுமில்லாத முரடர்கள் இந்த சத்தியா கிரக ஆசிரமத்தில் இடம் பெறுவதும் இருப்பதும் கூடாத காரியமாகும்.

இப்படிப்பட்ட கீழ்ப்படிதலின்மையால் நிகழுந்தவறு தல்களைக் கண்டித்துத் தவிப்பதற்கு காந்திஜீ கைக்கொள்ளும் முறை, அஹிம்சை முறையாகிய சுய ஒடுக்க நோன்பு முறையே. ஒருவன் தவறிப்போனுல் அவன் தவறுதலை அவனே உணர்ந்து மன்னிப்புக்கேட்கும்வரை அவனுக்காக காந்திஜீயே உபவாசம் செய்வார். ஒரு பெரியாரிடும் தண்டனைக்குப் பயப்படும் பயத்தினுல் ஒருவன் தீமையை விட்டிருப்பதற்கும், தன்னிடத்திலுள்ள தீமையை உள்ள படியே உணர்ந்து தன்மனதார அதை விட்டுவிடுகிறதற்கும் அதிக வித்தியாசமுண்டு. தானே உணர்ந்து தன் தீமையை விட்டுவிடுவதே உயர்ந்ததாகையால் காந்திஜீ அதற்குத்தக்க முறையைத்தெரிந்துகொண்டார்.

காந்திஜியினுடைய உள்ளத்தாழ்மை எவரையும் கவரத் தக்கதென்பது மறுக்கமுடியாத உண்மை. இவரிடத்தில் விளங்கும் வல்லமைக்குக் காரணம் இந்த உள்ளத்தாழ்மை யென்றே சொல்லலாம். இவரில் வெளிப்பட்ட ஆத்ம வல்லமையை மற்றவர்கள் கண்டபோது “மகாத்மா” என்று அழைக்கத்தொடங்கவே மக்களின் தப்பெண்ணத்தை மாற்று வான் வேண்டி, தன்னில் அவர் கண்ட குற்றங்குறைகளை வெளிப்படையாகச் சொல்லத் தொடங்கினர். தன்னை மக்கள் உயர்த்துவது காந்திஜீக்கு எவ்வளவும் பிடித்தமில்லை. எவருங் கணிசமாக எண்ணும் மகாத்துமா இவ்வாறு தன் குற்றங் குறைகளையெல்லாம் வெளிப்படுத்துவது மற்றவர்கள் இடறக் காரணமாகாதோ என்று மேல் நாட்டில் படிக்கும் இந்திய வாலிபனொருவர் காந்திஜீக் கெழுதிக் கேட்ட போது, என்போல் குற்றங் குறைகளிற் சிக்குண்டு தவிக்கிற சிலர் நம்பிக்கையடைந்து சீர்திருந்த இது உதவி செய்யாதா வெனவும், பாடுள்ள மனுஷனாகிய என் மேல் அஸ்திபாரம் போடுகிறவன் சன்மார்க்கம் அழிவது நியாயமாகும், எனவும் விடையளித்தார். என்னே இவரது உள்ளத் தாழ்மையும் பிறர் நலங்கருதுந் தன்மையும்!

58738

அநியாயத்தால் ஒடுக்கப்பட்டு வறுமையில் தவிக்கும் மக்களுக்கு நீதியும் சுயவுரிமையும் வழங்கப்படவேண்டு மென்பது காந்திஜீயின் முழு நோக்கமாகும். இதற்கு மாறாக மக்களை ஒடுக்கும் ஏற்பாடுகளை இவர் வெறுத்தாலும், அவ்வேற்பாடுகளுக்குக் காரணமானவர்களை வெறுப்பதில்லை.

இவருக்குப் பிடிக்காத அரசியல் கொள்கைகளையுடைய ஆங்கிலேயர்கள் இவ்வாசிரமத்துக்கு வந்து போக விரும்பினால், அவர்களுக்கு நல்வரவு கூறி வேண்டிய பணிவிடைகள் செய்து, அளவளாவிப்பழகி, மகிழ்ச்சியூட்டியனுப்புகின்றனர். இதை ஒரு அடிமைத்தன உணர்ச்சியிற் செய்யாமல் இனத்தாருக்குச் செய்வது போலவே அன்போடு செய்கின்றனர். அடிமையுணர்ச்சி இந்தியாவை விட்டு அறவேயொழிய வேண்டுமென்பது காந்திஜீயின் முழு வாஞ்சையாகையால் இங்கே அடிமைத்தன ஆவியைக் கண்டு பிடிப்பது அரிது. மக்கள் தன்னுரிமையை இழப்பது காந்திஜீக்கு எவ்வளவும் விருப்பமிராது. காந்திஜீ படும் பாடுகளெல்லாம் மக்களுக்கு கடவுள் குறித்த சுதந்தரமாகிய தன்னுரிமையை அவர்கள் அடையும் பொருட்டே என்பதை யறியாதார் யார்! ஏழைகளுக்கு நீதியுண்டாகச்செய்வதே இவர் விரும்பும் சுயராஜ்யம்.

இவ்வாசிரமத்தில் ஒரு ஆங்கிலேய மாது காந்திஜீக்குப் பணிவிடை செய்து மகிழும்படி வந்திருக்கின்றனர். இவர்தான் மீராபாய். இவ்வம்மையார் பாரிஸ் நகரில் வாழ்ந்த பெரும் சீமாட்டி. மேல் நாட்டு நாகரீகத்தில் ஊறிப்போனவர்கள். அப்படியிருந்தும் ரோமையன் ரோலண்டு என்ற பெரியார் எழுதிய காந்திஜீயின் ஜீவிய சரித்திரத்தை இவ்வம்மையார் வாசித்தபோது, காந்திஜீயின் இயற்கை வாழ்க்கை வல்லமையால் இழுக்கப்பட்டு தனக்குண்டான சுகம் செல்வம் யாவையுந் துறந்து, இந்தியாவுக்கு வந்து,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
103 20 JUN 1933
MADRAS

ஒரு ஏழை இந்தியப் பெண்போல் உடை, ஊண் முதலியவற்றைக் கைக்கொண்டு ஆசிரம வாசியானார். தற்சமயம் காந்திஜீயைப் போலிவரும் சிறைவாசஞ் செய்கின்றனர்.

இல்லறவாசிகள், இல்லறத்திலிருந்தும் பிரமசரிய விரதம் பூண்டோர், பிரமசாரிகள் என மூன்றுவிதமானவர்கள் இங்கே வசிக்கின்றனர். இல்லறவாசிகள் ஒருபாகத்திலும் மற்ற இருதிறத்தாரும் ஆசிரமத்தின் வேறொரு பாகத்திலும் வசிக்கின்றனர்.

காந்திஜீயின் மனைவியாகிய கஸ்தூரிபாயம்மாள் தம் கணவனை மிகுந்த பக்தி விநயத்துடன் கவனித்து வரும் உத்தமி. இருவருமாக 1906-ம் வருஷம் பிரமச்சரிய விரதமெடுத்துக்கொண்டார்கள். இங்கிருக்கும் சிறுவர்களுக்கு ஒரு பாடசாலையுண்டு. இந்தப் பாடசாலையில் சிறுவருக்கு "மாண்டிசோரி" என்ற சாஸ்திரியின் போதனா முறைப்படி கல்விகற்றுக் கொடுக்கப்படுகிறது. பிள்ளைகளை அடிப்பது கிடையாது. இதற்கு வெளியே 2 மைலுக்கப்பால், தாய் மொழியில் சகல கலைகளையும் கற்றுக்கொடுத்து, தேசத் தொண்டர்களை ஆயத்தம் செய்யும்படிக்கு, சர்வ கலாசாலையொன்று நிறுவியிருக்கிறார். இதில் மாணவர் விருப்பத்தின் படி ஓர் தடவை காந்திஜீயே புதிய ஏற்பாட்டை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

ஆண்டில் ஆறுமாதம் நிலத்தில் வேலைசெய்து ஆறு மாதம் வீணே வீட்டிலுட்கார்ந்து வறுமையில் முழுகிப் போகிற கிராம மக்களுக்கு உதவியாயிருக்கும்படி காந்திஜீ

தொடங்கிய நூற்பும் நெசவும் இந்த ஆசிரமத்தில் அதிகம். யந்திர வளர்ச்சியினாலல்ல கையுழைப்பினாலேதான் இந்தியாவிலுள்ள திரளான கிராமவாசிகளுடைய வறுமைப் பிணி நீங்குமென்று காந்திஜீ கருதுகிறார். மக்களின் மானத்தை மறைக்க இன்றியமையாத கதர் உடை நெய்தல் முக்கியமாயிருப்பதால், காந்திஜீ அதை மற்றவர்களுக்கு வலியுறுத்திக் கூறுவதோடு தன் ஆசிரமத்திலே அதை முக்கியப் படுத்தியிருக்கிறார். தங்களுக்கவசியமான தானியம், பயறு, காய்கறி முதலியவைகளை ஆசிரம வாசிகளே பயிரிடுகின்றனர். அன்றியும் வயது முதிர்ந்து தானே இறந்து போகும் மாடுகளின் தோலை உரித்துப் பதனிட்டுச் செருப்பு முதலியன செய்கிறார்கள். இந்த இடம் ஆசிரமத்துக்கு வெளியே இருக்கிறது.

இங்கே வசிக்கிற யாவரும் உடுத்துவது கதர்தான். ஒருவன் கதருடுப்பதால் ஏழைமக்களின் வயிற்றுப் பசிப் பிணியை நீக்குவதோடு, ஏழைகளோடு ஐக்கியத்தையும், தன் உள்ளத்தூய்மையையும் வெளிப்படுத்துகிறானென்று காந்திஜீ கூறுகிறார். அப்படியானால் கதர் ஞான அர்த்தமுள்ள ஒரு தூய பொருளென்பதை நாம் மறக்கலாகாது. இதனால் ஒழுக்க நெறியாளர்களே இதை உடுத்தத் தகுதியுள்ளவர்களென்பதும், இதை உடுத்துவோர் பாரதத்தாயின் மரியாதையைக் காத்துக்கொள்ளும் பொருட்டாவது ஒழுக்க நெறியில் நடக்கவேண்டுமென்பதும் வெளிப்படை. எனவே தேசநன்மைக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்த இவ்வாசிரம

வாசிகள் இதற்கு அடையாளமாகிய கதரையே உடுத்து கின்றனர்.


இவர்கள் அதிகாலே 4 மணிக்கு விழித்து, யாவரும் சாபர்மதி ஆற்றங்கரையில் முற்றும் திறப்பான மணல் பரவிய ஒரு இடத்திற் கூடிவருவர். (ஆசிரமம் ஆற்றோரமே). எல்லோரும் ஒரே விதமாக பகவத்கீதை முதலிய வேத மந்திரங்களைச் சொல்லுகிறார்கள். பின்பு பண்டிதர் ஒருவர் முன்னாலே பாட யாவரும் பின்னாலே பாடுகிறார்கள். இடைக் கிடையே நாமவாழியும் பாடுகிறார்கள். இது முடிந்த பின் செய்யவேண்டிய அவசியமான கடமைகளை அமைதியாகவே செய்வர். 7 மணிக்கு பெண்களுக்கு ஒரு வகுப்பு இருக் கிறது. இதில் நான் போயிருந்தபொழுது காந்திஜீ பகவத் கீதையைப் பாடமாக நடத்தினார். காலை கூழும், $10\frac{1}{2}$ மணிக்கு ஒரு வேளையுணவும், மாலை 5 மணிக்கு ஒரு வேளையுணவும் தான் இவர்கள் ஆகாரம். அதுவும் சாதாரண உணவுதான். எவ்விதமான மசாலை, காரம் முதலியன சேர்க்கிறதில்லை. இங்கிருப்பவர்கள் நாள்தோறும் ஒருமணிநேரம் நூல் நூற்றல் வேண்டும். இதற்கு "தியாகத்தொண்டு" என்று பெயர். சாயந்திரம் சில தொண்டர்களுடன் காந்திஜீ ஒழுங்காக உலாவப்போய்த் திரும்புவார். மாலை 7 மணிக்கு யாவரும் ஜெபத்துக்குக் கூடிவரும்போது ஒவ்வொருவரையும் பேர் சொல்லியழைப்பார்கள். ஆசர் சொல்லும் ஒவ்வொருவரும் அந்த நாளில் தான் செய்த தியாகத்தொண்டின் பலனாகிய நூற்ற நூலளவு கூறவேண்டும். அந்த அளவைப்பதிந்து

கொள்வார்கள். எல்லாரும் படுக்கவேண்டிய நேரம் இரவு 9 மணி.

காந்திஜீ வெளியேறி வந்துவிட்டால் சிறுவரும் சிறுமியரும் அவரைச் சூழ்ந்துகொள்வார்கள். பொது ஜெபக் கூட்டங்களிலும் காந்திஜீயைச் சூழ உட்கார்ந்திருப்பவர்கள் சிறு பிள்ளைகள்தான். ஒவ்வொரு நாளும் இரவில் படுக்கப் போகுமுன் சிறு பிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருந்து விட்டுத்தான் படுக்கப்போவாராம்.

ஏதும் ஓர் பெரிய காரியத்தை தொடங்குமுன் காந்திஜீ மிக ஆழ்ந்து ஆராய்ந்து தமது அகத்தினுள் ஆண்டவன் தூண்டியேவியபடியே தீர்மானஞ் செய்வார். ஆனால் தீர்மானித்தபின் எவர்க்கும் அஞ்சாமல் அதைத்தொடங்கி என்ன நேரிட்டாலும் தளராது முன் செல்வார். பயமென்பது கிடையாது. இதனால் "மிகுந்த சகிப்பிலும் உபத்திரவங்களிலும், வறுமைகளிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், உழைப்புகளிலும், கண் விழிப்புகளிலும், உபவாசங்களிலும்" இவர் அநுபவம் முதிர்ந்தவர். (II கொரி. 6 : 4—5)

காந்திஜீயவர்கள் இப்போது அதிகாரிகளால் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதின் காரணங்களை இங்கு விவரிக்க ஆரம்பித்தால் இப்புத்தகம் விரிந்துபோம். மேலும் அரசியல் விஷயங்களில் பிரவேசிப்பதும் இந்த நூலின் நோக்கமல்ல. எனினும் 1930 வருஷம் காந்திஜீயவர்கள் உப்பு சத்தியாகிரக



மீராபாயம்மாள் (மிஸ். சிலேட்) காந்திஜியின் சிஷ்யாகிய
ஆங்கில மாது.



(சபர்மதி) சத்தியாகிரஹ ஆசிரமத்தில் மகாத்துமாகாந்தியவர்கள் வீடு. ஜன்னல்கள் எதிரே தெரிகிற அறைதான் அவர் தங்கி வேலை செய்யுமிடம்.

இயக்கத்தைத் தொடங்குமுன் ராஜப்பிரதிநிதியாகிய வைசிராயென்பவருக்கு எழுதிக்கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தின் முக்கிய விஷயங்கள் மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன்.

1. இராணுவச்செலவை பாதியாக்குவது. எனெனில் இராணுவச்செலவு வருஷம் 55 கோடி ரூபாய். குடியானவர்கள் கொடுக்கும் வரியில் கொஞ்சங்குறைய பாதி இராணுவத்திற்காக செலவு செய்யப்படுகிறது.

2. சர்க்கார் உத்தியோகஸ்தர் சம்பளத்தைக்குறைப்பது. எனெனில் உத்தியோகஸ்தர் சம்பளத்திற்காக மாத்திரம் 40½ கோடி ரூபாய் செலவு. வைசிராய் மாதச் சம்பளம் மாத்திரம் ரூபாய் 25,000. வரிகொடுக்கும் குடியானவன் நிதசரி வரும்படியோ பேருக்கு 1½ அணுதான்.

3. ஏழைக்குடியானவன் நன்மைக்காக உப்புவரியை எடுத்து விடுவது.

4. குடியானவன் படும் கஷ்டம் நீங்க நிலவரியைக் குறைப்பது—பாதியாவது குறைப்பது.

5. இந்தியாவின் வியாபாரம் தழைக்க இந்திய துறைமுகங்களை இந்தியர் கப்பல்களுக்காக ஒத்திவைப்பது.

6. மது விலக்குச்சட்டம் ஏற்படுத்தி மதுபான வியாபாரத்தை முற்றிலும் தடுத்தல்.

7. இந்திய ரூபாயை ஆங்கில பொன் காசோடு சம்பந்தப்படுத்தக்கூடாது. எனென்றால் இப்படிச்செய்வது

பலதேசத்தாரோடும் இந்தியாவுக்கு இருக்கும் வியாபார சம்பந்தத்தில் ஆங்கிலேயருடைய பொன்காசுக்கு மதிப்பு எவ்வளவோ அவ்வளவுக்குத்தான் இந்திய ரூபாய் நாணயத்திற்கும் இருக்கும்.

8. இந்திய நெசவு கைத்தொழில் முதலியன விருத்தியாகும்படி அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணிக்கு வரிபோடுவது.

9. கொலை முதலிய பலாத்கார குற்றங்கள் நிமித்தம் தண்டிக்கப்பட்டவர்களையேயன்றி மற்ற (சாத்வீக) அரசியல் கைதிகளை விடுதலை செய்வது.

10. தேசத்தலைவர்களை தந்திரமாக பிடிக்க வகை தேடும் இரகசிய போலீசை எடுத்துவிடுவது.

மேற்கூறிய காந்திஜீயின் விண்ணப்பத்தைக் கவனித்தால் அவர் விசேஷமாக இந்தியாவின் ஏழைக்குடியானவர்கள் நன்மையடைந்து முன்னேற்றமடையவே பாடனுபவிக்கிறார் என்பதைத்தெளிவாயறியலாம்.

---

## சத்தியாகிரக ஆசிரமம்:-விதிகளும் சட்டங்களும்.

1915-ம் வருஷம் மே மாதம் 25-ம் தேதி ஆமதபாத்திலுள்ள கொக்ராப் என்ற இடத்தில் நிறுவப்பட்டு தற்சமயத்தில் ஆமதபாத்திற்கு அருகிலுள்ள சபர்மதி என்ற இருப்புப்பாதை சந்திப்பிற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

நோக்கம் :—ஆசிரமத்து அங்கத்தினர்கள் சர்வதேச ஜன நன்மைக்கிசைய சுயதேச சேவைக்கென்றுத் தங்களைப் பாத்திரமாக்கிக்கொள்ளுதலும, அதற்கென்று இடைவிடாத முயற்சியெடுத்துக் கொள்ளுதலுமே, இந்த ஆசிரமத்தின் நோக்கம்.

ஆசரிப்புகள் :—(கைக்கொள்ளவேண்டியவை) மேற் சொன்ன நோக்கத்தை நிறைவேற்றுவதற்குக் கீழ்கொடுக் கப்பட்டிருக்கும் ஆசரிப்புகள் மிக்க அவசியமானது :—

i. சத்தியம்.

நாம் சாதாரணமாக நமது உடன் தோழரோடு கலந்து உறவாடும் சமயங்களில், உண்மையல்லாத ஒன்றைப் பேசாததினல் அல்லது பயிற்சிக்காததினல் மாத்திரம் சத்திய விரதத்தை நிறைவேற்றித் தீர்க்கமுடியாது. ஆனல் சத்தியமே ஒரே ஒரு மெய்ப்பொருள்! அதுவே கடவுள். மற்றைய ஆசரிப்புகளெல்லாம் சத்திய நாட்டத்தினின்றும் சத்திய வணக்கத்தினின்றுமே உதிக்கின்றன. தேச நன்மைக்கென்று, சத்திய வணக்கஞ் செய்வோர் உண்மையல்லாதவற்றைக் கையாடக்கூடாது; சத்தியத்திற்குத் தங்களது சிரேஷ்ட தொண்டைச் சமர்ப்பிக்குங்கால், பிரகலாதனைப்போல் மரியாதையுடன் தங்களது பெற்ருேர், மூத்தோர் முதலியோரது கட்டளைகளை மீறவேண்டியதுமிருக்கும்.

ii. அஹிம்சை அல்லது அன்பு.

கொல்லாமை மட்டும் போதாது. அஹிம்சையின் கிரியையே அன்பாகும். சின்னஞ்சிறு பூச்சி முதல் பிரதான

மான மனிதன் மட்டுமுள்ள எல்லா ஜீவப்பிராணிகள் மீதும் சரிசமானமான சிந்தனையிருக்க வேண்டுமென்பதே அன்பின் பிரமாணமாகும். இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும் ஒருவன், நம்மால் நினைக்க முடியாதவ்வளவு பெரிய தப்பிதஞ் செய்த அக்கிரமக்காரன் மீது கூட கோபங்கொள்ளாமல், அவனிடத்தில் அன்பு பாராட்டி, அவனுடைய நன்மையைக் கருதி அவனுக்காக உழைக்கவேண்டும். தப்பிதஞ் செய்வோனைச் சிநேகித்தாலும், அவனுடைய தப்பிதத்திற்காவது, அநியாயத்திற்காவது ஒருக்காலும் பணிந்து இடங்கொடுக்கக்கூடாது. ஆனால் அதை முழுபலத்தோடும் எதிர்த்து, அந்த எதிர் வாதத்தின் பயனாக தப்பிதஞ் செய்வோனிடமிருந்து வரும் எல்லாசங்கடங்களையும், மனக்கடுப்பில்லாமல் பொறுமையுடன் தாங்கவேண்டும்.

### iii. புனிதம் (தூய்மை) — [பிரமச்சரியம்].

பிரமச்சரியத்தை ஆசரிக்காமல் முற்சொல்லப்பட்ட நியமங்களை ஆசரிப்பது முடியாத காரியம். ஒரு ஆடவனையாவது பெண்ணையாவது இச்சையின் கண்களோடு பார்க்கக்கூடாதென்பது மட்டும் போதாது. மிருக உணர்ச்சியானது மனதை விட்டேயகன்றிருக்கும்படியான எண்ண அடக்கமிருக்க வேண்டும். மணம் செய்திருப்பின் மனைவியைப்பற்றியாவது கணவனைப்பற்றியாவது சிற்றின்ப எண்ணமிருக்கக்கூடாது. மனைவியையாவது கணவனையாவது என்றும் தனது வாழ்க்கைத்துணையென்றே கருதவேண்டும். இருவருக்குமிடையில் முற்றிலும் தூய்மையான உறவுஏற்பட

வேண்டும். தோஷமான எந்த ஸ்பரிசமும், சைகையும், வார்த்தையும் இந்த கிரமத்தைத் தீர்க்கமாகப் பங்கப்படுத்துவது போலாகும்.

iv. நாவிற்கிதமானவற்றை கட்டுப்படுத்தல் :—

இரசனேந்திரியத்தை அடக்கியாளும் வரைக்கும் பிரமசரியத்தை ஆதரிப்பது மிகவும் கடினமானதொரு காரியமென்பது அநுபவத்தில் கண்டறிந்ததோர் விஷயம். இக்காரணத்தைக்கொண்டு நாவிற்கிதமானவற்றைக் கட்டுப்படுத்தலே ஒரு தனி நியமம் என்று வைக்கப்பட்டிருக்கிறது. சரீரத்தைப் பராமரிப்பதற்கும், அதை சேவைக்கேற்றதோர் கருவியாகப் பாதுகாப்பதற்கு மட்டுமே சாப்பிடுவது அவசியமானது. தன் சீராட்டிற்காக அதை ஒருக்காலும் பயிற்சிக்கக் கூடாது. மருந்தைப்போல், ஆகாரத்தையும் ஏற்ற கட்டுப்பாடுகட்குட்பட்டுச் சாப்பிடவேண்டியது. இந்த நியமத்தைக் கைக்கொள்ளுகையில் வாசனைச்சரக்குகள், மசாலைச்சரக்குகள் போன்ற கிளர்ச்சி உண்டாக்கக்கூடிய ஆகாரவகைகள் யாவற்றையும் தவிர்க்கவேண்டும். மாமிசம், மது, புகையிலை, பங்கி முதலியவை ஆசிரமத்தினின்றும் விலக்கப்பட்டுள்ளன. இந்த நியமப்படி இலௌஹிகவின்ப நோக்கமாகக்கொண்ட விருந்தாடுதல்களும், டம்பமான போஜனங்களும் விலக்கப்படவேணடும்.

v. களவு செய்யாமை :—

மற்றவனது சொத்தை அவனது உத்திரவின்றி எடுக்கக் கூடாதென்பது மட்டும் போதாது. ஒருவிதமாக உபயோ

கிக்கப்படும்படி தனது பொறுப்பில் விடப்பட்டிருக்கும் ஒன்றை, தப்பிதமான வழியில் உபயோகிப்பதினாலும், தன்னிடம் ஒரு குறித்த காலத்திற்கு மட்டும் கடனாக கொடுக்கப்பட்டிருக்குமொன்றை அதைவிட அதிககாலம் உபயோகிப்பதனாலுங்கூட ஒருவன் 'களவு' எனும் குற்றத்திற்கு ஆளாகின்றான். தனக்கு வாஸ்தவத்தில் அவசியமில்லாததொன்றை ஒருவன் பெற்றுக்கொள்ளும்போது அதுவும் களவாகின்றது. இந்த விதிக்கு அடிப்படையாகவிருக்கும் நுண்மையான உண்மையென்னவெனில் இயற்கையானது நமக்கு அன்றாடக அவசியங்களுக்குப் போதுமான அளவு கொடுக்கின்றது. அதற்குமேல் ஒன்றுங்கொடுப்பதில்லை.

vi. உடைமையின்மை அல்லது வறுமை :—

சரியாக வகுக்கப்போனால் இந்த நியமம் 5-ம் நியமத்தின் ஒரு பாகமேயாகும். தனக்கு உண்மையில் அவசியமில்லாததொன்றை ஒருவன் எப்படி பெற்றுக்கொள்ளக் கூடாதோ அதேபோல் அவன் அந்தப்பொருளைத் தன்னிடத்துரியவனாயு மிருக்கக்கூடாது. அவசியத்திற் கதிகமான போஜனபதார்த்தங்களையும், ஆடைகளையும், தட்டுமுட்டுகளையும் கொண்டிருத்தல் இந்த நியமத்தைப்பங்கப்படுத்துவதாகும். உதாரணமாக நாற்காலி ஒன்று இல்லாமல் ஒருவனுக்கு காரியமாகுமாயின் அவன் அதை வைத்திருக்கக் கூடாது. இந்த நியமத்தைக் கைக்கொள்ளுவதினால் ஒருவனது சொந்த ஜீவியம் வரவர எளிமையில் தேர்ச்சி பெறுகின்றது.

vii. சரீர உழைப்பு :—

ஒருவன் தனது சரீரப் பிரகாரமான ஜீவனை சரீரஉழைப்பினுல் பராமரித்துக்கொண்டால்தான் அவன் ஜனசமூகத்திற்கும் தனக்கும் தானே இன்னல் விளைவித்துக்கொள்வதிலிருந்து காப்பாற்றப்படமுடியும். பருவமான பலசாலிகள் தங்களுக்கான வேலைகளைத்தாங்களே செய்துகொள்ளவேண்டும். தகுந்த முகாந்திரங்களில்லாமல் வேறு எவரும் அவர்களுக்குச் சேவை செய்யக்கூடாது. ஆயின், அதேசமயத்தில், தகுந்த பெலன்கொண்ட ஒவ்வொருவனும், பாலகர்க்கும், தளர்ச்சியுற்ருேர்க்கும், முதியோர்க்கும், பிணியாளிகட்கும் சேவை செய்வது, தன்மீது விழுந்த கடன் என்பதை மறந்துவிடுதல்கூடாது.

viii. சுதேசி :—

மனிதன் சர்வ வல்லவன் அல்ல. இதனுல், அவன் முதலில் தனது அயலகத்தானை சேவிப்பதனுலேயே, உலகத்தைத் தன்னுலியன்றவரை சேவிக்கிருன். இதுதான் சுதேசி. தனதருகிலுள்ளவனுக்கு மேலாக தூரத்திலுள்ள ஒருவனைச் சேவிக்கிறேன் என்று ஒருவன் சொல்லும்போது இந்த விதியை அவன் மீறுகிருன். சுதேசியைக் கைக்கொள்ளுவதால் உலகில் ஒழுங்கும், அதை மீறுவதால் ஒழுங்கின்மையும் ஏற்படுகின்றது. ஒருவன் இந்த நியமத்தைப் பின்பற்றுகையில் தன் சொந்த தேசத்திலேயே இலகுவாய் செய்துகொள்ளக்கூடிய தனக்கு அவசியமான வஸ்துக்களை

அங்கேயே வாங்கவேண்டும். இப்படி தன்சொந்த இடத்தில் செய்யப்படத்தக்கவைகள் அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியானல் அதை வாங்கக்கூடாது. ஒருவன் தன்னைத் தனது குடும்பத்திற்கும், குடும்பத்தைக் கிராமத்திற்கும், கிராமத்தை நாட்டிற்கும், நாட்டை மனுஷீகத்திற்கும் தத்தஞ்செய்ய "சுதேசி" என்ற நியமம் கட்டளையிடுவதால் அதில் சுயநலத்திற்கு இடமேயில்லை.

ix. தீரம் :—(பயமின்மை)

ஒருவன் அச்சத்திற்குட்பட்டிருக்கும் வரை, சத்தியத்தையோ, அன்பையோ கைக்கொள்ளமுடியாது. தற்காலத்தில் நம்தேசத்தை பயம் ஆளுகை செய்வதால், தீரத்தைப் பற்றிய சிந்தனையும், அதன் அபிவிர்த்தியும் தனித்த விசேஷமுடைத்தாயிருக்கின்றன. ஆதலால் இதுவும் ஒரு தனி ஆசரிப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. சத்தியத்தைத் தேடுகின்ற ஒருவன், பெற்ரோர், சாதி, அரசாங்கம், கள்ளர் முதலியவற்றைப்பற்றிய அச்சத்தை விட்டுவிடவேண்டும். அப்பொழுது வறுமையும் மாணமும் அவனை பயமுறுத்த முடியாது.

x. தீண்டாமையை ஒழித்தல் :—

இந்து மார்க்கத்தில் ஆழமாக வேரூன்றிநிற்கும் தீண்டாமை முற்றிலும் சமய அநுசரணையில்லாமலிருக்கிறது. இதனலேயே அதை அகற்றுதல் ஒரு தனித்த நியமமாக பாவிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரமத்திலே தீண்டப்படத்

தகாதார் என்று சொல்லப்படுகிறவர்கட்கு மற்ற வகுப்பாருடன் சமத்துவமான இடமுண்டு. ஆசிரமத்திற்குச் சாதியில் நம்பிக்கையில்லை. சாதியென்பது இந்துமார்கத்திற்குக் கேடுவிளைவித்திருக்கின்றதென்று ஆசிரமம் கருதுகிறது. ஏனெனில் சாதியினுல் ஜனசமூக வாழ்க்கையில் உயர்ந்த நிலைமை தாழ்ந்த நிலைமையென்று ஏற்படும் நிபந்தனைகளும், தொடுவதினுல் வரும் தீட்டும், அன்பின் பிரமாணத்திற்கு மாருகவிருக்கின்றன. என்ருலும், வருணச்சிரமதர்மத்தில் ஆசிரமத்திற்கு நம்பிக்கையுண்டு. தொழிலை அடிப்படையாகக் கொண்டு வருணங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதனுல் ஒருவன் மூலாதாரமான சன்மார்க்க நெறிகட்கிசைந்து பரம்பரையாய்த் தனக்குப் பாத்தியப்பட்ட தொழிலைச் செய்துத் தன்னைப் பராமரித்துக்கொள்ளவேண்டும். மீந்த நேரத்தையும் சக்தியையும் மெய்யறிவை யடைவதற்காகவும் விர்த்தி செய்வதற்காகவும் ஒப்படைக்கவேண்டும். சிமிருதிகளில் சொல்லப்பட்ட "ஆசிரமங்கள்" (வாழ்க்கையின் நான்கு நிலைமைகள்) மானிட வர்க்கத்தின் நன்மைக்கேதுவாயிருக்கின்றன. ஆசிரமத்திற்கு வருணசிரம தருமத்தில் நம்பிக்கையுண்டாயினும், பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கிற சர்வமுமடங்கியதும், வெளியாசாரமில்லாததுமான சந்நியாசத்தின் பிரகாரமாய் ஆசிரம வாழ்க்கையைக் கருதும் பொழுது ஆங்கு வருண பேதம் பாராட்டுவதற்கிடமில்லை.

xi சமய சமத்துவம்.

இவ்வுலகத்திலுள்ள முக்கியமான மதங்கள் யாவும் சத்தியத்தை வெளிப்படுத்துவதைப் பிரதானமாகக் கொண்

டிருக்கின்றனவென்பது ஆசிரமக்கொள்கை; ஆனால் அவைகள் யாவும் அபூரணமான மனிதனால் குறிக்கப்பட்டிருக்கிறதால், அபூரணங்களினால் குறைவுற்றதாயும், அசத்தியத்தோடு கலப்புற்றதாயுமிருக்கின்றன. ஆகையால் ஒருவன் தனது சொந்த மதத்திற்கு என்ன மதிப்புக் கொடுக்கிறானோ, அதே மதிப்பை மற்ற மதங்களுக்கும் கொடுக்கவேண்டும். இந்தப் போங்கு, எங்கு ஜீவிய பிரமாணமாகின்றதோ, அங்கு பற்பல சமயங்களுக்கிடையிலுள்ள சச்சரவுகளும், தமது சொந்த சமயத்திற்கு மற்றவர்களை மாற்றச் செய்யும் முயற்சிகளும் கூடாதகாரியங்களாகி விடுகின்றன. எல்லாவித மதங்களிலுமுள்ள குறைகள் நிவிர்த்தியாகவும், அவைகள் யாவும் ஒன்றாய் பூரணத்துவத்தை நோக்கி ஓங்கி வளரும்படியாகவும் மாத்திரம் ஒருவன் விண்ணப்பஞ் செய்யலாம்.*

---

*தொகைக்கென்று ஆள் சேர்ப்பது தவறே. உள்ளான ஆத்மீக மாறுதலில்லாமல் வெறும் வெளிப்பூச்சான "சமயமாற்றுதல்" வீணே. எனினும், கடவுளின் சொரூபியாக திரு அவதாரமெடுத்து, பூமிக்கு வந்து, தெய்வராஜ்யத்தை பூமியில் நாட்ட தமது உயிரைத் தியாகம் செய்த இயேசுக்கிறிஸ்துவின் அன்பை ருசித்தவனும், அவர் மரித்து உயிரோடு எழும்பினதால் வரும் உயிர்த்தெழுதலின் நிச்சய நம்பிக்கையை உடையவனுமான ஒரு கிறிஸ்துவின் சீஷன், இந்த அநுபவத்தை மற்றவர்களும் அடைய வேண்டுமென்று விரும்பி விண்ணப்பஞ் செய்யாமலிருப்பது எப்படி முடியும்! இப்படி அவன் மற்றவர்களை இயேசுக்கிறிஸ்துவின் அன்பிற்கு கவருவதும் "அன்பின் பிரமாணந்தானே!".

(ச. வ.)

## வேலைகள்.

இந்த ஆசரிப்புகளை அனுஷ்டிப்பதற்காகவும், இந்த ஆசரிப்புகளினின்றும் உதித்தனவாயிருக்கின்றதாலும், பின்னால் சொல்லப்பட்ட கர்மானுஷ்டானங்கள் ஆசிரமத்தில் நடைபெற்று வருகின்றன:—

### 1. வணக்கம்.

யாவரும் ஒன்று கூடி செய்யும் வேலைகள், (தனித்துச் செய்யும் வேலைகளுமுண்டு), காலை $4\frac{1}{4}$விலிருந்து $4\frac{3}{4}$ மணி மட்டும் சபைகூடிக் கடவுள் வணக்கத்தோடு தொடங்கி, மாலை 7விருந்து $7\frac{1}{2}$ வரையிருக்கும் மாலை வணக்கத்தோடு முற்று பெறுகிறது. ஆசிரம வாசிகள் யாவரும் இந்த ஜெபங்களுக்கு வரும்படியாய் எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஒருவன் தன்னையே புனிதமாக்கவும், தன்னை கடவுளுக்கென்று ஒப்புக்கொடுக்கவும் இந்த வணக்கம் ஏதுவாயிருக்கிறதென்று ஆசிரமம் கருதுகிறது.

### 2. சுகாதார சேவை.

இது மிகவும் முக்கியமும் புண்ணியமுமான சேவை; என்றாலும் இது ஜனசமூகத்தால் அவமதிக்கப்படுவதால், பொதுவாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; அநேக சீர்திருத்தங்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு இதில் விரிவான இடமுண்டு. இதனாலே, இந்த வேலையை வெளியிலிருந்து ஆள் நியமித்துச் செய்யக்கூடாதென்று ஆசிரமம் முக்கிய


மாக அழுத்திச் சொல்லுகின்றது. இந்த சுகாதாரங்களை அங்கத்தினர் தாமே முறைப்படி செய்து வருகின்றனர். புதிதாக வரும் அங்கத்தினர்கள் பொதுவாக முதலில் இந்தப்பகுதி வேலைக்கு ஏற்படுத்தப்படுவார்கள். 9 அங்குல ஆழத்தில் பள்ளம் வெட்டி அதனுள் (மலபாதை) அசுசிகளை யெல்லாம் போட்டுத் தோண்டியெடுக்கப்பட்ட மண்ணு லேயே மூடிவிடுகிறுர்கள். இப்படியாக அது சிறந்த உர மாகின்றது. குறிக்கப்பட்ட இடங்களில் மட்டும் ஜலமலாதி கழிக்கவேண்டும். பாட்டைகளையெல்லாம் எச்சில் துப்பி யாவது மற்ற எந்த விதத்திலாவது அசுத்தம் செய்யாதபடி கவனிக்கப்பட்டு வருகிறது.

### 3. தியாக நூல்நூற்றல்.

இந்தியாவிற்கு முக்கிய உபகரணமாயிருக்கும் கைத் தொழிலாகிய நூல்நூற்றல், முக்கியமாக அந்நிய அரசாட்சி யினுல் வேண்டுமென்று நிர்மூலமாக்கப்படுவதனுல், லக்ஷக் கணக்கான இந்திய மக்களின் பசியும் பட்டினியும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. இதுவே தற் காலத்தில் மிக அவசர காரியமாகக் கவனிக்கப்படவேண்டிய தோர் பெரிய காரியம். இக்கைத்தொழிலை தேசீய வாழ்க் கையோடு ஒன்றுய்ப் பொறுத்திவைக்கும் பொருட்டே நூல் நூற்றல் ஆசிரமத்தின் பிரதான அனுஷ்டானமாயிருக்கிறது. தேசத்தியாகமென்று எல்லா அங்கத்தினர்க்கும் கட்டாயமாக இவ்வேலை உரியது. கீழ்ச்சொல்லப்படுபவைகள் இந்தப் பகுதியிலுள்ள பல கிளைத் தொழில்கள் :—



பூனவிலிருக்கும் கிறிஸ்து சேவசங்க ஆசிரமத் தொண்டர்.



பூனாவிலிருக்கும் கிறிஸ்த சேவசங்க ஆசிரமத்தில் தொண்டர்கள் வசிக்குமிடம்.
எதிரே தெரிவது தொண்டர்கள் நீந்தி குளிக்கும் தண்ணீர் தொட்டி.

(i) பருத்தி பயிர்செய்வது.

(ii) இராட்டினம், சுழற்றி, வில் முதலியவை செய்வதற்கும் சீர்ப்படுத்துவதற்கும் தொழிற்சாலை.

(iii) பஞ்சடித்தல்.

(iv) பஞ்சைச் சிறுகட்டாகக் கட்டல்.

(v) நூற்றல்.

(vi) துணி, சமுக்காளம், நாடா, கயிறு முதலியவை நெய்தல்.

(vii) சாயமேற்றுதலும், அச்சடிப்பும்.

4. விவசாயம்.

இந்தப்பகுதியில் கதர்த்தொழிலுக்குவேண்டிய பருத்தியும், ஆடுமாடுகளுக்குவேண்டியதழையும்பயிரிடுதலே முக்கிய வேலைகள். கூடியவரை ஆசிரமம் தனக்காக வேண்டிய பொருட்களை தன்னிடத்திலிருந்தே அடைந்துகொள்ளும்படியாக காய்கனிவகைகளும் பயிராக்கப்படுகின்றன.

5. பாற்சாலை.

ஆசிரமவாசிகளுக்குப் பால்தரும் ஆசிரமப்பாற்சாலையை நல்ல ஒரு (முன்) மாதிரி பாற்சாலை யாக்கவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது. இந்தப்பாற்சாலை ஆசிரமத்தோடேயே சேர்ந்த ஒரு பகுதியாயிருப்பினும், 1927-ம் ஆண்டிலிருந்து அகில இந்திய பசுசேவை சங்கத்து நியமங்களுக்கிசைந்து, அதன் பண உதவியைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.

## 6. தோற் பதனிடுஞ் சாலை.

அகில இந்திய பசுசேவை சங்க தூண்டுதலாலும் உதவியாலும் செத்துப்போன ஆடுமாடுகளின் தோலைப்பதனிடும் பொருட்டு, தோல் பதனிடுஞ் சாலையொன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. செருப்புகளும், சப்பாத்துகளும் தைக்கும் பகுதியும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்துக்கள் பசுவைப் பாதுகாக்கக் கடமைப் பட்டிருக்கிறவர்களாக தங்களைப் பாராட்டினாலும், ஆடுமாடுகளை விர்த்தியாக்குவதிலும் போஷிப்பதிலும், செத்துப்போனவற்றின் தோலையும் மற்ற பாகங்களையும் தேசத்தில் உபயோகப்படுத்துவதிலும், குன்றா ஊக்கஞ் செலுத்தாவிட்டால், இந்திய கால்நடையினமே வரவரச் சீர்கெட்டுப்போய்க் கடைசியில் மனிதனையுங் கூட இழுத்துக்கொண்டு நிர்மூலமாக்கப்பட்டுப் போகும் என்று ஆசிரமம் உறுதியாய் எண்ணுவதால், இந்தப்பாற்சாலையும் தோல் பதனிடும் சாலையும் நிறுவப்பட்டிருக்கின்றன.

## 7. தேசியக் கல்வி.

தேசிய நன்மைக்கேதுவாயிருக்கும் வித்தையைப் புகட்ட வேண்டுமென்று ஆசிரமத்தில் ஒரு முயற்சி யெடுக்கப்பட்டு வருகிறது. ஆத்மீக, மன, சரீர வளர்ச்சியாவும் ஒன்றாய் வளர்ந்தோங்கும்படியாக, கைத்தொழில் வாடை ஆசிரமம் எங்கும் வீசும்படியாகச் செய்திருக்கின்றது. எழுத்தறிவிற்கு கொடுக்கப்படவேண்டிய மதிப்பிற்குமேல் ஒன்றும் அதிகமாய்க் கொடுக்கப்படவில்லை. குணாபிவிர்த்தி

மிகவும் நுட்பமாகக் கவனிக்கப்படுகின்றது. "தீண்டாச் சாதி"யைச் சார்ந்த சிறுவர் தாராளமாக ஏற்றுக்கொள்ளப் படுகிறார்கள். பெண்களது நிலைமையை முன்னுக்குக் கொண்டுவரும்படியாக, அவர்கள் விஷயத்தில் விசேஷித்த கவனம் செலுத்தப்படுகின்றது. தத்தம் மனோ விர்த்தியைத் தாங்களே அபிவிர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு, ஆண்களைப்போல அவர்களுக்கும் உசித சமயங்கள் கொடுக்கப் படுகின்றன. பின்னால் சொல்லப்படுகிற கூர்ஜ்ஜா "வித்தியாபித்" (கல்லூரி)யினுடைய பிரமாணங்களை ஆசிரமம் ஏற்றுக்கொள்ளுகின்றது.

(1) சுய ராஜ்யம் அடையும் பொருட்டு கொண்டுவரப் படும் இயக்கங்களை நடத்துவதற்கு வேண்டிய குணமும், திறமையும், கல்வியும், நல் மனசாக்ஷியும் ஒருங்கே படைத்த ஊழியர்களை ஆயத்தஞ் செய்தனுப்புவதே, "வித்தியாபித்" கல்லூரியினது பிரதான நோக்கம்.

(2) "வித்தியாபித்" கல்லூரியினால் நடத்தப்பட்டும், அதனுடன் இணைக்கப்பட்டுமிருக்கிற எல்லா நிலையங்களும் துரைத்தனத்துடன் முற்றிலும் ஒத்துழையாததினால், அதனின்றும் யாதொரு உதவியும் பெற்றுக்கொள்வதில்லை.

(3) சுயராஜ்ய இயக்கத்துடனும், அந்த இயக்கத்திற்கு வழியாகவுள்ள பலாத்காரமில்லாத ஒத்துழையாமையுடனும் சம்பந்தப்பட்டு இந்த "வித்தியாபித்" நிறுவப்பட்டதா தலால், அதிலுள்ள உபாத்திமார்களும், பொறுப்பாளிகளும்

சத்தியத்திற்கும், பலாத்காரமின்மைக்கும் இசைந்திருக்கும் வழிகளை மட்டுமே கைக்கொண்டு, நல்மனசாக்ஷியுடன் அவைகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

(4) வித்தியாபித்திலேயும், அதனுடன் சம்பந்தப்பட்டுள்ள எல்லா நிலையங்களிலேயுமுள்ள உபாத்திமார்களும், காரியகர்த்தாக்களும் 'தீண்டாமை' என்பது இந்து மார்க்கத்தின் மீதுள்ள ஒரு மாசு என்று கருதி, தங்களாலியன்ற மட்டும் அதை நீக்கப் பிரயாசப்படவேண்டும். ஒரு சிறுவனையாவது சிறுமியையாவது அவர்களுடைய 'தீண்டாமை' காரணம் பற்றி விலக்கவாவது, ஒரு தடவை உட்பிரவேசிக்க அவர்களுக்கு அநுமதி கொடுத்தபின் வித்தியாசமான உபசரணை கொடுக்கவாவது கூடாது.

(5) வித்தியாபித்திலும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள எல்லா ஸ்தாபனங்களிலும் உள்ள எல்லா உபாத்திமார்களும், பொறுப்பாளிகளும் கையினல் நூல் நூற்றலை சுயராஜ்ய இயக்கத்தின் பிரதான பகுதியாகக் கருதவேண்டும். இதனுல், தளர்ச்சியடைந்த சமயங்களைத் தவிர மற்ற எல்லாப் பொழுதும் ஒழுங்காக நூல் நூற்று, வழக்கமாகக் கதர் தரிக்கவேண்டும்.

(6) அந்தந்த மாகாணத்தின் பாஷைக்கே வித்தியாபித்தில் பிரதமஸ்தானம் கொடுக்கப்படவேண்டும். அந்த பாஷையின் மூலமாகவே மற்ற எல்லாக் கல்விபோதனையும் நடத்தப்படவேண்டும்.

விளக்கம் :—குஜராத்தியல்லாத மற்ற பாஷைகளைத் தனித்தனியாக வேண்டுமானால் படித்துக்கொடுக்கலாம்.

(7) பாட அட்டவணையிலே ஹிந்தி—ஹிந்துஸ்தானி கட்டாயப்படிப்பாயிருக்கவேண்டும்.

(8) கைத்தொழில் மூளையறிவைப்போல் பிரதானமாக மதிக்கப்படவேண்டும். நம் சுயதேசத்தின் வாழ்க்கைக்கு பிரயோஜனமான தொழில்களையே படித்துக்கொடுக்க வேண்டும்.

(9) தேசிக முன்னேற்றம் நகரவாசிகளையல்ல, கிராமத்தினரையே சார்ந்ததால் வித்தியாபித்திற் பணமும் உபாத்திமாரும் விசேஷமாக கிராமத்தினருக்கு நன்மையாயிருக்கும் கல்வியையே பரவச்செய்ய உபயோகிக்கப்படவேண்டும்.

(10) வித்தியாபித் கல்வியெல்லாம் கிராமத்தினர் நன்மையைக் கருதியே பிரதானமாக ஒழுங்கு செய்யப்படவேண்டும்.

(11) வித்தியாபித் நடத்துகிற அல்லது அதோடு இணைக்கப்பட்ட எல்லா நிலையங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரதானமான எல்லா மார்க்கங்களையும் தயாள சிந்தையோடு பார்க்கவேண்டும். சத்தியத்தையும், அஹிம்சையையும் அநுசரித்து பக்திக்கடுத்தபோதனைகள் கற்பிக்கவேண்டும்.

(12) வித்தியாபித் சம்பந்தமான எல்லா நிலையங்களிலும் தேசத்தினர் சரீர அபிவிர்த்திக்காக தேகாப்பியாசமும், தேக பயிற்சியும் கட்டாயமிருக்கவேண்டும்.

## 3. கிறிஸ்து சேவசங்க ஆசிரமம்.

மகாராஷ்ட்ராவிலிருக்கும் ஆமத் நகரில் உள்ள இங்கிலாந்து சபை மிஷனில் வின்ஸலோ என்னும் பெரியார் மிஷனெரியாக வேலைசெய்த நாட்களில், மிஷனெரிகளைப் போல் பிழைத்து கிறிஸ்துபெருமானுக்குச் செய்யும் பணி இந்தியாவில் சரிப்படாதென்று தனக்குத்தோன்றியபடியால், இந்தியர்களைப்போல் தன் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள விரும்பினர். அன்றியும் இந்தியர்களோடு அளவளாவிப்பழகவும், இந்தியமுறையில் கிறிஸ்துபெருமானை ஆராதிக்கவும், இந்தியாவிலுள்ள புறமதங்களில் ஏதாவது நன்மையான முறைகள் இருக்கக்கூடுமானல் அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும் வாஞ்சித்தார்.

எனவே இதற்கு ஆசிரம வாழ்க்கையே தக்கதென எண்ணி 1922ஆ ஆமத் நகர் ஜில்லாவிலுள்ள மிரியென்ற கிராமத்தில் ஒரு சிறு ஆசிரமத்தைத் தொடங்கினர். இதில் இந்திய சகோதரர்களும் கூடித்தொண்டாற்றினர். சிலகாலம் சென்றபின் இந்த ஆசிரமத்தைப் பூனவில் நிறுவுவது நல்லதென்று கண்டு பூன விவசாய கலாசாலைக்குப்பக்கமாக ஒரு இடத்தைத் தெரிந்துகொண்டு அங்கே 1927-ம் ஆண்டில் கிறிஸ்து சேவசங்க ஆசிரமத்தை நிறுவினர். இதற்கு வின்ஸலோ ஐயர் என்னும் இப்பெரியாரே ஆசாரியராயிருக்கிறார். இந்தியரும் ஆங்கிலரும் நிற வேற்றுமையின்றி வாழ வேண்டுமென்பது இதன் முக்கிய நோக்கங்களிலொன்று.

இங்கே ஆண்களும் பெண்களும் அங்கங்களாயிருக்கின்றனர். ஒரே மனப்பான்மையோடு ஜெபிப்பதும் தொண்டுபுரிவதும் இவர்கள் முக்கிய நோக்கம். ஒரு நாளில் பெரும்பான்மையான நேரத்தை ஜெபத்திலும் தியானத்திலும் செலவிடுகின்றனர். இங்கே ஆயுள் முழுவதையும் செலவிட விரும்பிச்சேரும் ஆயுட்கால அங்கத்தினர்கள் பிரமசாரிகளாக இருக்கவேண்டும். ஆண்கள், பெண்கள், அபிமானிகள் என மூன்று தரங்களாக இந்த ஆசிரமத்தினருளர். இவற்றுள் அபிமானிகளென்ற மூன்றாந் தரத்தினர் ஆசிரமத்துக்கு வெளியே தூரமான இடத்திலும் வசிப்பார்கள். இவர்களெங்கிருந்தாலும் ஆசிரமத்தின் அபிமான அங்கங்களாயிருப்பர். இவர்கள் இல்லறவாசிகளாயிருக்கலாம்.

மேனாட்டு மதச் சடங்குகள் கலைகள் முதலியவைகளைக் கீழ்நாட்டில் திணிப்பது இவர்களுக்குப் பிரியமில்லை. கிறிஸ்து மார்க்கம் தேசிய காரியங்களில் நன்மையானவற்றை அழித்தொழிக்காமல் அவற்றைமேலான முறையில் வளர்த்துத் தூய்மைப் படுத்தும் வன்மையுள்ளதென்பதை விளக்கப் படுத்துகின்றனர். மக்களுக்குள் சரியான மன மாறுதலுண்டாகவேண்டுமென்பதே இவர்கள் வாஞ்சை. வெளித் தோற்றத்திற்காகத்திருச்சபைத்தொகையைக்கூட்ட வேண்டுமென்ற பேராசை இவர்களில் இல்லை. நம்பெருமானாகிய கிறிஸ்து இயேசுவை இந்தியாவுக்குச் சொந்தமாக்கவேண்டுமென்பதே இவர்கள் கருத்து. எனவே கிறிஸ்துபெருமானே வழியும், சத்தியமும், ஜீவனும், பொக்கிஷமுமாயிருக்கிறாரென்று இவ்வாசிரமம் மேன்மை பாராட்டுகிறது.

இந்தியாவில் வாழும் மக்களுடைய இன்ப துன்பங்களெல்லாவற்றிலும் தங்களுக்கு உரிமையுண்டென்பதை வெளிப்படுத்தும்படி இவ்வாசிரமவாசிகளனைவரும் கதர்தான் உடுத்துகிறார்கள். புலாலும் மீனும் நீக்கி இந்தியர்கள் உண்ணும் சாதாரண உணவை இந்தியர்களைப்போல் கீழே உட்கார்ந்து சாப்பிடுகின்றனர். காலையில் சிற்றுண்டிகொள்ளும்போது ஒருவரும் பேசுகிறதில்லை.

காலை 6-மணிக்கு விடியற்கால சந்தியா ஆராதனை. பின்பு 7-மணிக்கு நாள்தோறும் திருவிருந்து ஆராதனை இருக்கும். அதுமுடிந்து சிற்றுண்டி. 9-மணிக்கு மறுபடியும் ஜெபக்கூட்டம். இதுமட்டும் யாவரும் மவுன தியானத்தில் இருப்பார்கள். நடுப் பகலுணவுக்குப்பின் 3-மணிக்கு ஒரு ஜெபக் கூட்டம். இது முடிந்ததும் தேநீர் பருகல். 6-மணிக்கு சந்தியா ஆராதனை. இரவு சாப்பாட்டுக்கு மேல் 9-மணிக்குப் படுக்கை. பிற்பகல் 4-மணியிலிருந்து 6-மணி மட்டும் பிரியமானவர்கள் வெளியே சென்று நண்பர்களைக்கண்டு பேசிவருவர். இடைக்கிடையே ஆங்காங்கு பிரசங்கங்கள் நடைபெறும். இந்த ஆசிரமத்தின் முன்பக்கத்தில் ஒருவாசகசாலையிருக்கிறது. இதிலும் அடிக்கடி பிரசங்கங்கள் நடைபெறும். மாதந்தோறும் வெளிவரும் ஆங்கிலப்பத்திரிகையொன்று நடத்துகின்றனர்.

பெண்கள் தங்கிச் சேவைசெய்யும்படி பூனாவிலிருந்து 5 மைல் தூரத்தில் அவுண்டு என்ற இடத்தில் ஒரு கிளை ஆசிரமம் தொடங்கியிருக்கிறார்கள். இங்கே பயிர்த்தொழிலும்

நெசவும் நடக்கிறது. மருந்து கொடுக்குமிடமொன்று உண்டு. தற்சமயம் இந்த இடத்தில் இல்லறவாசியான ஒரு குருவானவர் தங்கி இவைகளைக் கண் காணித்து வருகிறார்.

இந்த ஆசிரமம் பம்பாயிலிருக்கும் இங்கிலாந்து சபை அத்தியக்ஷருடைய ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. என்றாலும் தன்னுரிமையைக் காத்துக்கொள்ளும் நிலைமையுண்டு. எனவே இந்தியராகிய தோர்ணக்கல் அசரியா அத்தியக்ஷர் தான் இதன் பரிபாலனகர்த்தா. இந்த ஆசிரம சொத்தில் ஆசிரமம் ஒன்றுக்கே உரிமையுண்டு. மற்ற எந்த ஆயுட்கால அங்கத்துக்குங்கூட தனி உரிமை கிடையாது.

தெய்வ ஆராதனை முறைமையில் மலையாளத்திலுள்ள சீரிய கிறிஸ்தவசபை ஜெப ஒழுங்குகளைக் கையாடுகிறார்கள்.

# 4. கிறிஸ்து குல ஆசிரமம்.

இன்னும் பல ஆசிரமங்கள் இந்தியாவிலிருக்கின்றன. எல்லாவற்றையும் இங்கு எழுதிற் பெருகுமெனவெண்ணி விடுகின்றனன். ஆனால் இப்புத்தகத்தைப் படிப்போர் இதன் பிறப்பிடமாகிய கிறிஸ்து குல ஆசிரமத்தைப் பற்றி அறிய விருப்பங்கொள்வது இயல்பாதலின் இந்த ஆசிரமத்தைப் பற்றிமாத்திரம் எழுதி முடிக்கிறேன்.

ஆசிரமங்கள் உண்டாவதற்கு கடவுளின் ஆவியும் அருளும் காரணமாயிருக்கிறதென்பது வெளிப்படை. கடவுள் தம் வேலையை இவ்வுலகத்திற் செய்வதற்கு மக்களையே தெரிந்துகொண்டு நடத்துகின்றனர். எனவே இந்த ஆசிரமத்தைப்பற்றிக் கூறும்போது இதை நிறுவக் கடவுளின் கைக்கருவியா யிருந்தவர்களைப்பற்றியும் கூறியாகவேண்டும். ஆனால் ஒருவன் தன் வாழ்க்கையின் இரு கூறாகிய அகத்தையும் புறத்தையும் விளக்கியுரைப்பது கடினமான காரியம். அதிலும் தன் அந்தரங்க வாழ்க்கையில் கடவுள் தனக்குச் செய்தவற்றை வெளிப்படையாகக் கூறுவதோ மிகமிகக் கடினமான காரியம். இதனால் ஒருவன் தன் ஆத்துமீக அனுபவத்தைச் சொல்லும்பொழுது நடுக்கத்துடன் சொல்ல வேண்டியவனாகிறான். மேலும் தன் வாழ்க்கை நடைமுறையில் நன்மையானவைகளை வெளியிட்டு தீமையானவைகளை மறைக்குஞ் சோதனைக்குட்படவும் நேரிடும். என் பாட்டனாரின் கடைசி காலத்தில் என் தகப்பனார் அவருடைய



ஏசுதாசனும் பேற்றனும்.



கிறிஸ்துகுல ஆசிரமத்தை பார்க்கவந்த சிலவிருந்தினரோடு
தொண்டர்கள் வெளியே தென்னைமரங்களடியில்
சிற்றுண்டி அருந்துதல்.

வாழ்க்கை நடைமுறையை எழுதித் தரும்படி கேட்டபோது, அவர், "என் கடந்தகால வாழ்க்கையின் தன்மையுணர்ந்து நான் என் ஜீவியத்தை எழுதினால், நல்லதுமாத்திரமல்ல, தீயதும் எழுதவேண்டும்; ஆனபடியால் அது என்னால் முடியாது" என்று சொல்லிவிட்டாராம். எத்தனை கடினமானதெனினும் இந்த ஆசிரமத்தைப் பொறுத்தமட்டில் சகோதரன் பேற்றன் ஜீவியத்திலிருந்தும் எனதிலிருந்தும் கொஞ்சமாவது கூறவேண்டும். இல்லையானால் அது பொய்யாகும்.

ஆகையால் கடவுள் எனக்குச் செய்த நன்மைகளைக் கூறும்போது கூறவேண்டிய அளவு கடந்து போக நேரிட்டால் அது உண்மையின் நிமித்தமும் ஆண்டவரருளிய கிருபையின் நிமித்தமும் கூறும் சாட்சியமாகும்.

நான் கொஞ்சங்குறைய 250 வருஷக் கிறிஸ்தவர்களின் வழியிற்றோன்றினவன். என்றாலும் என் சிறு பருவத்தில் முரட்டுத்தனமும் குறும்பும் உள்ளவனாயிருந்தேன். கடவுள் பக்தியில் எண்ணமிருந்ததில்லை. என் கெட்ட குணத்தால் என் பெற்றோர் மனம் நோகச் செய்ததுண்டு. இவன் பயன் படுவானென்று மற்றவர்கள் அற்பமும் எதிர்பாராத ஒருவனையே கடவுள் தன் திருப்பணிக்குத் தெரிந்து கொள்ளுகிறாரென்கிற உண்மை விளங்கும்படி 1896ஆ ஜூன்மீ 24உ எனக்கு வயது 13 போலிருந்தபோது ஆண்டவருடைய கை என்னைப் பிடித்தது. தற்காலத்தில் எட்டாவது வகுப்பு என்று வழங்கப்படும் 3-வது பாரத்தில் பாளையங் கோட்டை மிஷன் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்

தேன். இரவில் கண்ட கனவினால் என் வாழ்க்கை மாறத் தொடங்கினது. இந்த மாறுதலை முதல் முதலாகக் கண்டு பிடித்து இதற்குக் காரணமென்னவென்றறியக் கேட்டவன் என்னோடு படித்த ஒரு மாணவன்தான். இவன் என்னிலும் பெரியவனும் மிகவும் பரியாசக்காரனுமாய் இருந்தபடியால் என் மாறுதலைப் பற்றிச் சொல்லப் பயந்தேன். என்னை விடாப்பிடியாகக் கேட்டபடியால், இறுதியாக, நடந்த காரியத்தை மறைக்காமற் சொன்னேன். இதைக் கேட்டபோது நான் எதிர்பாராத விதமாய் என்னை உற்சாகப்படுத்திப் பலப் படுத்தினான். நான் மனமாறியபின் இந்தப் பையன்தான் என்னை முதலாவதாக ஆசீர்வதித்தான். இச்சம்பவம் எனக்குள் பெருவியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டியது. ஒருவன் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் அவன் வினைவறிந்தபின் மறுபடியும் பிறந்ததாகவேண்டியதின் இன்றியமையாமையை என் வாழ்க்கையில் அனுபவ சாட்சியாய்க் கண்டிருக்கிறேன்.

1897-ம் ஞூ அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு பிரசங்கி வைத்த எழுப்புதலான கூட்டத்தால் பெரிய ஆசீர்வாதம் அடைந்தேன். இந்தக்காலத்தில் என் மனச்சாட்சி மிகவும் கூர்மையாயிருந்தது. ஓய்வு நாளை அளவு கடந்து முக்கியப் படுத்துவேன். அந்த நாளில் உலக சம்பந்தமான ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டேன். பள்ளிக்கூட வழக்கப்படி கேள்விக்குக் கொடுக்கும் விடைகளை எழுதி மாணவர்களை மாற்றிக்கொண்டு திருத்தும்போது நான் உண்மையானபடி

செய்வதோடு, என்னுடைய விடைகளைத் திருத்துபவரும் நியாயமாகச் செய்யும்படி மற்றவர்களையும் வற்புறுத்துவேன். இதனால் மாணவனாயிருந்தபோது உடன் மாணவர்களோடு மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறேன். என் பெற்றோரும் மற்றவர்களும் நான் போதகனாவேனென்று எண்ணங்கொண்டனர்.

1900-ம் ஆண்டில் நான் மெட்ரிகலேஷன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது தென் ஆபிரிக்காவில் ஆங்கிலேயருக்கும் போயருக்கும் கடினமான சண்டை நடந்தது. இதைப்பற்றியறிய பத்திரிகைகளை அக்கறையோடு படிப்பேன். இவ்விருதிறத்தாரும் கிறிஸ்தவர்களாயிருந்தும் ஒருவரையொருவர் தாக்கிக் கொன்று நாட்டைப்பறிப்பது பெரும்பாதகமென்றுணர்ந்தேன். நாளுக்கு நாள் என்னுள்ளம் தேசீய விஷயத்தில் திரும்பி தேசசேவை செய்ய வேண்டுமென்ற பற்று மேலிட்டது. இதையும், எம்பெருமான் மக்களுக்குச் செய்த நன்மைகளையும் எண்ணிப்பார்த்த போது நான் ஒரு வைத்தியனாவது நல்லது என்று கண்டு எப். ஏ. வகுப்பில் சரீரதத்துவ சாஸ்திரத்தையே இஷ்ட பாடமாகத் தெரிந்துகொண்டு படித்தேன்.

1902-ம் வருஷம் திருநெல்வேலி மிஷன் கல்லூரியில் படிக்கையில் எனக்கு ஓர் பெரிய மனக்குழப்பம் வந்து கலங்கினேன். எதை எடுத்தாலும் சந்தேகம் உண்டாகிற நிலைமைக்கு வந்தேன். கிறிஸ்து என்று கூட ஒருவர் இருந்தாரோ, வேதம் உண்மைதானோ என்பன போன்ற பயங்கரமான மலைவு வினாக்கள் என் உள்ளத்தேயெழும்பி என்னை

மிகவும் வருந்தச் செய்தன. இப்படியிருக்கும் போது அந்த வருஷம் மே மாதம் விடுமுறைக்குப் போயிருக்கையில், மணப்பாடு என்னும் இடத்தில் கடற்கரையிலுள்ள தீபஸ்தம்பத்திற்குப் பக்கத்திலே, பொழுது சாய்ந்து இருண்டுவரும் நேரத்தில் உட்கார்ந்துகொண்டு, என் நிர்ப்பந்தமான நிலைமையை எண்ணி, மனக்கசப்போடு ஒன்றுந் தோன்றாத வனாய்த்திகைத்துக் கலங்கும்போது, கிறிஸ்துபெருமான் தன் சீடர்களுடன் என்முன் எழுந்தருளிய காட்சி தோன்றிற்று. அவர்கள் மத்தியில் நானும் நிற்கிறதுபோலக்கண்டேன். ஆண்டவர் என்னை நோக்கி "நீயும் என்னை விட்டுப்போய் விடுவாயோ?" என்று கேட்கிறதையும் கேட்டேன். உடனே என்னுள்ளம் பரவசமாகி, "ஆண்டவரே யாரிடம் போவேன்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடம் உண்டே!" என்று விடையளித்தது. (பரி. யோ. 6—68). கொந்தளித்துக்கொண்டிருந்த சந்தேக சாகரத்திலிருந்து ஆண்டவன் அருளால் அந்நேரமே கரையேறினேன்.

1903ஆ மேமீ திசையன்விளை என்னும் ஊருக்குப் போயிருந்தேன். அங்கே ஓர் வயதுமுதிர்ந்தவர் சாராயக் கடை வைத்துக்கொண்டிருந்தார். என்றாலும் வேத வாசிப்பிலும் பரிசுத்தவான்களின் சரித்திரங்களைப் படிப்பதிலும் அதிக ஆர்வமுள்ளவராகவிருந்தார். அசிசி ஊர் பிரான்சிஸ் என்ற பரிசுத்தவானது சரித்திரத்தை இவர் எனக்கு வாசிக்கக்கொடுத்தார். இதைவாசித்தவுடனே என் உள்ளமெல்லாம் துறவு வாழ்க்கையையே பற்றிக்கொண்டது. துறவியாக

வேண்டுமென்ற பேர் அவா எழும்பிற்று. இப்படியிருக்கும் போது மேலேகூறிய அமெரிக்காதேச போதகர் மறுபடியும் ஒருமுறை பாளையங்கோட்டை வந்து கூட்டம் நடத்தினர். அன்பினல் நெருக்கி ஏவப்பட்ட நம்பெருமான்கூட 30 வயது மட்டும் பெற்ரேருக்கு அடங்கி நடந்ததைப்பற்றித் தெளிவாய்ப்பேசினர். இதைக்கேட்டபோது காலம் வருமளவும் நானும் என் பெற்ரேருக்குக் கீழ்ப்படிந்து படிப்பை முடிக்கவேண்டியதவசியமென்று உணர்ந்து துறவியாதலைச் சற்றுகாலம் தள்ளிவைக்க வேண்டுமென்றுணர்ந்தேன்.

1904ஆ எப். ஏ. பரீக்ஷை தேறியபின் வைத்திய சாஸ்திரம் பயிலும்படி சென்னைக்குப் புறப்பட்டேன். எனக்குள் இந்த எண்ணம் வந்ததைக்குறித்து என்னைப் போதகர் வேலைக்கு அனுப்ப யோசித்திருந்த என் தகப்பனர் மிகவும் வியப்படைந்தார். "நீ வைத்தியனுவது நல்லதுதான். ஆனல் மக்களுக்கு இரக்க சிந்தையுடன் நன்மைசெய்கிறவனுகவே இருக்கவேண்டும்" என்று புத்தி சொன்னர். நான் சென்னைக்குப் புறப்படுமுன் தனியே என் அறைக்கு வந்து, 40 சங்கீதத்தை வாசிக்கச்சொல்லி, தன் உடல் அதிர வல்லமையாக ஜெபித்தார். இவ்வாறு ஆசீர்வாதத்துடன் சென்னைக்கு வந்துசேர்ந்தேன். 1904ஆ மேமீ 9உ என் தகப்பனர் நான் திரும்பி வீடு சேருமுன் மரித்துப்போனர்.

வைத்தியப்படிப்பை முடிக்க ஸ்காட்லண்டு தேசத்திற்கு போய்ப் பட்டம் பெற்றுக்கொண்டபின் 1911ஆ இலங்கையில் சர்க்கார் உத்தியோகத்திலமர்ந்தேன். எந்த உத்தியோ

கத்திலிருந்தாலும் என் உள்ளம் இந்தியாவுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற வாஞ்சையுடனேயிருந்தது. நான் செய்யவேண்டிய சில கடமைகளைச் செய்து முடிக்குமட்டும் பொறுமையோடு காத்திருக்கவேண்டியதாயிற்று. இச்சமயத்தில் கலியாணஞ் செய்துகொள்ளும்படி இனத்தார் வலியுறுத்தினர். என்னை அதிகமாய் நேசித்து என்மேல் அபிமானங்கொண்ட என் தாயாரோ இவ்விஷயத்தில் என் மனப்போக்குக்கே விட்டுவிட்ட படியால் எனக்கு மிக உதவியாயிருந்தார்கள். 1914ௗு பெப்ருவரிமீ 9உ என் தாயாரும் ஆண்டவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தார்கள். என் ஜீவிய நோக்கம் நிறைவேற்ற ஓர் உண்மையுள்ள நண்பன் அவசியமென்று உணர்ந்தேன். நான் எங்கேபோனாலும் ஒரு உண்மையான உயிர்த்தோழனைக் கண்டுபிடிக்குமட்டும் என் உள்ளம் ஆறுதலடையாது. எனவே கடவுள் எனக்கொரு நண்பனைத் தருவாரென்று நம்பிக் காத்திருந்தேன். அன்றியும் இந்த நாட்களில் சகோதர ஐக்கிய கூட்டமொன்று நிறுவ வாஞ்சித்துப் பலதேச நண்பர்களுக்கும் எழுதினேன். இது நல்லதென்று சிலர் உணர்ந்தும் செயலிற் கொண்டுவர முடியாதென்று கைநெகிழவிட்டனர். 1914ௗு ஆகஸ்டுமீ ஐரோப்பா பேர் யுத்தமும் தொடங்கினது.

ரண வைத்தியத்துறையிற் கைதேர்ந்தவனாக வேண்டும் என்ற வாஞ்சையிருந்தபடியால் 1914ௗு நவம்பர்மீ மறுபடியும் இங்கிலாந்துக்கு போனேன். அங்கே ஒரு வேலையும் கிடைத்தது. லண்டனிலுள்ள எண்டல் தெருவில் வசிக்கும்

ஏழைமக்களிடையே வைத்தியனாகவும் போதகனாகவும் வேலை செய்துகொண்டு ரண வைத்தியமும் பயின்று வந்தேன். என் பிறவிக் குணத்தின்படியே இங்கும் ஒரு தோழனைக் கண்டடைய ஆவலாய் இருந்தேன்.

லண்டனிலுள்ள கிறிஸ்தவ வாலிப சங்க காரியதரிசியின் அழைப்புக்கிணங்கி 1915ஆ ஜனவரிமீ 8உ மாணவர் விடுதியொன்றுக்கு விருந்துண்ணப் போயிருந்தேன். இங்கே ஒரு மாணவனைச் சந்தித்தேன். இவரது கபடற்ற முகப் பொலிவும் சிநேக சுபாவமும் என் உள்ளத்தைக் கவர்ந்தது. இந்த உத்தம வாலிபனின் நட்பு நாளுக்குநாள் உரங்கொண்டது. யுத்தம் தப்பிதமென்ற கொள்கையில் இருவரும் ஒருமனப்பட்டவர்களாகயிருந்தோம். நிறவேற்றுமையை இவர் அற்பமும் எண்ணுகிறதில்லை. மக்கள்மேல் அதிக அன்பு உள்ளவர். இன்று ஆண்டவருடைய தொண்டில் ஆருயிர்த் தோழனாக என்னுடன் உழைத்துவரும் சகோதரன் பேற்றன் இவர்தான்.

சகோதரன் பேற்றனுடைய பெற்றோர் நல்ல பக்தர்கள். தங்களுக்குக் கடவுள் தந்தவைகளை அவருடைய தொண்டுக்குச் செலவிடத்துரிதமாக முன்வரும் மனப்பான்மையுள்ளவர்கள். சகோதரர் எர்ணஸ்டு பேற்றன்தான் இவர்களுக்கு கடைசி மகன். இவரை மிகவும் அருமையாக வளர்த்தது மன்றி சிறுவயதிலேயே கடவுள் பக்தியையும் ஊட்டி வளர்த்தனர். என்றாலும், இவர் கேம்பிரிட்ஜ் உயர்தர நிவாச பாட

சாலையில் படித்துக்கொண்டிருந்தபோதுதான் கடவுளின் திருப்பணியாகிய சுவிசேஷ ஊழியத்துக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தார். இவர் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கும் போது லண்டனிலிருந்து வந்த ஓர் பக்தன் கேம்பிரிட்ஜில் கூட்டம் வைத்துப் பிரசங்கம் செய்தார். இந்த பக்தன் முன்னே குடிவெறியினால் கெட்டிருந்தவர். ஆனால் தன் ஜீவியம் மாறி கடவுளுக்கு தம்மை ஒப்புக்கொடுத்து கிறிஸ்து வின் உத்தம பிரசங்கியாக விளங்கினார். இவர் கேம்பிரிட்ஜி யில் செய்த பிரசங்கங்கள் சகோதரன் பேற்றன் தன் ஜீவி யத்தில் ஓர் புது தரிசனமடையவும், கிறிஸ்துவின் ஊழியத் திற்கு தன்னை முழுவதும் ஒப்புவிக்கவும் ஓர் பெரிய உபகாரண மாயிருந்தது. எனவே இவருக்கு யந்திர சாஸ்திரப் பயிற்சியில் இயல்பாகவே தேட்டமிருந்தும் அதைவிட்டுவிட்டு சுவிசேஷ தொண்டுக்குதவியான வைத்திய வேலையைக் கற்றார்.

செல்வம் நிறைந்த வீட்டிற் பிறந்து வளர்ந்தாலும் இவருக்கு அதில் விருப்பமிருந்ததில்லை. எப்பொழுதும் ஏழைகள் நடுவிலேயே வசித்து உதவிசெய்ய வாஞ்சையுள்ள வராயிருந்தார். இந்நாட்களில் கீழ் தேசங்களுள் ஒன்றில் வந்து சுவிசேஷத்தொண்டு செய்யவேண்டுமென்ற வாஞ்சை இவருள்ளத்தே இருந்தபடியால் சீனதேசத்துக்கு போகலா மென்று எண்ணியிருந்தார். ஆனால் வைத்திய படிப்பின் நிமித்தம் லண்டனுக்குவந்து இந்திய மாணவர்களோடு கலந்து பழகியபோது இவரதுஉள்ளத்தை இந்தியா கவர்ந்து கொண்டது.

இவர் லண்டனில் வைத்திய பயிற்சி பெற்று வந்த நாட்களில் ஒழிந்த நேரத்தில் அங்கே ஒரு மிஷனையடுத்து உதவி செய்து வந்தார். கீழ் நாட்டாரையும் மேல் நாட்டாரையும் ஒன்று சேர்த்து, நிறவேற்றுமையின்றி ஒத்துவாழும்படி செய்ய இங்கிலாந்திலிருந்த கிறிஸ்தவ மாணவர் சங்கம் நிறுவிய மாணவர் விடுதியொன்றில் பல தேயத்து மாணவரும் வசித்து வந்தனர். இங்கே சகோதரன் பேற்றனும் ஒரு அறை எடுத்துக்கொண்டு இந்திய மாணவரொருவருடன் வசித்துவந்தார். மேற்கூறியபடி இங்குதான் நான் அவரை முதல் சந்தித்தது.

எங்கள் நட்பு முதிர முதிர என் உள்ளான வாஞ்சையையும் வெளியிட்டேன். இப்படி அளவளாவிப்பழகி ஜெபித்து வந்தபடியால் "உம்மோடு கூடியுழைக்கக் கடவுள் என்னைத்தெரிந்துகொண்டிருக்கலாம்", என்று மார்ச்சுமாதம் 21-ம் தேதி சகோதரன் பேற்றன் என்னிடம் சொன்னார். இதைப்பற்றி அடிக்கடி கலந்து பேசி ஆராய்ந்து ஜெபித்து வந்தோம். இச்சமயத்தில் என்னோடு வேலை செய்த பெரிய டாக்டர் யுத்தத்தில் உதவி செய்வதற்கென்று வேலையை விட்டுப் போய்விட்டார். நான் தனிமையாய் எல்லாவற்றையும் நடத்துவது அளவுக்கு மிஞ்சினதாகவேயிருந்தது. மிஷன் காரியதரிசி, யாராவது ஒரு மாணவன் வந்து உமக்கு உதவிசெய்யக் கூடுமானால் இங்கே ஒருவரை ஏற்றுக் கொள்ளுவோமென்று என்னிடம் சொன்னார்கள். இதை சகோதரன் பேற்றனுக்கு அறிவித்தபோது, உள்ளக்களிப்

போடு ஒப்புக்கொண்டு என்னுடன் தங்கி படித்துக் கொண்டும், ஒழிந்த நேரத்தில் உதவி புரிந்தும் வந்தார். இந்தக் கூட்டுறவினால் எங்கள் நட்பும் ஆவிக்குரிய தன்மையும் வளர்ந்து வலுவடைந்தது. இவ்வாறு நாங்களிருவரும் 1915ஆ அக்டோபர்மீ வரை ஒன்றாயிருந்து வேலை செய்துக்கொண்டும் படித்துக்கொண்டும் வந்தோம். இந்த நாட்கள் என் வாழ்நாட்களிலே மிக முக்கியமான நாட்கள். பல காரியங்களைக் கலந்து யோசித்துத் தெளிவடைந்தோம். எங்கள் கூட்டுறவில் நிறவேற்றுமை தலைகாட்டாதிருக்க வேண்டுமென்றும், மேல்நாடு கீழ்நாடு என்ற உயர்வு தாழ்வாகிய வேறுபாட்டுணர்ச்சியின்றி இரண்டறக் கலந்து போகவேண்டுமென்றும், என்னுடைமை உன்னுடைமை என்ற தனியுரிமையின்றி அப்போஸ்தலர் நாட்களிலிருந்ததுபோல் எல்லா உடமைகளும் பொது உடமையாயிருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தோம். சகோதரன் பேற்றன் வைத்திய பரீக்ஷையும் முடிந்தது.

நாங்கள் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி இந்தியாவிற்றொண்டுசெய்ய வாஞ்சித்து 1916ஆ இந்தியாவுக்கு வந்துசேர்ந்தோம். பூனாவிலிருந்த ஸ்காட்சு மிஷனில் ஒரு வைத்தியசாலையில் வேலை செய்தோம். இந்த நாட்களில், மேல் நாட்டு மிஷனெரிகளோடு ஒத்துழைப்பது எவ்வளவு கடினமான காரியமென்பதைக் கண்டு பிடித்தோம். மேல் நாட்டு மிஷனெரிகளிடையிலுங்கூட நிற வேற்றுமைப் பயித்தியம் நிறைந்து கிடப்பதைத் தெள்ளத்தெளிய அறிந்தோம்.



1927-ம் வருஷம் கிறிஸ்துகுல ஆசிரமத்திலிருந்த தொண்டர்.



1927-ம் வருஷம் கிறிஸ்துகுல ஆசிரமத்திலிருந்த
தொண்டர்கள் படம் இன்னொன்று.

அங்கே எங்களுக்கு இன்னும் ஒரு காரியமும் தெளிவாயிற்று. ஒரு மிஷன் வைத்தியசாலையிலே வைத்தியர், உதவி உத்தியோகஸ்தர், மருந்து கொடுக்கிறவர், வியாதியஸ்தர் பக்கத்திலிருந்து எப்போதும் பாடு பார்க்கும் தாதி சகோதரிகள், வேலைக்காரர், கீழ்வேலை செய்யும் தோட்டி முதலியவர் எல்லோரும் ஏகோபித்து ஒரே ஆவியோடு அன்புடன் வேலை செய்தாலன்றி வைத்தியசாலை வேலை சரியானபடி பிரயோஜனமில்லை யென்பதே. பெருக்கும் வேலையோ, சமைக்கும் வேலையோ, வைத்திய சிகிச்சைக்கடுத்த வேலையோ, எல்லாவற்றையும் கடவுளின் வேலையாகவே பாவித்துச் சகோதர ஐக்கியமாக ஒன்றுகூடி செய்யவேண்டும். அப்படியில்லையானால் வைத்தியர் செய்யும் எல்லா நல்வேலையும் கீழ்வேலை செய்பவர் வியாதியஸ்தருக்குச் செய்யுங் கொடுமையால் நாசமாகும். மேலான வேலைகளைச் செய்து கடவுளின் அன்பைக் காட்டுவதைப் பார்க்கிலும் "அற்பம், இழிவு" எனக் கருதப்படுகிற வேலைகளைச் செய்தும் கடவுளின் அன்பை மானிடர் தெளிவாய்க் காணச்செய்யலாம் என்பதை உணர்ந்தோம்.

புறதேச மிஷன் சம்பந்தமாக ஐரோப்பியரும், இந்தியரும் சமநிலையாக வேலைசெய்வதிற்கிருக்கும் பல இடையூறுகளும் எங்களுக்கு தெளிவாயிற்று. நாங்கள் மறுபடியும் இங்கிலாந்துக்குப் போய் முன்பு முடிக்க தவறிய பரீக்ஷைகளை முடித்துக்கொண்டு 1920ஆ நவம்பர்மீ இந்தியாவுக்கு திரும்பினேம். இ ந் தி யா வி ல் பல இடங்களையும் சுற்றி

தொண்டுக்கு ஏற்ற இடம் எந்த இடமென்று ஜெப சிந்தையோடு ஆராய்ந்து பார்த்தோம். இதில் பாரத கிறிஸ்தவ சேவக சமாஜம் என்ற என். எம். எஸ். சங்கத்தார் மிக உதவியாயிருந்தார்கள். வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் பல இடங்களைப்பார்த்தும் இறுதியாக வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூரே எங்கள் தொண்டுக்கு ஏற்ற இடமென்று ஆண்டவருளால் கண்டு தெளிந்தோம். இந்தியாவில் வளஞ்செறிந்த எத்தனையோ இடங்களிருக்க இந்த வறண்ட பாகத்தை இவர்கள் தெரிந்துகொண்டதென்ன என்று சிலர் எண்ணக்கூடும். ஆனால் இருண்டதும் வறண்டதுமான இடத்துக்கே வெளிச்சமும் தண்ணீரும் அவசியம். இத்தகைய தொண்டுக்கு ஏற்ற இடம் தென் இந்தியாதானென்று வட இந்திய கிறிஸ்தவ பெரியார்களும் எங்களுக்குரைத்தனர். ஏனெனில் வட இந்தியாவில் தொண்டர்கள் இவ்வித ஆசிரம வாழ்க்கைக்கு தயாராயில்லையென்பதே அவர்கள் கருத்து. மேலும் என் தாய்மொழி தமிழ் மொழியானபடியால் தமிழ்நாடே தக்கதென்று கண்டோம். 1921ஹு மார்ச்சுமீ 7உ திருப்பத்தூரில் ஓர் வாடகை வீட்டில் தங்கி வேலை தொடங்கினோம்.

எங்கள் நோக்கம் முழுவதும் ஏழைக் கிராமவாசிகள் மேலேயே இருந்தபடியால் திருப்பத்தூருக்கு மேற்கே இரண்டு மைல் தூரத்தில் நிலம் வாங்கி ஆசிரமத்தை 1922ஹு நிறுவினோம். இது மேடான இடம். சுற்றிலும் சுந்தரமலைக் காட்சி. இது நடுவில்தான் "கிறிஸ்து குல

ஆசிரமம்" இருக்கிறது. நம் பெருமானுகிய கிறிஸ்துஇயேசு வின் குடும்பமாக ஆதிசீஷர்போல் பரஸ்பர அன்பில் நாங்கள் நிலைத்திருக்கவேண்டிய அவசியத்தைக் குறிப்பிடும்படி இப் பெயர் கொடுத்தோம். இதனுல் மக்களுடைய வாழ்க்கையில் ஒரு நல்ல மாறுதல் உண்டாகவும், கடவுளின் ராஜ்யம் பூமியில் பரவவும் வேண்டுமென்பதே எங்கள் வாஞ்சை. உள்ளான ஆத்மீக மாறுதலில்லாமல் வெளி வேஷமான வெறும் மதமாறுதலை மாத்திரம் நாங்கள் விரும்புகிறதில்லை. உண்மையான மனமாறுதலடைந்து, நம்பெருமானின் சிலுவையெடுத்து, அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் உத்தம பக்தர்கள் பாரததேசத்துக்கு அவசியம். எனவே ஆண்டவருடைய நாமத்தில் நாங்களியற்றிவரும் தொண்டும் இந்த நோக்கத்திற்கிசையவே நடைபெற்று வருகிறது.

நாங்களிருவரும் வைத்தியர்களாயிருந்தபடியால் ஏழைக் கிராமவாசிகளுக்கு வைத்திய உதவி செய்யத் தொடங்கினேம். வைத்தியசாலையும் ஒன்று கட்டி முடித்தோம். இதிலும் சத்திரத்திலுமாக 42 நோயாளிகள் போல் தங்கி சிகிட்சை பெறுவதற்குப் போதுமான இடமிருக்கிறது. தற்காலத்துக்கு அவசியமான "எக்ஸ்ரே" என்ற மின்சார ஒளிக்கருவி முதலிய உபகரணங்களுமுண்டு. நோயாளிகளுக்கு உதவி செய்ய வரும் இனத்தார் தங்குவதற்கும் சமைப்பதற்கும் ஒரு விசாலமான சுற்றுக்கட்டுச் சத்திரம் ஒன்று கட்டியிருக்கிறது. தொண்டர்களாகிய நாங்கள் தங்குவதற்கு அவசியமான சில கட்டடங்களும் கட்டப்பட்டிருக்

கின்றன. ஆண்டவர் தம்முடைய திருப்பணியை நடத்தி வரும் விதத்தை எண்ணுந்தோறும் என் உள்ளம் மகிழ்ந்து களி கூறுகிறது. ஆசிரமத்தைச் சுற்றிலுமுள்ள ஏழைப் பிள்ளைகள் கல்வி பயிலுவதற்குப் போதுமான கட்டட வசதியும் உண்டு. பெண் தொண்டர்கள் தங்குவதற் கென்று தனியாக ஒரு கட்டடமும் கட்டியிருக்கிறது. ஒரு ஜெப ஆலயம் ஆசிரமத்துக்கு அவசியமாயிருப்பதால் பண்டைய தென் இந்திய ஆலய சிற்ப முறைப்படி அமைய திருப்பணி நடைபெற்று முடிந்துவிட்டது. இது தங்கள் சொந்த ஆலயம்போலவே மண்டபம், மூலஸ்தானம், கோபுரங்கள், சுற்றி பூந்தோட்டமுள்ள பிரகாரம், திருமதில், முகத்துவார முதலியன அமைத்துள்ளதால், கிராம ஜனங்கள் ஏராளமாய்ப் பார்க்க வருவதுடன் தனியேவந்து பிரார்த்தனை செய்து போவாருமுண்டு.

சாசுவதமான தொண்டர்கள் குறைவாயிருக்க என் கட்டடங்களை வளர்த்துக்கொண்டு போகவேண்டுமென்று கேட்கலாம். ஆண்டவர்மேல் வைக்கும் நம்பிக்கையினாலேயே இது நடந்துவருகிறது. கொஞ்சம் குறைய கடந்த 12 ஆண்டுகளில் ஒரு குறைவாவது உண்டானதாக எனக்குத் தோன்றவில்லை. பணிசெய்வதற்கு வேண்டிய தொண்டர் களை ஆண்டவர் அனுப்பிக்கொண்டுதான் வருகிறார். இவ்வள வுக்கும் இங்கு வேலைசெய்து வருகிற ஒருவருக்கென்கிலும் சம்பளம் கிடையாது. ஆண்டவரது மாண்பை விவரிக்க வல்லவர்கள் யாவர்!

வைத்தியசாலையில் நடைபெறும் சேவையைப் பற்றிக் கூறும்போதும், மற்ற வேலைகளைப்பற்றிக் கூறும்போதும் இவையாவும் ஆண்டவரருளாலேயே நடைபெற்று வருகிறதென்று உணருகிறேன். எம்பெருமானை நம்பித்தொடங்கிய வைத்தியவேலைக்கு ஆளுதவியிலாவது பணவுதவியிலாவது எவ்வளவும் குறைவு பட்டதேயில்லை. கடவுளுடைய நடத்துதலை உணராதபடி சில சமயங்களில் எங்களையே பாரப்படுத்திக் கொண்டதுண்டு. ஆனால் எதிர் பாராதவிதமாய் தொண்டர்கள் வந்து கைகொடுத்து உதவிபுரிவார்கள். தற்சமயம் நான்கு தேறிய வைத்தியர்களும், ஐந்து பயிற்சித் தொண்டர்களும் வைத்திய சாலையில் இருந்து தொண்டு செய்து வருகிறோம். தோட்டிவேலைக்கு மாத்திரம் ஒரு ஆள் வைத்திருக்கிறோம். மற்ற எல்லாத் தொண்டும் எவ்விதவேற்றுமையுணர்வின்றி நாங்களேசெய்து வர முயலுகிறோம். நோயாளிகட்கு உதவிசெய்ய வருகிற அவர்கள் இனத்தாரும் சாதாரண வேலைகளில் மனமுவந்து எங்களுக்கு உதவி செய்வார்கள்.

நாங்கள் முக்கியமாய் ஏழை கிராமமக்களுக்கே தொண்டு செய்கிறோம். இதனால் செல்வவான்களைப் புறக்கணிக்கிறோமென்று அர்த்தமல்ல. கிராமங்களில் நிலபுலமுள்ளவர்கள் பலருண்டு. இவர்களும் எங்களிடம் வந்து வைத்திய உதவிபெற்றுச் செல்வர். இத்தகைய செல்வவந்தர்களிடம் எங்களுக்கு அவசியமான மருந்துகளில் சிலவற்றை வாங்கிக்கொண்டுவரும்படி சொல்லுவோம். அவர்

களே போய் மருந்துவாங்கிக்கொண்டுவந்து கொடுப்பார்கள். நோயாளிகள் சுகம்பெற்று வீட்டுக்குப் போகும்போது மன முவந்து உண்டியல் பெட்டியில் போடுவதையும், மற்றும் வஸ்துக்களையும் அன்புடன் பெற்றுக்கொள்வதுண்டு. முக்கியமாய் இந்த விஷயத்தில் ஏழைமக்கள் உதாரத்துவ மாயிருப்பது எமக்கு வியப்பே. நாங்களறியாத இடங் களிலிருந்தும் எதிர்பாராத விதமாய் உதவி கிடைப் பதுண்டு. எந்தவிதமான மிஷன் பண உதவி தொடர்பு முதலியன இந்த ஆசிரமத்துக்குக்கிடையாது. இதனுல் நாங்கள் கிறிஸ்தவ சபைகளுக்கு அந்நியமானவர்கள் என்பதல்ல. கிறிஸ்து இயேசு பெருமானுக்குள் யாவருக்கும் உற்ற உறவினராகும் பொருட்டே நடுநிலைமையில் சுயாதீன ராயிருக்கிறோம். எங்கள் சேவை ஏழைகளிடையே வரையறையின்றி நடைபெறவேண்டுமாகையால் சர்க்கார் தரக்கூடிய சகாய நிதியையும் நாங்கள் நாடுவதில்லை.

இதற்குக் "கிறிஸ்து குல ஆசிரமம்" என்ற பெயர் கொடுத்திருப்பதால் கிறிஸ்தவ தொண்டர்களேயன்றி வேறு தொண்டர்கள் வந்து வேலை செய்ய இடமன்றென்பது கருத்தல்ல. ஜாதி, மதம், நிறம் ஆகிய பேதமின்றி உழைக்கத் தகுதி பெற்ற எவரும் இதில் சேர்ந்து ஊழியம் செய்ய வர வேற்கிறோம். கடந்த ஆண்டுகளில் கிறிஸ்தவரல்லாத ஹிந்து தொண்டர்கள் பலர் வந்து உதவி புரிந்ததுண்டு.

தங்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து கொண்டே மருந்தை வாங்கிக்கொண்டுபோய் உபயோகிக்கிற வெளி

வியாதியஸ்தர், வாரத்தில், சாதாரணமாக திங்கள், வெள்ளி ஆகிய இருதினங்களில் வந்து வியாதிகளைக் காட்டி மருந்து வாங்கிக்கொண்டு போவார்கள். அல்லது தூரத்திலிருந்து வருபவர்கள் ஆசிரம சத்திரத்தில் தங்கிக்கொள்வார்கள். மோசமான வியாதிகளுக்கு இந்த வரம்பு இல்லை. எந்த நாளிலும் எந்த நேரத்திலும் வருவார்கள். செவ்வாய், புதன், வியாழன் முதலிய நாட்களில் ஆயுதவேலையும், தூர்வியாதிக்கு ஊசிமருந்து ஏற்றுதல் முதலிய தொண்டும் நடக்கும். வியாழனன்று பிற்பகல் குஷ்டவியாதிக்கு ஊசிமருந்தேற்றுதலும் நடக்கும். நல்ல பஜனையும், கடவுள் பக்தி சுகாதாரம் கிராம சீர்திருத்தம் முதலியவைகளைப் பற்றிய பேச்சும், வைத்தியசாலை முன்னிருக்கும் கல்மண்டபத்தில் நடக்கும். மக்களுக்குள்ளிருக்கும் நோயையும் அறிவீனத்தையும் நீக்க எங்களாலியன்ற முயற்சி செய்து வருகிறோம். குறிக்கப்பட்ட சிலநாட்களில் முறைப்படி ஓர் வைத்தியர் கிராமம் சென்று வியாதியஸ்தர்களைப் பார்த்து மருந்து கொடுத்துத் திரும்புவார். ஆசிரமத்திற்கு 5 மைல் தூரத்தில் மடவாளத்துக் கருகில் (மாடப்பள்ளியிலிருக்கும்) வச்சிரவேலு கவுண்டர் 60 செண்டு நிலம் எங்களுக்கு தானமாகக் கொடுத்திருக்கிறார். இதற்கு தொடர்ச்சியாகக்கூடகொஞ்சம் நிலமும் விலைக்கு வாங்கி ஒரு கிளைஆசிரமம் இங்கு தொடங்க யோசித்திருக்கிறோம். இதிலிருந்து ஜவாதி மலை போய் அங்கு வசிக்கும் ஏழை ஜனங்களுக்குள்ளும் வேலை செய்யலாமென்று நம்புகிறோம்.

மக்களுக்குள் கல்வியறிவு வளர்ச்சியடைகிறதற்குத் தக்க அளவே ஒரு நாட்டின் சீரும் சிறப்பும் முன்னேற்றமும் இருக்கும். எனவே இந்த ஆசிரமத்தைச் சுற்றிலுமுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் ஏழைப்பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்து எழுத்தறிவூட்டும்படி ஒரு பாடசாலையும் நிறுவி இருக்கிறோம். இதில் கொஞ்சங்குறைய 40 பிள்ளைகள் படிக்கிறார்கள். நான்கு ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு கல்வி கற்றுகொடுக்கிறார்கள். இவர்களில் இருவர் கலா சாலைப்படிப்பு முடித்து பட்டம் பெற்றவர்கள். இவ்விரு வரில் ஒருவர் பெண்தொண்டர். இங்கே பயிற்சி பெறுகிற ஏழைப் பிள்ளைகள் மிக ஏழைகளாதலால் அவர்களுக்கு மதியவேளையுணவு கொடுப்பது அவசியமென்று கண்டு எல்லாருக்கும் மத்தியான சாப்பாடு கொடுத்து வருகிறோம். பெண் குழந்தைகளும் படிக்கிறார்கள். தற்சமயத்தில் ஆதி திராவிடப்பிள்ளைகளும், "உயர் ஜாதி" பிள்ளைகளும் ஒன்றாய் இங்கு படிக்கிறார்கள்.

வெறும் எழுத்தறிவு மாத்திரம் மக்களுக்குப் பயன் தருவதில்லையென்பது இக்காலத்தில் எவருக்கும் தெளி வான காரியமே. ஆகவே இந்த ஏழைமக்களிடையில் சிற்சில கைத்தொழில்களை வளர்க்கவேண்டுமென்ற வாஞ்சையோடு நெசவுசாலையொன்று தொடங்கி நடைபெற்றுவருகிறது. எட்டு பையன்கள்போல் வாசக சாலையிலேயே தங்கி நெசவு பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் பாதி நேரம் படிப்பும் பாதி நேரம்தொழிலும்பயில்கின்றனர். சிலர் நன்றாகநெய்கிறார்கள்.



கிறிஸ்துகுல ஆசிரம பாடசாலை — உபாத்திமார்களும் பாட
சாலையிலேயே இராப்பகல் தங்கி எழுத்தறிவும், கைத்தொழிலும்
கற்கும் மாணவர்களும். மாலை வீட்டிற்கு போய்விடும்
பிள்ளைகள் படத்திலில்லை.



சர்க்காரம்மாளும் ஆசிரமம் வளர்க்கும் பையன்களும்.

தேசீய இயக்கத்தில் ஈடுபட்டு போலீசாரால் கால் ஒடிக்கப் பட்ட ஒரு தொண்டனை ஆண்டவர் வைத்திய சிகிச்சைக் காக இங்கு அனுப்பினூர். அவர் சுகமாகி இப்போது எங்க ளுடன் தங்கி பள்ளிக்கூடத்தில் நெசவு தொழில் படித்துக் கொடுக்கிறார். வேட்டிகள், மேல் வஸ்திரங்கள், சேலைகள், துப்பட்டிகள், சமுக்காளங்கள், கட்டில் நாடா முதலியவை களை நெய்து பழகுகிறார்கள். ஸ்காத்லந்து தேசத்திலிருந்து வந்திருக்கிற ஒரு சகோதரன் இரும்புவேலை, தச்சவேலை முதலிய சில்லரைத்தொழிலும் கற்றுகொடுக்கிறார். இதற் கென்று ஓர் சிறு கைத்தொழில் சாலைக் கட்டடமும் கட்டப் பட்டிருக்கிறது.

பயிர்த்தொழிலும் உண்டு. இந்தத்தொழிலில் கிராம வாசிகளுக்கு நாங்கள் மிஞ்சினவர்களல்ல. அதனால் அதிக மானபாகத்தை கிராம ஜனங்களுக்கு குற்றகைக்கு விட்டிருக் கிறோம். சாப்பாட்டுக்கு வேண்டிய நெல் முதலிய தானியம் கிடைக்கிறது. சில பால்மாடுகளும் இருக்கின்றன. எங்கள் போக்கு வரத்துக்கு மாட்டு வண்டிகள்தான் வைத்து உப யோகிக்கிறோம். இந்த வறண்ட மேட்டிலே எக்காலத் திலும் வற்றாத நல்ல தண்ணீருள்ள இரண்டு கிணறுகளையும் ஆண்டவர் கொடுத்திருக்கிறார். தண்ணீர் இறைக்க காற்றாடி யந்திரம் ஒரு கிணற்றில் நாட்டப்பட்டிருக்கிறது.

ஆண்டுதோறும் கோடைகால விடுமுறை நாட்களில் உயர்தர பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் படிக்கிற மாணவர்களை வரவழைத்து கிராம சீரமைப்புத் தொண்டுக்கு

பக்குவப்படுத்தி வருகிறோம். இதனல் உண்டாகும் பலன் அதிகமா யிராவிட்டாலும் மாணவர்களுக்கும் கிராமவாசிகளுக்கும் ஒருவித பற்று உண்டாகிறது. மாணவர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையில் கிராமவாசிகளுக்கு உதவி செய்கிறவர்களாகயிருக்க இது அவர்களைத் தூண்டுமென்பது எமது துணிபு. அன்றியும் பல பாகங்களிலிருந்து வரும் மாணவர்கள் ஒருவரையொருவர் அறியவும், தங்கள் வாழ்க்கையின் நோக்கத்தைக்கண்டுதெளியவும் வசதியுண்டாகிறது. ஐக்கியமும் அன்பும் வளருகிறது. எனவே தற்காலத்தில் உயர்தர கல்விபயிலும் மாணவர்களின் உள்ளத்தை ஏழைக் கிராமவாசிகள்மேல் திருப்பிவிடுவதற்கு இந்த கிராம சீரமைப்புப் பயிற்சித்தொண்டு ஏற்ற உதவியாயிருக்குமென்று நம்புகிறோம். கிராமவாசிகள் முன்னேற்றத்திற்காகத் தமிழில் கிராமமுன்னேற்றம், சுகாதாரவிதிகள், பக்திவிஷயம் முதலியவற்றை விவரித்து சிறு புத்தகங்களும் பிரசுரம் செய்கிறோம்.

ஆசிரமவாசிகளின் உணவும், உடையும் சாதாரணமானதென்றே சொல்லவேண்டும். ஆடம்பரமான உணவென்கிலும் உடையென்கிலும் இல்லை. நெடுங்காலம் ஆசிரமத்தில் தங்கியிருப்பவர்களுக்கு கதர்வேஷ்டி, அரைக்கை கமுசு முதலிய சாதாரண உடையும், மற்றும் அவசியமானவைகளையும் கொடுக்கப்படும். எல்லாரும் ஒரே பந்தியில் உட்கார்ந்து ஒரே சமயத்தில் ஒரு பெரிய குடும்பத்தினரைப் போல் சாப்பிடுவார்கள். இங்கே மாமிசம் புசிப்பதில்லை. இக்காலத்தில் ஜாதிமத பேதம் இன்றி அன்பு மிகுதி

யால் யாவரும் பந்தியில் சமமாயிருந்து சாப்பிடும் தன்மை நம்முடைய ஜனங்களுக்குள்ளும் வந்துவிட்டதென்பது எவரு மறிந்த விஷயம். சைவ உணவருந்தும் பெரியார் பலர் அடிக்கடி எங்களிடையே எழுந்தருளி எங்களோடு விருந்துண்பது சகஜம். எனவே ஒருவருக்கும் இடராயிராதபடி மாமிசம் புசிப்பதை நீக்கிவிட்டோம். சில பலவீனமான சகோதரர்கள் நிமித்தம் முட்டைமாத்திரம் உபயோகிப்பதுண்டு.

நாள்தோறும் அதிகாலை $4\frac{3}{4}$ மணிக்கு யாவரும் படுக்கை விட்டெழுவதற்குப் பெரியமணி யடிக்கப்படும். 15 நிமிஷம் கழித்து மறுபடியும் மணியடிக்க ஜெபாலயத்தில் காலை ஆராதனை நடைபெறும். ஆசிரம பாமாலையிலிருந்து கீர்த்தனைகள் பாடுதல், வேதவாசிப்பு, ஏகமவுனதியானம், ஜெபம் முதலியன கொஞ்சங்குறைய 20 நிமிஷம்போல் நடந்து முடியும். பிரசங்கம் கிடையாது. பின்பு காலை சந்தியா வேளை. $6\frac{3}{4}$ வரை அமைதி. தனி வேத வாசிப்பு, ஜெபம், தியானத்தில் செலவிடுவோம். அவசியமானவேலைகளை கூடியமட்டும் அமைதியாகச் செய்வோம். $6\frac{3}{4}$-க்கு மணியடிக்க 7 மணிக்கு ஒரு வகுப்பு நடக்கும். இதில் வேத வாசிப்பு, பக்தர் சரித்திரம், அல்லது பொது அறிவுவிர்த்திக்கேதுவான விஷயங்கள் முதலியன படிப்போம். இது முடிந்தவுடன் காலை உணவு அருந்துவோம். அந்தந்த நாளுக்கென்று ஆயத்தஞ்செய்து வைத்திருக்கும் உணவையருந்தியானவுடன் அவரவர்கள் தங்கள் தங்கள் தொண்டுக்குப் போவார்கள். இங்கு ஒருவரை யொருவர் அதிகார முறையில் நடத்தும் வழக்கத்தை கை

யாடாமல் எங்களெல்லோருக்கும் ஆண்டவர் ஒருவரே தலைவர் என்னும் உணர்ச்சியை உண்டுபண்ண முயலுகிறோம்.

12 மணிக்கு கதிரவன் உச்சிக்குவந்தவுடன், நீங்கள் செய்த தொண்டுகளை ஆண்டவர் ஆசீர்வதிக்கும்படி அவர் திருச் சந்நிதிமுன் கொண்டுவந்துவைத்து வேண்டிக்கொள் ளுங்கள் என்று சொல்லுவதுபோல் ஜெபத்துக்கென்று பெரியமணி அடிக்கப்படும். தொண்டர்கள் யாவரும் வேலையை நிறுத்தி அங்கங்கே குழுமி அல்லது தனியே அமைதியாக ஜெபிப்பார்கள். 15 நிமிஷம் ஆனவுடன் சிறு மணி அடித்தபின் மதியவேளையுணவு சாப்பிட போஜன சாலைக்குச் செல்லுவோம். யாவரும் சாப்பிட்டபின் 3 மணி மட்டும் அவரவர் பிரியம்போல் களைப்பாறுதலோ, கடிதம் எழுதுவது முதலியதிலோ செலவிடுவோம்.

3 மணியானவுடனே தேநீருந்த சிறுமணியோசை யழைக்கும். இதன்பின் அவரவர்கள் மறுபடியும் தொண் டிற் புகுவார்கள். மாலை சூரிய அஸ்தமன வேளையில் சந்தியா மணியடிக்கும். அரைமணி நேரம் அமைதி. அவரவர்கள் பிரியப்படி தியானத்திலும் ஜெபத்திலும் வெளியிடங்களில் ஆங்காங்கு தனியே தரித்திருப்பார்கள். இந்த சந்தியா வேளையின் அருமையை வருணிக்க இயலாது. ஆசிரமத்தைச் சுற்றியிருக்கும் மலைகளுக்குப்பின், ஜொலிக்கும் பல வருண வானமண்டல மகிமையோடு காலையில் உதயமாகும் சூரியன், மாலையிலும் மலைகள் பின்னவே சாயும். விசித்திர விநோத மாக மேகங்கள் சுருண்டு வருண மாறுவதும், மெல்லிய

ஒளிபரவியிருப்பதுமான இக்நேரம் மாறும்பூலோகவாழ்க்கை மத்தியில் மாறாத நித்திய கடவுளின் பிரசன்னத்தை உணர்த்தி மனச்சாந்தியுண்டுபண்ணும். இதன்பின் இரவு சாப்பாடு. போஜன வேளைகளில் ஆரம்பத்திலும் முடிவிலும் தேவாரம் பாடுவோம். சாப்பிட்டானவுடன் வைத்தியசாலை மண்டபத்தில் வியாதியஸ்தருக்காக ஜெபம், ஆராதனை நடக்கும். இரவு $8\frac{3}{4}$ மணிக்கு கடைசி குடும்ப ஜெபம் ஜெபாலயத்தில் நடக்கும். யாவரும் கூடிவந்து ஆண்டவர் சமுகத்தில் தரித்திருந்து குறிக்கப்பட்ட விஷயத்திற்காக மன்றாடி ஜெபித்தபின் அமைதியாக படுக்கைக்குச் செல்லுவோம்.

---

விக்டோரியா பிரஸ், திருப்பத்தூர்—33.

## திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரம பிரசுரங்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஆசிரம பாமாலை அநுபந்தங்களுடன் ... | 0–13–0 |
| கிராம வாழ்வு ... ... | 0–3–0 |
| கிறிஸ்துகுல ஆசிரமம் ... ... | 0–6–0 |
| கிராம சுகாதார நூல் ... ... | 0–2–0 |
| தெய்வ பக்தியும், தேச பக்தியும் ... ... | 0–1–6 |
| பக்தர் அநுபவம் ... ... | 0–4–0 |
| சிலுவையின் தாற்பரியம் ... ... | 0–2–0 |
| ஜெயலில் ஜெயசீலன் (மரியவியாகுலம் தாவீது அம்மாள்) ... | 0–6–0 |
| தெய்வ தற்சொரூபன் (ஜி. வி. யோபு M. A., L. T.) ... | 0–8–0 |
| இரக்ஷணிய சரிதம் (H. A. கிருஷ்ண பிள்ளை அவர்களியற்றிய மூலமும் P. S. கடம்பவன சுந்தர நாயனார் அவர்களியற்றிய உரையும்) ... | 0–8–0 |
| ஆசிரமங்களும் தற்கால வாழ்க்கையும் ... | 0–10–0 |
| Indigenous Expression of Christianity ... | 0–1–0 |
| Students and Villagers ... | 0–2–0 |
| Quest for Truth ... | 0–0–6 |
| Christukula Ashram ... | 0–6–0 |
| Jesus Christ and the Present Situation ... | 0–1–0 |